# காவேரி

சர்வஜித் - ஆவணி.




8/அணா

ஆகஸ்ட் 1947
684
72
ஆ211, N47.7.1
198085



OF THE ... OF ...
16 SEP
MADRAS

# உங்கள் குழந்தை

குழந்தைகளின் வளர்ச்சிக்கு நிம்மதியான தூக்கம் மிகவும்அவசியம். குழந்தை தூங்காமலும், அடிக்கடி அழுதுகொண்டும் இருந்தால் உடம்பில் ஏதோ கோளாறு இருக்கிறதென்றே அர்த்தம்.

குழந்தைக்கு காய்ச்சலோ, மலச்சிக்கலோ அல்லது ஏதாவது வலியோ இருக்கிறதென்று தெரிந்தால் உடனே 'க்ரைப் கால்' கொடுங்கள். உடனே கண்டிப்பாய் குணமாகிவிடும் குழந்தை சுகப்படும். நன்ருகத் தூங்கும். நீங்கள் பெருமகிழ்ச்சியடையும் முறையில் குழந்தையைக் காண்பீர்கள்.

எப்பொழுதும் க்ரைப்-கால் பாட்டல் ஒன்று கைவசம் வைத்துக்கொள்ளுங்கள். பல்முளைக்கும் சமயத்தில் மிகவும் அவசியம்.

Meclec

# க்ரைப்-கால்



எல்லா குழந்தைகளின் நோய்களுக்கும்

தி மெக்லெக் நியூட்ரிமென்ட்ஸ் அன் பார்மஸூடிகல்ஸ் லிட்.
99, எ, ஆர்மீனியன் தெரு, ஜி. டி. மதராஸ்










பெண்மணிகளின் பொன்விழியை எடுத்துக்காட்டக் கண்களுக்கு மை தீட்டிக்கொள்ளும் பழக்கம் பண்டைக் காலத்திலிருந்தே நம் நாட்டுப் பெண் மணிகளால் கையாளப்பட்டு வரும் சிறந்த பழக்கமாகும்.

வேணுகா கெமிகல்ஸ் அவர்களால் தற்போது இந்தக் கண் மை "ஐடச்" "Eye Touch" என்னும் பெயரால் பண்டைக்கால சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்டது. இதை ஸ்திரீகளும், குழந்தைகளும் முறை தவரு மல் தீட்டிக் கொள்வதால் அநேக வித கண் வியாதிகளைக் குணப்படுத்து கிறது. பெண்மணிகளின் அழகிற்கும் கண் குளிர்ச்சிக்கும் உகந்தது "ஐடச்"

இது நாகரீக ஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்கும் கவர்ச்சிகரமான அழகுக்கு ஏற்றது. "ஐடச்" கண் மை.

எல்லா ஷாப் கடைகளிலும் கிடைக்கும்

ஒரு ஐடச் விலை அணா 12.




ஏஜண்டுகள் தேவை:

வேணுகா கெமிகல்ஸ்

45, தயார் சாயபு தெரு 2-வது சந்து

மவுண்ட்ரோட் — சென்னை.




**உண்மையான நீம் ஆயில் சோப் இதுதான்**

சருமத்தைப் பாதுகாக்க அவசியமென்று நிபுணர்கள் கருதும் நீம் எண்ணெயினின்றும் தயாரிக்கப்படுவது **மார்கோ** ஒன்றுதான்.

தினசரி **மார்கோ** உபயோகித்து உங்கள் மேனியைப் பாதுகாருங்கள்.

# மார்கோ சோப்

டாய்லட் & மெடிஸினல்

**கல்கத்தா கெமிகல்**

CALCUTTA CHEMICAL

# BITA CAFFIN

## பிடாகாபின்

(தலைவலி மாத்திரைகள்)




தலைவலி, பல்வலி, கால்களிலும் மூட்டுகளிலும் வலி, சூதகத்தின் போதுள்ள வலி முதலிய சகல வலிகளையும் நீக்கும். தூக்கமின்மை, மலேரியாசுரம் இவைகளையும் கண்டிக்கும். இருதயத்துக்கோ, குடலுக்கோ எவ்வித தீங்கும் செய்யாது.

**எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்**

**மூன்று மாத்திரைகள் கொண்ட பாக்கெட் அணா 1**

# BITA LAX

## பிடாலாக்ஸ்

(இனிப்பான சாக்லெட் சுகபேதி)

இலேசாகவும், சுகமாகவும், மலச்சிக்கலை போக்க வல்ல குணமுள்ளது.

**எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்**




*Stockist:—*

**M/s DADHA & Co., P. T. Madras**

Manufactured by:—

**BOMBAY TABLET MANUFACTURING COMPANY,**

Post Box 2092, 176, Zaveri Bazaar, BOMBAY 2



சிறு குடிசையோ
அல்லது பெரிய
ஆலயமோ

குடிசை, அரண்மனை,
ஆலை ஏதானாலும் சரி
இவைகளின் நிர்மா
ணத்தில் எஃகு
இன்றியமையாதது.

★

**டாடா எஃகு**

**தி டாடா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்**
தலைமை சேல்ஸ் ஆபீஸ்: 102A, கிளைவ் தெரு, கல்கத்தா.

# இந்தியாவின் புகழ்




# லோத்ரா

**கர்பாசய ரோக நிவாரணி**

**கேஸரி குடீரம் லிட், மதராஸ்**

EASTERNS.394

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம்,
ஆந்திர ஜில்லாக்கள், தமிழ்
— நாட்டுக்கு —

ஏஜண்டுகள் :—

**சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்,**
பேர்ஹாம்பூர், செகந்திராபாத்,
பெஜவாடா, மதுரை.






மற்ற மருந்துகளால் குணம் பெற்ற முடியாதென அபிப்பிராயப்பட்ட பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் இவ்வபூர்வ மருந்தினால் காப்பாற்றப்பட்டிருக்கின்றனர்.

# ஹம்மிஸ் லிவர் க்யூர்

[illegible]

**லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்**
பெரியதெரு
கும்பகோணம்.

**LIVER CURE Branch Office**
Parekh Mansion
Sandhurst Road, (West)
BOMBAY 4.



குழந்தைப்பருவத்தில்

முக்கியமான சுகத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்




# WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

**Agent:—T. T. KRISHNAMACHARI & Co.**

12A Lingha Chetty Street G. T. MADRAS.




# பொருளடக்கம்

சர்வஜித்து — ஆவணி
மலர் 7 — இதழ் 1

சுதந்திரத்திற்குப் பின் — 16

கதம்பம் — 17

மன அமைதி — 18
"வேதஸ்ரீ"

இந்தியாவின் பாதுகாப்புப் படை — 25
டி. கே. வெங்கடராமன்

பொருளாதாரப் பிரச்னைகள் — 30
ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

அஹிம்ஸா தண்டனை — 33
எம். எஸ். கமலா

ஐயரின் குருகுலம் — 42
யோகி சுத்தானந்த பாரதியார்

இரத்தினங்கள் — 46
ஆர். கே. விசுவநாதன்

கனவும் கற்பனையும் — 52
ஆர். எஸ்.

இன்றைய இந்தியாவில் — 57
பண்டித ஜவாஹர்லால் நேரு

நடன கலா — 62
கே. சுந்தரம்மாள்

குறிப்பு :—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனை பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திராசிரியர் பொறுப்பாளியல்ல.

8085


# காவேரி

| சர்வஜித்து<br>மலர் 7 | "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச்<br>செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார் | ஆவணி<br>இதழ் 1 |
|---|---|---|


## சுதந்திரத்திற்குப் பின்

இந்தியா சுதந்திரமடைந்து விட்டது என்று நாடெங்கும் கொண்டாடினோம். ஆனால் இன்று பஞ்சாபில் நடக்கும் அட்டூழியங்களைக் கவனிக்குங்கால் இத்தகைய சுதந்திரம் வந்து என்ன பயன் என்று ஏக்கம் தோன்றுகிறது. லக்ஷக் கணக்கில் மக்கள் தங்கள் உற்றார் உறவினர்களை விட்டுவிட்டு உயிரைக் கையிற் பிடித்துக்கொண்டு ஓடி வந்து கொண்டிருக்கிறார்கள். நகரங்கள் கொளுத்தப்பட்டு மக்களும் தீக்கிரையாகின்றனர். ஆயிரக்கணக்கான ஜனங்கள் வாள் வீச்சினால் மடிந்து மறைகின்றனர். கூட்டுப் பாதுகாப்புப் படை இந்நிலைமையைச் சமாளிக்கச் சக்தியின்றி வாளாவிருக்கின்றது.

மக்கள் ரயிலில் ஏறி இந்தியாவந்து சேரலாம் என்றால் பாதி வழியில் ரயில் கவிழ்க்கப்பட்டுவிடுகிறது. ஆகாய மார்க்கம் செல்ல வசதிக் குறைவு. தந்தி தபால்கள்கூடச் செல்வதில்லை. இந்தியா கவர்மெண்டார் நிலைமைக்குத் தகுந்தவாறு பிறப்பிக்கும் உத்தரவுகள்கூட நிலைமை சீர்கேடடைந்த பாகங்களிலுள்ள அதிகாரிகளுக்குக் கிட்டாமல் செய்யப்படுகிறது. மேற்குப் பஞ்சாபைப் பற்றிய யாதொரு விவரமும் இந்தியா கவர்மெண்டாருக்கோ வெளிஉலகத்திற்கோ கிடைப்பதில்லை. பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையேயுள்ள எல்லைப்புற நிகழ்ச்சிகளே இப்பொழுது இவ்வளவு கலவரங்களையும் உண்டாக்கியுள்ளன. மேற்கு முஸ்லீம் பஞ்சாபிலுள்ள ஹிந்துக்களும் சீக்கியர்களும் எத்தகைய அட்டூழியங்களுக்கு இலக்கானார்கள் என்று யாருக்கும் தெரியவில்லை.

இந் நிலையில் லாகூரில் கூட்டு டிபன்ஸ் கவுன்ஸில் கூட்டம் துவக்கமாகி யிருக்கிறது. பண்டித நேரு பத்திரிகைக்காரர்களுக்கும் இந்திய மக்களுக்கும் ஓர் வேண்டுகோள் விடுத்துள்ளார். மேற்குப் பஞ்சாபில் நடக்கும் அட்டூழியங்களுக்கு எதிரிடையாக இந்திய மக்கள் எதிர் நடவடிக்கை எடுப்பார்களாகில் அங்கே எஞ்சியுள்ள சிறுபான்மையினரின் கஷ்டங்கள் இன்னும் அதிகரித்துவிடும். ஏற்கனவே அங்கிருந்து வெளியேறும் மக்களுக்குத் தக்க வசதி அளித்து உதவி புரிவது கடினமாக இருக்கிறது. இன்னும் லக்ஷக்கணக்கான மக்கள் வெளியேற வழியின்றிக் காத்திருக்கின்றனர். தந்தி, போன் முதலிய வசதிகளைச் செவ்வனே ஏற்படுத்திக்கொண்டு அங்குள்ள நிலைமையைச் சீர்படுத்திக்கொள்வது முதற் கடமை. இந்தியா கவர்மெண்டார் மேற்குப் பஞ்சாபிலுள்ள சீக்கியர்களையும் ஹிந்துக்களையும் வெளியேற்றுவதில் முனைந்துள்ளார்கள். இதைச்சாதிப்பதில் பாகிஸ்தான் கவர்மெண்டாரிடமிருந்து எவ்வித ஒத்துழைப்பும் கிட்டவில்லை என்று குறிப்பிட்டார். மேலும் அவர் பஞ்சாபிலுள்ள நிலைமையைப் பார்த்தால் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் பெரிய ஜனப் பரிவர்த்தனை ஏற்பட்டே தீரவேண்டுமென்று தோன்றுகிறது என்று முடித்தார்.

வெளியேறிவரும் சுமார் 10,000 பஞ்சாபியர்களுக்குத் தற்காலிகமாக நமது மாகாணத்தில் வசதி அளிப்பதாக நமது மாகாண பிரதமர் வாக்களித்திருக்கிறார். இதை நாம் பெருமையுடன் ஆதரிக்கிறோம்.

**(கும்பகோணத்தில் அச்சுத் தொழிலாளர்களின் ஸ்டிரைக் காரணமாக இவ்விதழ் உரிய காலத்தில் வெளிவரவில்லை. வாசகர்கள் மன்னித்தருளுவார்களாக)**

# கதம்பம்

## புதைக்கப்படுகின்றது!

ஐக்ய நாடுகளின் ஸ்தாபனத்திற்குச்சோதனைக்குமேல் சோதனையாக வந்துகொண்டிருக்கிறது. இன்னும் சமாதான உடன்படிக்கை ஏற்படவில்லை. தொட்ட பிரச்னைகள் ஒன்ருவது தீரவில்லை. இப்படிப்பட்ட நெருக்கடியான நிலைமையில் இந்தோனேஷ்யா வேறு டச்சு அரசாங்கத்தின்மீது தாவா தொடங்கிவிட்டது!

ஐக்ய நாடுகள் ஸ்தாபனத்திற்கு இந்தோனேஷ்யா விஷயமாகத் தலையிட அதிகாரமில்லை, சொந்த உள்நாட்டு விவகாரம் என்பதாக டச்சு அரசாங்கம் விதண்டாவாதம் புரிகின்றது. பிரிட்டனும் அமெரிக்காவும் தாவாவை மட்டும் ஏற்றுக்கொண்டதைத் தவிர விவகாரத்தை முடிவு செய்ய இஷ்டப்படவில்லை! ஒரு அமெரிக்கப் பத்திரிகை இந்தக் 'குட்டை உடைத்திருக்கிறது'.

"இந்தோனேஷ்யா விவகாரத்தில் பிரிட்டனும் அமெரிக்காவும் தயக்கம் கொள்வது இயற்கைதான்! ரப்பர், தகரம், குவினைன், எண்ணெய் முதலிய விலை மதிப்பற்ற பொருள்கள் அங்கேகிடைக்கின்றன. அமெரிக்க, பிரிட்டிஷ் முதலாளிகளுக்கு அவைகளில் மகத்தான பொறுப்பும் இலாப நஷ்ட சம்பந்தமும் உண்டு. இவைகளைப் புறக்கணித்துச் சுதேசிகளிடம் எல்லாவற்றையும் விட்டுவிட யாருக்குத்தான் மனம் வரும்? ஆதாயம்உள்ளவரை இந்தோனேஷ்யாவைப் பிரிட்டனும், அமெரிக்காவும், டச்சு அரசாங்கமும் எப்படி சுயேச்சையாக விட முடியும்? ஆகவே சீக்கிரம் டச்சு அரசாங்கம்சமாதானத்தை நிலைநாட்டுவதைப் பிரிட்டன், அமெரிக்கா இவைகள் விரும்பத்தான் செய்யும். ஆனால் பகிரங்கமாக டச்சு அரசாங்கத்தை ஆதரிக்கவும் முடியவில்லை. டச்சு அரசாங்கத்துக்கு விரோதமாக இந்தோனேஷ்யாவுக்கு நியாயம் வழங்கவும் மனமில்லை. இந்தக் குழப்ப நிலைமையில் பிரிட்டனும் அமெரிக்காவும் அதிகம் என்ன செய்யமுடியும்?"

ஐக்ய நாடுகளின் ஸ்தாபனம் அதன்ஸ்தாபகர்களாலேயே குழிதோண்டிப் புதைக்கப்படுகிறது என்பதற்கு வேறு அத்தாட்சி வேண்டுமா?

## நம்பி உயிர் வாழ்வோம்!

இந்தியாவும் பிரிட்டனும் தற்காலிகமாக இந்தியாவுக்குக் கிடைக்க வேண்டிய கடன் சம்பந்தமாக ஒருவித ஏற்பாட்டுக்கு உடன்பட்டு விட்டனவாம்! ரொம்ப சந்தோஷம்! 'சிநேக மனப்பான்மையுடன் மனப்பூர்வமாக உடன்பாடு ஏற்பட்டுள்ளது' என்று சீமைப் பத்திரிகைகள் கூறுகின்றன.

ஏற்பாட்டின் முக்கிய ஷரத்துக்களைப் பற்றிக் கூறுமுன் கொஞ்சம் விஷயத்தைத் தெளிவு படுத்துவோம். இந்தியாவுக்குப் பிரிட்டன் எவ்வளவு தொகை கடன்பட்டுள்ளது என்பதைக் குறிப்பாக இந்தியாவாலும் மதிப்பிடமுடியவில்லை, பிரிட்டனும் சொல்ல முடியவில்லை! 9000 லக்ஷம் பவுன் என்பது ஒரு கணக்கு. பதினாயிரம் லக்ஷம் என்று இன்னொரு கணக்கு. கடைசியாக ஒருவர் கூறும் கணக்கு 8900 லக்ஷம் பவுன். ஏராளமாகக் கடன் பட்டுள்ளது பிரிட்டன் என்று மட்டுமே திட்டமாய்க் கூறலாம்.

அந்தக் கடனை திருப்பித் தருவதில் பிரிட்டனுக்குச் சிரமம் அதிகம் என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். சாமான்களாகக் கொடுக்கவும் வசதியில்லை. அமெரிக்கன் 'டாலர்'களாக மாற்றிக் கொள்ள வசதியளிக்கப் பிரிட்டனுக்குச் சக்தியில்லை! ஆகவே ஏட்டில்தான் கடன்வர வேண்டியதாக நாம் காணமுடியும். ஆனால் நமது முடை நம்மைச் சும்மா இருக்க விடுகிறதா?

கடைசியாக ஏற்பாடு. தற்காலிகமாகத்தான்! கடன் இரண்டுவகைகளாகப் பிரிக்கப்பட்டது. பெரும்பாகம் இப்பொழுது கை வைக்கக்கூடாது என்ற கணக்கில் ஒதுக்கி வைக்கப்பட்டது. ஒரு சிறுபாகம் உடனடி உபயோகத்துக்குக் கணக்கு என்று பிரிக்கப்பட்டது. இரண்டாவது இனமூலமாய் நாம் 650 லக்ஷம் பவுன் திரும்பிப்பெற வழியுண்டு.

இன்னொரு சகாயமும் கடன்காரன் செய்யச் சம்மதிக்கிருன். 'இப்பொழுது கை வைக்கக்கூடாது' என்ற கணக்கிலிருக்கும் தொகையிலிருந்து நமது செலவுகள் சிலவற்றைப் பிரிட்டன் பொறுப்பேற்றுக் கொள்ளும். பிரிட்டிஷ் இந்திய சர்விஸ்காரர்களுக்கு நாம் கொடுக்க வேண்டிய பென்ஷன் தொகைகள், பிரிட்டன் வாங்கியிருக்கும் ராணுவ சாமான்களின் கிரயத் தொகை, பிரிட்டன் இந்தியாவில் போட்டுள்ள மூலதனத் தொகைகள் இவைகள் சம்பந்தமாகப் பிரிட்டன் பற்று எழுதிக் கொள்ளுமாம்.

ஆகவே இன்னும் நாம் பிரிட்டனின் 'உடும்புப் பிடி'யில்தான் இருக்கிறோம் என்பதையும் மறந்துவிடக் கூடாது. கடன்கள் குறைக்கப்பட வேண்டும் என்ற பிரிட்டனின் முறையீடு பைசலாகி விடவில்லை. பிரிட்டனின் தாராள மனப்பான்மையை நம்பி உயிர் வாழ்வோம்!

# மன அமைதி

"வேதஸ்ரீ"

பெண்ணாய்ப் பிறந்து கல்யாணமாகும் வயது வந்த பிறகுகூட விமலாவுக்குக் குழந்தைகளைக் கண்டாலே பிடிக்காது. நாள் முழுவதும் அலறிக்கொண்டிருக்கும் தன் சொந்தத் தம்பியைக்கூட அழைத்து வைத்துக் கொள்ளமாட்டாள். இது பலருக்கு அதிசயமாகவும் அவள் தாய்க்குப்பெரும் உபத்திரவமாயு மிருந்தது.

"சதா புஸ்தகமும் கையுமா யிருந்தால் குடித்தனப் பெண்ணுக்கு அடுக்குமா? நீ சமையல்வேலை செய்யா விட்டாலும் இந்தக் குழந்தைகளையாவது சற்றே கவனித்துக் கொள்ளக்கூடாதா? நாலு பேருக்கு நடுவில் வாழ்க்கைப் பட்டால் தான் புத்தி வரும்" எனக்கடிந்து கொள்வாள். ஆனால் விமலாவுக்கு நாவல் வாசிப்பதும் ஓய்ந்த நேரங்களில் நகத்துக்கு வர்ணம் பூசிக்கொள்வதும்தான் வேலை. சலிக்காமல் தினமொருவிதமாகச் சிங்காரம் செய்து கொண்டு காலேஜுக்குப் போவது தான் அவள் வாழ்க்கையின் லக்ஷயம் எனத் தோன்றியது. தகப்பனாருக்குச் செல்வமான பெண் கர்நாடகமான தாயின் வார்த்தையை மதிப்பாளா?

குழந்தைகளைக் கண்டால் பிடிக்காமலிருந்தது அவ்வளவு பெரிதல்ல. அதைச் சுயேச்சையாகத்திரியும் யௌவனத்தின் மனப்பான்மை யென்றே எல்லோரும் நம்பினார்கள். ஆனால் யாரைப் பார்த்தாலும் விமலா, "நீங்கள் எப்படித்தான் மாமி இவ்வளவு குழந்தைகளைச் சமாளிக்கிறீர்களோ? அம்மம்மா, என்னால் நினைக்கக் கூட முடியவில்லை" என்று கூறுவதுதான் அதிசயமானது. துடுக்கான இவ்வார்த்தைகளுக்குப் பலர் பலவிதமாகப் பதிலளித்தார்கள். "பெண்ணாய் பிறந்தால் அவஸ்தைப்படத்தானே வேண்டும்?", "இதெல்லாம் நம் இஷ்டத்திலா இருக்கிறது? எல்லாம் விதி", "நாளைக்கு உனக்கு நாலு பிறந்து மூலைக்கொன்றாக அலறும் போது சொல்லுகிறேன்" என்று பலவாறாகத் தாய்மார்கள் பதிலளித்தார்கள்.

"எனக்குக் குழந்தையே வேண்டாம். தப்பித்தவறி ஒன்றிரண்டு பிறந்தாலும் தாதியிடம் விட்டு விட்டு 'ஹாய்'யாக இருப்பேன். இவைகள் இருந்தால் ஒரு சினிமா, கச்சேரி, 'வாக்கிங்' எதற்காவது போக முடியுமா? காசைக் கொடுத்துத் தேளைக் கொட்டிக் கொண்ட மாதிரி!" என்பாள் விமலா.

சுயேச்சையான கொள்கைகள் எவ்வளவு இருந்தபோதிலும் விவாகம் செய்து கொள்ளாத இந்தியப் பெண்கள் எத்தனை பேர்? இண்டர்மீடியட் பரீக்ஷை முடிந்தவுடன் விமலாவின் தகப்பனார் அவளை டில்லியில் 200 ரூ சம்பளத்தில் வேலையிலிருந்த கோபாலனுக்கு, கன்னிகாதானம் செய்துகொடுத்தார். புரட்சிகரமான தர்க்கங்கள் பல புரிந்த போதிலும் விமலா காதல் மணம் செய்துகொள்ளவில்லை. கோபாலன் முன்னிலையில் அவன் தகப்பனாருக்கு ஓர் நமஸ்காரம் செய்து, அரை மணி நேரம் பாடிவிட்டு, கோபாலனை ஓரக்கண்ணால் பார்த்துவிட்டுத்தான் 'சரி' என்று தலையை ஆட்டினாள். அந்த ஓர் தலை ஆட்டலில் (சங்கோசத்தினால் வாயை திறந்துகூடத் தன் சம்மதத்தை வெளியிடவில்லை) எத்தனை பெரிய தீர்மானம்.

விமலாவின் இல்லற வாழ்க்கை நன்றாகத் தான் நடந்து வந்தது. ஓர் வேலைக்காரப் பையன் வீட்டு வேலை முழுதும் பார்த்து வந்தான். நாள் முழுதும் துப்பறியும் கதைகள் படித்துவிட்டுச் சாயங்காலம் நாலு மணிக்கே 'டிரஸ்' செய்துகொள்ள ஆரம்பித்தால் ஐந்தரைமணிக்குக் கோபாலன் வரும்போது அநேகமாகத் தயாராய் இருப்பாள். உடனே இருவருமாக உலாவச் செல்லுவார்கள். சதா சினிமா, 'கிளப்', 'வாக்கிங்' இப்படித்தான் பொழுது போகும். காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரையில் 'தலையெழுத்தே' என்று வீட்டிலிருப்பாள் விமலா!

புதிதாக விவாகமான பெண்களுக்குத் தன் கணவன் 'நன்றாய் வைத்துக் கொள்ளுகிறான்' என்று சொல்லிக் கொள்வதிலுள்ள பெருமை அளவிட முடியாது. ஒவ்வொரு சிறு விஷயத்தையும் பற்றித் தன் தாயாருக்கு எழுதி விடுவாள். "உன் மாப்பிள்ளை ரொம்ப பொல்லாதவர். ஒரு டம்ளர் கூட என் கையால் தேய்க்கக் கூடாதென்று கடுமையான உத்தரவு

பிறந்திருக்கிறது". என்று ஹாஸ்யமாக எழுதுவாள். பிறந்தகத்துக்கு வரச் சொன்னால் 'இவருக்கு ஹோட்டல் சாப்பாடு ஒத்துக்கொள்ளாது' என்று சாக்குப் போக்குச் சொல்லுவாள். "போகிறது, அகஸ்மாத்தாக மாப்பிள்ளை வந்தவன் சிடுமூஞ்சியாயில்லாதது ஏதோ, விமலாவின் அதிர்ஷ்டம் தான்" என்றெண்ணி மகிழ்வாள் தாயார்.

* * *

நான்கு வருடங்கள் கழிந்தன. தொல்லையற்ற வாழ்க்கை நன்கு நடந்து வந்தது; 'நல்ல வேளை'யாக விமலாவுக்குக் குழந்தைகள் ஒன்றும் பிறக்கவில்லை. அவளுடைய பெற்றோர்களுக்குப் 'பேரன் பிறக்கவில்லையே' என்று வருத்தமாயிருந்ததே ஒழிய விமலா அதைப்பற்றிச் சிறிது பெருமையாகவே இருந்தாள்.

ஆனால் மாறுதலற்ற ஒரே மாதிரியான வாழ்க்கை எத்தனை நாள் இன்பமாயிருக்கும்? தம்பதிகள் நான்கு வருடங்களுக்கு முன் எந்தெந்த விதமாகப் பொழுதைப் போக்கினார்களோ அப்படியே இன்றும் செய்தார்கள். அதே சினிமா, அதே 'கிளப்' அதே 'பார்க்', அதே தெருக்கள், அதே முகங்கள்!

கோபாலன் வருகையை மாலையில் ஆவலுடன் எதிர்பார்த்து வெளியே போகத் தயாராயிருந்த விமலா, நாளடைவில் மணி 6 ஆனாலும் தலைகூட வாரிக்கொள்ளாமல் உட்கார்ந்திருக்கலானாள். உற்சாகமேயில்லை. 'நாளைக்கு ராக்ஸியில் நல்ல ஸினிமாவாம். என்ன?' என்று கோபாலன் கேட்டால். "த்ஸு, ஓயாமல் என்ன சினிமா வேண்டியிருக்கிறது?" என்று பதில் வரும். வெளியே போகப்புறப்பட்டால் 'எங்கே போவது?' என்ற பிரச்னை கிளம்பும். அரை மனதுடன் எங்கேயாவது சென்று திரும்புவார்கள்.

கோபாலனுக்கு விமலாவின் மனவாட்டத்துக்குக் காரணம் தெரியவில்லை. தன் மீது ஏதேனும் குறையோ என்றெண்ணிச் சில புதிய வெகுமதிகள் வாங்கிக் கொடுத்தான். ஆனால் அவன் எதிர் பார்த்த அளவு அவளது முகம் மலரவில்லை. ஓர் அர்த்தமற்ற புன்னகைதான் தோன்றிற்று.

* * *

டில்லியில் அவ்வருடம் குளிர் தாங்க முடியாமலிருந்ததால் கோபாலன் விமலாவைப் பிறந்தகம் போகும்படி யோசனை கூறினான். 'உனக்கும் ஓர் மாறுதலாயிருக்கும். போய்க் கொஞ்ச நாள் தங்கிவிட்டு வா' என்று சொல்லியனுப்பினான்.

பிறந்தகத்தில் விமலா 'கல கல' வென்று பேசிக்கொண்டு சந்தோஷமாகவே பொழுதைப் போக்கினாள். ஆனால் அவள் தந்தை தனக்குப் பேரன் பிறக்காதத்தைப் பற்றிச் சிறிது வியாகூலமடைந்திருந்தார். அவள் வருவதற்குச் சில நாள் முன்னமேயே இவ்விஷயம் அவருக்குக் கவலையளிக்க ஆரம்பித்துவிட்டது. விமலா வந்தவுடன் அவளை ஓர் பிரபல வைத்தியரிடம் காண்பித்தார். 'உடம்பில் கெடுதல் ஒன்றுமில்லை' யென்று சொல்லிவிட்டார் வைத்தியர்.

"ஏன், அப்பா, வீணுக் கவலைப் படுகிறீர்கள்? தன்னாலே பிறக்கிறது. நம் குடும்பத்தில் குழந்தைகள் பிறக்காமலிருக்கிறதா? அல்லது அவர் குடும்பந்தான் சளைத்ததா?" என்று ஹாஸ்யமாகவே தகப்பனைத் தேற்றினாள் விமலா. முன்பெல்லாம் குழந்தைகளைப்பற்றிய பேச்சே பிடிக்காமலிருந்தது. இப்போது சற்று அசிரத்தைபோல் பாவனை செய்துகொண்டு எல்லோரும் என்ன சொல்லுகிறார்களென்று கவனிக்கலானாள்.

சிலநாட்களுக்குப் பிறகு விமலா டில்லிக்குப் போய்ச் சேர்ந்தாள். ஸ்டேஷனில் அவளைப் பார்த்தவுடனேயே, "பேஷ், பிறந்தகம்போய் ரொம்ப 'ஜோராக' ஆகிவிட்டாயே" என்றுசொன்னான் கோபாலன். மறுபடிபழைய குஷியான வாழ்க்கை ஆரம்பித்தது. விமலாவும் புத்துயிர் பெற்றவள் போல் தோன்றினாள்.

மேலுமிரண்டு வருடங்கள் கழிந்தன. இதற்கிடையில் யுத்தத்தை முன்னிட்டுக் கோபாலனுக்குப் பெரிய வேலைகிடைத்தது. அதன் பலனாக அதிக வேலையும் ஆகிவிட்டது. காலையில் எட்டரைமணிக்கே வீட்டைவிட்டுக் கிளம்பினால் இரவு 8, அல்லது 9 மணிக்குத்தான் திரும்புவான். வரும்போதே சோர்ந்திருப்பான்; வந்ததும் சாப்பிட்டு விட்டுப் படுக்கைதான். பேசக்கூடச் சாவகாசமில்லை.

சாதாரணமாகவே பொழுது போகாத விமலாவுக்கு இப்போது தனிமையே யமவாதனையாயிருந்தது. எத்தனை நேரம் நாவல் வாசிப்பது? எத்தனைநேரம் தூங்க முடியும்? அதற்குப் பிறகு பிறஸ்திரீகள் நாள் முழுதும் ஏதாவது வேலை செய்துகொண்டு ஓய்வே யில்லாமலிருப்பதைக் கவனித்தாள். அவளுக்கோ ஒரே ஓய்வுதான்; வேலையே இல்லை. சமையல் வேலையைத் தானே செய்ய ஆரம்பித்தாள். சிறிது

# இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஸெண்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்.

வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ... ரூ. 18,75,000
ரிஸர்வ் பண்டு ... ரூ. 9,00,000
மொத்த ஆஸ்தி ... ரூ. 6 கோடிக்குமேல்

ஸிட்டி ஆபீஸ்கள்:

சைனபஜார், மாம்பலம், மயிலாப்பூர், பெரியமேட், திருவல்லிக்கேணி

| | | | |
|---|---|---|---|
| அமதலவால்ஸா | கும்பகோணம் | திருநெல்வேலி ஜங்ஷன் | ராமநாதபுரம் |
| அனகாபள்ளி | சாலூர் | திருச்சினுப்பள்ளி | மதுரை |
| அம்பாசமுத்திரம் | சிதம்பரம் | திருவாரூர் | மாருடேரு |
| ஆம்பூர் | சித்தூர் (கொச்சி) | தென்காசி | விழுப்புரம் |
| ஈரோடு | சீயாழி | நாகப்பட்டணம் | விருதுநகர் |
| கடலூர் N. T. | தஞ்சாவூர் | பரமக்குடி | விஜயநகரம் |
| கடலூர் O. T. | தாடபள்ளிக்கூடம் | பாலக்காடு | வேலூர் |
| காஞ்சீவரம் | திலாறு R. S. | பார்வதிபுரம் | வேதாரண்யம் |
| காரைக்குடி | திருநெல்வேலி டவுன் | புதுக்கோட்டை | |

பிக்ஸட் டிபாஸிட்கள்:- ஒரு வருஷம் நூற்றுக்கு வட்டி ... ... $2\frac{3}{4}$% வீதம்
இரண்டு ,, ,, ... ... 3% ,,
சேவிங்ஸ் பாங்கு கணக்கு வாரம் ரூ. 250/வாங்கக்கூடியது ரூ. 10,000/வரை வட்டி $2\frac{1}{4}$% ,,
கரண்ட் கணக்கு .. .. .. .. $\frac{1}{4}$% ,,

தங்கம், வெள்ளிபார், கவர்மெண்ட் பாண்டு, கடன் பத்திரங்கள், ஷேர்கள், வியாபாரச் சரக்குகள் முதலியவைகளின் பேரில் கடன்கள் கொடுக்கப்படும்.

எல்லாவிதமான பாங்கு நடவடிக்கைகளும் நடத்தப்படும்

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.



பொழுது போயிற்று என்றாலும் பகல் முழுதும் கழிப்பதுதான் பிரச்னையாயிருந்தது. சிற்சில சமயம் "எனக்கும் பிறரைப்போல் ஓர் குழந்தை இருந்தால் எப்படி இருக்கும்!" என்றெண்ணுவாள்.

நாளடைவில் இவ்வெண்ணம் அவள் மனதில் புகுந்து வேலை செய்ய ஆரம்பித்தது. அடிக்கடி அதைப்பற்றிச் சிந்தனை செய்ய ஆரம்பித்து விட்டாள். "வீட்டில் குழந்தையில்லாததால்தான் அவர் கூட அசிரத்தையாக நேரம் கழித்து வீட்டுக்கு வருகிறாரோ?" என்று யோசிப்பாள். உடல் சிலிர்க்கும்.

பல புதிய நோக்கங்களின் பலனாக விமலாவுக்குச் சிறிது சிறிதாகக் குழந்தைகளிடம் வாஞ்சை பிறந்தது. அவைகளுடன் பொழுது போக்குவதற்காக மத்யான வேளைகளில் அக்கம் பக்கத்து வீடுகளுக்குப் போக ஆரம்பித்தாள். முக்யமாக அவள் சிநேகிதி லக்ஷ்மியின் குழந்தை ராமு அவள் மனதை ரொம்பவும் கவர்ந்தான். ராமுவுக்கு முகம் கழுவி, பவுடர் பூசி, தினுசு தினுசாகத் தலைவாரி விடுவாள். அவனை அணைத்துக் கொள்ளும் போதெல்லாம் உள்ளத்தில் ஓர் ஆர்வம், ஓர் புது உணர்ச்சி ஏற்பட்டது. "'அம்மா' சொல்லு, கண்ணா" என்று அவனுடன் மன்றாடுவாள். 'மாட்டேன்' என்று தலையை ஆட்டும் ராமுவை இறுக அணைத்து அவன் மேல் முத்தங்களைப் பொழிவாள்.

அடுத்த வீட்டு அனந்தராமய்யரின் மனைவி சற்று வயதான ஸ்த்ரீ. விமலாவின் மீது பிரியமும் அனுதாபமும் கொண்டவள். ஒரு நாள் பேசிக்கொண்டிருக்கும்போது அவள் விமலாவை "நீ ஏன் லக்ஷ்மியின் வீட்டுக்கு அடிக்கடி போகிறாய்?" என்று கேட்டாள்.

"ஏன்? அந்தப்பயல் ராமுவுக்காகத் தான்"

"இல்லை...... அங்கே போவதைச்சற்றுக் குறைத்துக் கொள்ள முடியாதா?"

"ஏன், என்ன நடந்தது, மாமி?"

"ஒன்றும் இல்லை...... லக்ஷ்மியின் மாமியார் நேற்று இங்கு வந்திருந்தாள். குழந்தை ராமுவுக்கு இரண்டு நாட்களாக உடம்பு சரியில்லையாம்; அடிக்கடி வாந்தி யெடுக்கிறானாம். 'எல்லாம் திருஷ்டி தோஷம் தான். அந்தக் குழந்தையில்லாத பெண் தினமும் ராமுவுடன் கொஞ்சுகிறாள். அவள் கண் படலாகாது என்று நான் எவ்வளவு சொன்னாலும் என் நாட்டுப் பெண்ணுக்குத் தெரிகிறதில்லை' என்று சொல்லிக் குறைந்து கொண்டாள். எனக்கு மனம் கேட்கவில்லை. உனக்கொரு வார்த்தை சொல்லிவைத்தேன்," என்றாள்.

குமுறியெழுந்த அழுகையை அடக்கிக் கொண்டு எழுந்து போனாள் விமலா. லக்ஷ்மியின் வீட்டுக்குப் போவதை அன்றுடன் ஒழித்தாள். ராமுவை மறப்பது மட்டும் அவ்வளவு சுலபமாயிருக்கவில்லை.

* * *

கோபாலனின் தமக்கை ஸீதா ஓர் விடுமுறைக்குத் தன் தம்பியின் வீட்டுக்கு வந்தாள். வந்த அன்றைக்கே "வீடு 'வெறிச்'சென்றிருக்கிறது. ஏண்டி, காலா காலத்தில் உனக்கொரு குழந்தை பிறக்கக் கூடாதோ?" என்றாள் கேலியாக. விமலா அசட்டுச் சிரிப்புச் சிரித்தாள்.

அநேகமாக ஒவ்வொரு நாளும் சம்பாஷணையின் நடுவே பல தடவை தன் தம்பிக்குச் சந்ததியில்லாததைப் பற்றிப் பிரஸ்தாபித்தாள் ஸீதா. தங்கள் குடும்பத்திலேயே ஒருவரும் குழந்தையின்றி இருந்ததில்லை யென்றும், விமலாவின் குடும்ப இயல்புதான் குழந்தை பிறக்காததற்குக் காரணமென்றும் சொல்லித் தங்கள் வீட்டுப் பெருமையையும் விமலாவின் வீட்டுச் சிறுமையையும் வெளிப் படுத்தினாள்.

ஒரு சமயம் "குழந்தை, குட்டிகள் பெறாத பெண் ஒரு பெண்ணா, என்ன?—ஆனால் நீ தான் எப்போதுமே குழந்தைகளை வெறுப்பாயாமே? மனம் போல மாங்கல்யம்" என்றாள். இது விமலாவுக்குச் 'சுறுக்' கென்று தைத்தது.

சந்தானமில்லாத விஷயத்தைக் குறித்து நாத்தனார் பேசியதும் அது சம்பந்தமாக அவள் கூறிய வார்த்தைகளும் விமலாவுக்கு அவ்வளவு வருத்தமளிக்கவில்லை, ஆனால் குழந்தை பிறவாதது ஓர் குற்றம் போலும்; அதற்கு விமலாவே காரணமென்றும், கருதிய அவளது மனப்பான்மைதான் வெறுப்பாக இருந்தது. "ஒரு வேளை நான் சிறு வயதில் ஊரார் குழந்தைகளை அசட்டை செய்ததால்தான் கடவுள் எனக்குப் புத்தி கற்பிக்கிறாரோ, என்னவோ? ஆனால் இப்போது நான் என்ன செய்ய முடியும்?" என்று மனதுக்குள் அடிக்கடி சொல்லிக் கொள்வாள். கண்ணீர் விடுவதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்?

ஊருக்குத் திரும்பிப் போகுமுன் ஸீதா தன் தாயாரின் உள்ளக் கருத்தை வெளி

யிட்டாள். "அம்மாவுக்குத்தான் ரொம்பக் குறை. இத்தனை இருந்தும் 'என் கோபுவுக்கு ஒரு பிள்ளை பிறக்கவில்லையே' என்று அங்கலாய்க்கிறாள். 'அந்தப் பெண் வயிற்றில் ஒரு புழு புழுக்காதா ஈச்வரா! எனக்கு இப்படி ஒரு மலடியான நாட்டுப் பெண் வாய்க்கவேண்டுமா?' என்று சதா சொல்லுகிறாள். என்ன செய்யலாம்? அவரவர்கள் கொடுத்து வைத்தது!" என்று நயமாகச் சொல்லிவிட்டு வந்தகாரியத்தை முடித்துக்கொண்டு போய்ச் சேர்ந்தாள்.

பலசிறு அலைகள் மோதிக்கொண்டிருந்த விமலாவின் உள்ளத்தில் பெரும் புயல் ஏற்பட்டது. தன் 'குற்றம்' பிறர் மனதை எப்படிப் பாதிக்கிற தென்பதை உணர ஆரம்பித்தாள். எல்லாவற்றிற்கும் மேலாக 'மலடி' யென்ற பட்டம்தான் அவளை வெடிக்கும் வெய்யிலில் உள்ளங் காலில் ஒட்டிக்கொண்ட தார்போல வாட்டிற்று.

மேற்கண்ட சம்பவத்துக்குப் பிறகு விமலாவுக்கு மன அமைதியற்று விட்டது ஆச்சர்யமில்லை. ஆனால் தன்னம்பிக்கையும் தைரியமும்கூடப் போய்விட்டன. தன்னைத் தாழ்ந்தவளாகக் கருத ஆரம்பித்தாள். நாலுபேர் முன்னிலையில் தைரியமாகப் பேசக்கூட முடியவில்லை. யாராவது தங்களுக்குள் குழந்தை பிறப்பதைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தால் தன்னைத் குறித்துப் பேசுகிறார்களோ என நினைப்பாள். புதிதாக அறிமுகமானவர்கள் "உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?" என்று சகஜமாய்க் கேட்டால் விமலாவுக்குத் தன்னைக் குத்திக் காண்பிப்பதற்காகவே கேட்கிறார்களெனத் தோன்றும். ஒருநாள் விருந்தினர் ஒருவர் "உங்கள் வீடு சுத்தமாயிருக்கிறது. நன்றாக வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்......... ஆனால் உங்களுக்கென்ன, குழந்தையா, குட்டியா? பிடுங்கலில்லை. எல்லாம் நன்றாய்ச் செய்யமுடிகிறது" என்று சொன்னபோது விமலாவுக்குப் 'பகீ'ரென்றது. இத்தகைய புகழ்ச்சி அவளுக்குப் பிடிக்கவில்லை. வெவ்வேறு மனப்பான்மை ஏற்படுவது இயற்கைதானே?

கல்யாணமாகி ஒன்பது வருடங்களாகியும் விமலாவுக்குக் குழந்தைபிறக்காதது அவளைவிடப் பிறருக்கே அதிகக் கவலையளித்தது. அவள் தந்தை மிகவும் ஏக்கமடைந்தார். தம்மாலியன்றதை யெல்லாம் செய்து பார்த்து விடுவதென்று தீர்மானித்து விமலாவை உடனே புறப்பட்டு வரும்படி கடிதம் எழுதினார். விமலாவும் பிறந்தகம் வந்துசேர்ந்தாள்,

வந்தவுடன் தன் மனதிலுள்ள துக்கத்தையெல்லாம் தாயிடம் சொல்லி வாய்விட்டு அழுதாள். "அழாதே, எல்லாம் அவா வீட்டு வாகுதான். மாப்பிள்ளைக்கு அத்தான்கூட தத்துதான் எடுத்துண்டிருக்காராம். நம்ம குடும்பத்திலே யாருக்கடி குழந்தை இல்லை?" என்று கூறிப் பெண்ணைத் தேற்றினாள் தாயார். தங்கள் வீட்டைப் பற்றி இழிவாகப் பேசியதுதான் அவள் கோபத்திற்குக் காரணம்!

கண்கூடாகப் பார்க்கக்கூடிய விஷயங்களில் ஏமாற்றமடைந்தால் குருட்டு நம்பிக்கைகள் ஊர்ஜிதப்படுவது சகஜம். விமலாவின் தந்தை 'பிரபல' ஜோதிடர்களிடம் தம்பதிகளின் ஜாதகங்களைக் காண்பித்தார். அவர்கள் பலவிதமான அபிப்ராயங்கள் தெரிவித்தனர். பலவிதங்களில் பிரபலமடைந்தவர்கள் தானே!

தேர்ச்சிபெற்ற ஒரு மலையாள ஜோஸ்யர் மாப்பிள்ளையின் ஜாதகத்தில் தோஷமிருப்பதாகவும் அதற்குப் பரிகாரம் செய்ய வேண்டு மென்றும் தெரிவித்தார். பெண் ஜாதகத்தில் தோஷம் என்று சொன்னால் அதிக சன்மானம் கிடைக்காதென்று அவருக்குத் தெரியாதா? பரிகாரம் என்னவென்றால் ஜாதகனின் மனைவி பிரதி செவ்வாய்க் கிழமையும் மூன்று தேங்காய்கள், ஐந்து படி அரிசி, ஏழு பாக்கு, ஒன்பது மஞ்சள் எல்லாவற்றையும் கொண்டு போய் இருட்டும் சமயம் ஆற்றில் போட்டுவரவேண்டியது. தோஷம் நிவர்த்தியாகி விடும்.

இதற்கிடையில் கோபாலனும் இரண்டு மாதம் லீவ் எடுத்துக்கொண்டு மாமனார் வீட்டுக்கு வந்துசேர்ந்தான். மாமனாரின் பரிகார முயற்சிகள் தீவிரமாயின. ஒரு தோஷ நிவர்த்தி நிபுணர் (அவர் ஹனுமாரை உபாஸிப்பவராம்) கோபாலனின் மூதாதையர் யாரோ ஒருவர் பசுவைக் கொன்றுவிட்டதால் குடும்பத்துக்கு ஏற்பட்ட சாபம்தான் காரணம் என்று சொல்லி, பரிகாரமாக ஓர் தங்கப்பசுவைப் பூஜையில் வைக்கச் சொன்னார். பிறகு, பசு மேய்வதற்காகத் தங்கத்தில் ஓர் சிறு முளையடித்துச் சங்கிலியும் சேர்க்கச் சொன்னார். ஐந்து பவுன் கொண்ட பசு ஐந்துவாரங்கள் பூஜையில் இருந்தது. பிறகு அதை ஓர் பிராமணனுக்குத் தானம் செய்து விடும்படி நிபுணர் உத்தரவிட்டார். தானத்துக்குத் தகுந்த பிராமணர் அவரேதான் என்று நாம் சொல்ல வேண்டுமோ?

இன்னும் ஸேது யாத்திரை, ஸர்ப்ப பூஜை, வியாழக்கிழமை கணவனும் வெள்

ளிக்கிழமை மனைவியும் உபவாஸம், ரக்ஷைகள். சனிக்கிழமையன்று சனீச்வரன் கோயிலுக்கு விஜயம் முதலிய பல சிகிச்சைகளும் பரிகாரங்களும் ஏக காலத்தில் நடந்தன. திருப்பதி முதல் திருநெல்வேலி வரையில், பிரசித்தமான கோயில் முதல் பாழடைந்த கோயில் வரை, எல்லாத் தெய்வங்களுக்கும் வேண்டிக் கொண்டார்கள். பலன் கிடைத்த பிறகு தெய்வங்களெல்லாம் வாக்களித்த காணிக்கையைக் கேட்க முடியுமானால் மனிதர்கள் கதி அதோகதி தான்!

விடுமுறை முடிந்து டில்லிக்குத் திரும்பினான் கோபாலன். பூஜைகள் இன்னும் கொஞ்சம் பாக்கியிருந்ததால் சில நாள் கழித்து அனுப்புவதாகச் சொல்லி விமலாவைப் பெற்றோர் வைத்துக்கொண்டனர். தான் 'குற்றவாளி' யில்லையென்று நிரூபிக்க ஆவல் கொண்ட விமலா எல்லா வேதனைகளுக்கும் உடந்தையாயிருந்தாள்.

தன் மாமியாரின் ஊரிலிருந்து அடுத்த வீட்டுக்கு அதிதியாக வந்த மங்களத்தைப் பார்க்கப் போனாள் விமலா. யோகக்ஷேமங்கள் விசாரித்த பிறகு மங்களம் மெதுவாக ஆரம்பித்தாள். "நீ எங்கேடி திரும்பி உன் அகமுடையானிடம் போகப்போகிறாய்? எனக்கு நம்பிக்கையில்லை. இருக்கிற நிலைமையைப் பார்த்தால் உன் மாமியார் தன் பிள்ளைக்கு வேறு கல்யாணம் செய்து விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பாள் போலிருக்கிறது. அன்று கோயிலில் பார்த்த போதுகூட 'எத்தனை நாள் பொறுத்துப் பார்ப்பது? என் குடும்பம் நசித்துப் போகலாமா?' என்று சொன்னாள். வரன்கள் பார்ப்பதாகக் கூட வதந்தி" என்றாள். அவள் பேச்சில் அனுதாபமேயில்லை; வம்புக்காரியின் ஏளனம் தான் காணப்பட்டது.

விமலாவின் கண்முன் ஓர் புதிய தோற்றம் தென்பட்டது. இதுவரை இவ்வெண்ணம் அவளுக்கு உதிக்கவேயில்லை, ஆகையால் இச்செய்தி அவளைக் கலக்கி விட்டது. 'அவர் அப்படியெல்லாம் ஒப்புக்கொள்ள மாட்டார். இருந்தாலும் தாயார் கட்டாயப்படுத்தினால்?.........சீ, இவர்கள் குடும்பம் என்ன அவ்வளவு உயர்வு, சந்ததியில்லாவிட்டால்தான் என்ன பிரமாதம்? பட்டத்துக்கு வார்சு இல்லாமல் ராஜ்யம்


# MEHTA'S SPECIALITIES

*Well-known for their efficacy and Medicinal values*

1 *SUNDARI ELIXIR*
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 *PHOSPHORUS OIL*
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA*
A great Blood Purifier & digestive & Potential Tonic.

*Stocked by all important Chemists & Druggists of South India*

**K. S. MEHTA & CO.**

250, China Bazaar, MADRAS.

வீணாய்ப் போகிறதாக்கும்!'' என்றெல்லாம் பலவாறாக எண்ணினாள். எல்லாவற்றையும் விட, செய்தியைச் சொன்ன மங்களத்தின் மீதே அவளுக்கு வெறுப்பு ஏற்பட்டது. 'நான் ஏன் அவளைப் போய்ப் பார்த்தேன்?' என்று தன்னையே நொந்துகொள்வாள்.

மனதைப் பல விதத்திலும் சமாதானம் செய்துகொண்ட போதிலும், கணவன் மேல் என்னதான் நம்பிக்கை இருந்தாலும் விமலாவுக்குப் பிறந்தகத்தில் அதிக நாள் இருக்கை கொள்ளவில்லை. நல்ல நாள் பார்த்து டில்லிக்குப் போய்ச் சேர்ந்தாள். போன அன்றே கணவனிடம் 'ஓ'வென்று அழுதாள்; 'நீங்கள்.........என்னைத் தள்ளி வைத்து விடுவீர்களா?' என்று தழுதழுத்த குரலில் கேட்டாள்.

''சீ, அதெல்லாம் யார் சொன்னது? ஊர் வம்பை ஏன் நம்புகிறாய்? சத்தியமாகச் சொல்லுகிறேன், உன்னை ஒருகாலும் கைவிடமாட்டேன்'' என்றான் கோபாலன்.

மனதிலிருந்த பாரம் நீங்கியது. ஆயினும் சந்தோஷம் ஏற்படவில்லை. இழந்த சாந்தியை மீண்டும் பெறமுடியுமா?

கோபாலனுக்கு விமலாவின் மீது மிகவும் பரிதாபம் ஏற்பட்டது. 'பாவம், பேதை' என்று உண்மையாகவே உருகினான். குழந்தைக்காக அவள் படும் ஆசையும், அது பிறக்காததால் அவள் படும் சிறுமையும், ஊரார் அவளை ஆட்டிவைப்பதும், அவனுக்கு நினைக்க நினைக்கத் துக்கமாய் இருந்தது. ''எனக்காக இல்லாவிட்டாலும் என் மனைவிக்காகவாவது ஒரு குழந்தை பிறக்கலாகாதா?'' என்று அடிக்கடி கடவுளை வேண்டிக்கொண்டான்.

நாளடைவில் பரிகாரங்களின் பலனாகவோ, தம்பதிகளின் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சி வேகத்தினாலோ, விமலா கருத்தரித்தாள். எல்லோருக்கும் உண்டான சந்தோஷத்துக்கு அளவேயில்லை. மிகவும் அருமையாகத்தான் பெற்றோர் கர்ப்பிணியைக் கவனித்துக் கொண்டனர். விமலாவும் தனக்குப் பிறக்கப் போகும் குழந்தையையும், தான் அதனுடன் கொஞ்சி விளையாடப் போவதையும் நினைத்துப் பெருமிதமடைந்தாள். கற்பனை கட்டுக் கடங்காததாயிருந்தது.

சுகப் பிரஸவமாகி, அதுவும் ஆண் குழந்தை பிறந்ததென்றால் வீட்டில் குதூகலத்துக்குக் கேட்பானேன்? ஆனந்தத்தினால் தலைகால் தெரியாமல் தவித்தார் விமலாவின் தகப்பனார். செய்தி கேள்விப் பட்டவுடன் மறு ரயிலில் புறப்பட்டுப் புண்யாஹவாசனத்துக்காக மாமனார் வீட்டுக்கு வந்து சேர்ந்தான் கோபாலன்.

எதிர்பாராத இடையூறுகள் ஏற்படுவது ஈச்வர நியமத்தின் விந்தை. பிரஸவம்ஆன நான்காம்நாள் விமலாவுக்குச் சுரம் கண்டது. பிரஸவ அறையில் காய்ச்சல் வந்தவுடன் எல்லோருக்கும் பீதி ஏற்பட்டு விட்டது. பிரபல வைத்யர்கள் வரவழைக்கப்பட்டனர்; இரண்டு நாட்களுக்கெல்லாம் சுரம் சற்றே தணிந்தது.

ஆனால் மறுபடி திடீரென்று சுரம் அதிகரித்து ஒன்பதாம்நாள் விமலா உயிர் நீத்தாள். கடைசி நிமிஷம் வரையில் பிரக்ஞை இழக்கவேயில்லை. கணவனை வரவழைத்தாள். ஓர் வறண்ட சிரிப்புச் சிரித்தாள். ''என் வாழ்வு முடிந்து விட்டது. நான் குழந்தையை வைத்துக் கொண்டு அனுபவிக்கக் கொடுத்து வைக்காத......பாவி......ஆனால் எனக்கு ஊரார் அளித்த 'பட்டம்' நீங்கிற்றே. அதுவே போதும்; ரொம்ப திருப்தி. இனி வேறு எதையும்பற்றி நான் வருத்தப்பட வேண்டியதில்லை. இப்போதுதான் என் மனம் அமைதியடைந்தது'' என்று கூறிக் கண்ணை மூடினாள். விமலாவின் சரித்திரம் முடிந்தது.

* * *

ஆயினும் அவள் கணவனுக்கோ, அவனின் சொந்தக்காரர்களுக்கோ இன்னும் மனச்சாந்தி ஏற்படவில்லை. மறுபடியும் விவாகம் செய்து கொண்டு விமலாவின் ஸ்தானத்தில் ஒருத்தியை நியமித்தவுடன் தான் அவர்களுக்கு மனதில் அமைதி நிலவியது. என்னே இவ்வுலக விந்தை!

# இந்தியாவின் பாதுகாப்புப் படை

டி. கே. வெங்கடராமன்

கி.மு. நான்காம் நூற்றாண்டில் ஓர் பெரிய சாம்ராஜ்யத்தை யாண்டு வந்த ஒரு சக்ரவர்த்தி தம்சைனியம் வேறு ஒரு இராஜ்யத்தை வென்று விஜய கோஷம் எழுப்பிக்கொண்டிருக்கும் சமயம் யுத்தத்தில் மாண்ட மாந்தர்களின் பயங்கர முடிவால் மனமுருகி, அந்த நிமிஷம் முதல் யுத்தமென்னும் ஆயுதத்தைத் துறந்தார். இந்த மகத்தான அற்புதம் நடந்தது நமது பாரத பூமியில் தான். அந்தச் சக்ரவர்த்திதான் அசோகர். இதே புண்ய பூமியில் இந்த நூற்றாண்டில் மஹாத்மா காந்தி அஹிம்சா தத்துவத்தைப் பற்றிப் பிரசாரம் செய்து கொண்டிருப்பதில் வியப்பு ஒன்றுமில்லை. உலகமாந்தர் யாவரும் காந்தியடிகளின் பொன் மொழிகளைச் செவிசாய்த்து ஆயுதங்களையும் சேனைகளையும் ஒழித்து, "இனி யுத்தமென்னும் அநாகரிக முறை உலகினின்றும் மறைந்தது. சகோதரத்வமும் சமாதானமுமே எங்கும் நிலவப் போகிறது" என்று தங்கள் எண்ணங்களிலும் செயலிலும் எடுத்துக்காட்டினால், உலகிற்கே சுபிக்ஷமான நவயுகம் பிரசன்னமாயிற்று என்று நாம் யாவரும் மகிழ்ச்சி கொள்ளலாம்.

ஆனால், நாம் காண்பது என்ன? 1914–18-ல் நடந்த முதல் உலக யுத்தம், யுத்தமென்பதையே ஒழிக்கும் மஹா யுத்தமெனப் பறை சாற்றப்பட்டது. அந்தக் கருத்துப் பலிக்கவில்லை. யுத்தத்தின் பின் ஏற்படுத்தப்பட்ட சர்வதேச சங்கம் வல்லரசுகள் தாங்களே ஆயுத பரிஹரணம் செய்துகொள்ள முயற்சி செய்து படுதோல்வி யடைந்தன. யுத்த முஸ்தீப்புகளும் தளவாடங்களும் குறையவில்லை. இரண்டாவது உலக யுத்தம் (1939–45) மிகவும் கோரமான போர் முறைகளைக் கொண்டதாயிற்று. இந்த யுத்தம் ஒழிந்து, உலக சமாதானத்தை நிலைநாட்ட ஐக்கிய தேசிய ஸ்தாபனம் எழுந்தது. ஆயினும், இன்னமும் வல்லரசுகள் ஆயுத பரிஹரணத்தைப்பற்றி விவாதித்து வருகிறார்கள். ஆயுதங்கள் யாவற்றிலும், கொடூரமான அணுகுண்டை ஒழிப்பதில்கூட ஒற்றுமையில்லை.

உலகம் இவ்வளவு அவகேடான நிலையிலிருக்கையில், நமது நாடுமட்டும் போர் தளவாடங்களையும் பாதுகாப்புப் படைகளையும் கலைப்பது என்பது அசாத்தியம். இவ் விஷயத்தில் மஹாத்மா காந்தியின் சிலாக்கியமான கொள்கையை உடனே நாம் பின்பற்றுவது முடியாத காரியம். ஆனால் சுதந்திர இந்தியா உலக தேசங்களுடன் கலந்து சம்பாஷித்து யுத்த பரிஹரண முயற்சிகளில் தீவிரமான சிரத்தை காட்டும் என்பதில் சந்தேகமில்லை. இவ் விஷயத்தில் தலைமை வகிக்க நமக்குப் பூரண அருகதை யிருக்கிறது. நமது தேசம் என்றும் பிறநாடுகளை யாக்ரமித்ததில்லை. நமது மக்கள் என்றும் சமாதானத்தையும் உலக க்ஷேமத்தையும் விரும்பியவர்.

நமது பாதுகாப்புப் படைகள் இது வரை பிரிட்டனின் ஏகாதிபத்தியக் கொள்கைக்கு ஒரு தூணாக இருந்தன. அப்படைகளின் சரிதமே இதை நிரூபிக்கின்றது. கிழக்கிந்தியா கம்பெனி நம் நாட்டு ஜனங்களையே சிப்பாய்களாகப் பழக்கி, அவர்களைக்கொண்டே நம் நாட்டை வசப்படுத்திக்கொண்டது. 1857-ஆம் வருஷம் நிகழ்ந்த சிப்பாய்க் கலகத்தின் போது ராணுவத்தில் இந்தியர்கள் ஆறு பங்கும் ஐரோப்பியர்கள் ஒரு பங்குமே யிருந்தனர். இதுவரை சிப்பாய்களின் உறுதியான பக்தியில் நம்பிக்கை கொண்டிருந்த பிரிட்டிஷார் திடுக்கிட்டனர். கலகம் அடங்கிய பின், இந்தியர்கள்மேல் ஏற்பட்ட சந்தேகம் ராணுவத்திலும் வெளிப்பட்டது. ஐரோப்பியர்கள் அதிகமாயினர். பீரங்கிப் படையை இந்தியச் சிப்பாய்கள் வசம் விடாமல் ஐரோப்பியர்கள் கையில் ஒப்படைக்கப்பட்டது. ராணுவத்தில் பிரித்தாளும் கொள்கையும் அமுலுக்கு வந்தது. சில வகுப்பினர்களை ராணுவ

வேலைக்குத் தக்கவரல்ல என்று ஒரு காரணம் கல்பித்து ராணுவத்தில் சேர்க்க மறுத்தனர். பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நிமித்தம் ஏற்பட்ட சண்டைகளில் இந்திய ராணுவத்தை உபயோகித்தனர். "ஏழை தேசமான இந்தியாவிற்கு இவ்வளவு பெரிய படை எதற்கு? பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நன்மைக்காகவே இது வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதன் வரிச் சுமையெல்லாம் நம் தலையில் விழுகிறது" என்று தேசத் தலைவர்கள் நெடுங் காலமாக ஓலமிட்டு வந்தனர். ஒன்றும் பயனில்லை. இந்த ராணுவங்களிலும் இந்தியர்களுக்குப் பொறுப்புள்ள உயர்ந்த பதவிகள் கிடையாது. அவைகளெல்லாம் ஐரோப்பியர்களுக்கே உரிமை.

முதல் உலகயுத்தத்தில் இந்திய ராணுவம் எல்லா யுத்த அரங்கங்களிலும் திறமையுடன் போரிட்டது. ஆனால் முடிவு என்ன? ராணுவத்தில் மூன்றிலொரு பங்கு ஐரோப்பியர்கள். உயர்ந்த பதவிகளெல்லாம் அவர்கள் வசம். பீரங்கிப்படையும் ஐரோப்பியர் வசம். இந்திய விமானப் படை ஒன்று ஏற்பட்டது. அதிலும் இந்தியர்களுக்கு அதிகச் சலுகையில்லை. மிகவும் வாக்குவாதத்திற்குப்பின், 1932ஆம் வருஷம் இந்திய உத்தியோகஸ்தர்களைத் தயார் செய்ய டேராடூனில் ஒரு ராணுவப் பயிற்சிச் சாலை ஏற்படுத்தப் பட்டது. 1933ஆம் வருஷம், இந்தியத் தலைவர்களின் கட்சியை ஒருவாறு ஒப்புக் கொண்டு பிரிட்டிஷ் சர்க்கார் இந்திய ராணுவச் செலவுக்காக வருஷவாரியாகக் கொஞ்சம் பண உதவியளிக்கச் சம்மதித்தனர். 1934ஆம் வருஷம் ஏற்படுத்தப் பட்ட கப்பற்படையில் இந்தியர்களுக்குச் சில உத்தியோகங்கள் தரவுமிணங்கினர்.

இரண்டாவது உலகயுத்தத்தில், பிரிட்டனுக்கு ஏற்பட்ட நெருக்கடி நமக்கு நல்லதாயிற்று. சண்டைக்கு ஏராளமாகப் போர்வீரர்கள் தேவையாயிருந்ததால், இந்தியாவின் எல்லாப் பாகங்களிலிருந்தும் எல்லா வகுப்புகளினின்றும் சிப்பாய்கள் சேர்த்தனர். ஐரோப்பியர்களின் எண்ணிக்கை குறைந்தது. பீரங்கிப் படை இந்தியச் சிப்பாய்களிடம் தரப்பட்டது. ஆகாய விமானப் படையில் ஏராளமாக இந்தியர் சேர்க்கப் பட்டனர். கப்பற் படையிலும் இந்திய உத்தியோகஸ்தர் அதிகமாயினர்.

சென்ற மூன்று வருஷங்களாக இந்திய சுதந்திரப் பேச்சுகள் சம்பந்தமாக இந்திய ராணுவத்தை இந்திய மயமாக்குவதைப் பற்றியும் ஆலோசனைகள் நடத்தப் பட்டன. இவைகளின் முடிவாக, நமது படைகள் நாளாவட்டத்தில் இந்தியமயமாகுமென்றும், நமக்கு வேண்டிய ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களைத் தேவைக்குத் தக்கபடி ஒப்பந்தம் பேசி நாம் வைத்துக் கொள்ளலாம் என்றும் நிச்சயமாகி விட்டது. இந்த ஐரோப்பியர்கள் இந்திய உத்தியோகஸ்தர்கள் அதிகமாகிப் பதவிவகிக்கத் தயாராகும் வரை தானிருப்பார்கள். 1947ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதி சுதந்திரம் உதயமானதும் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ராணுவத்தை இந்தியாவிலிருந்து அகற்ற ஆரம்பித்து விடுவார்கள். இனிமேல், பிரிட்டிஷாரால் நமக்கு ஒரு தொல்லையுமில்லை. நமதிஷ்டப் படியும் தேவைக்குத் தக்கபடியும் பாதுகாப்புப் படைகளை யமைத்துக் கொள்ளலாம். இப்படைகளும் நமது ஜனநாயக சர்க்காருக்குக் கீழ்படிந்த தேசியப் படைகளாக மாறும் நன்னாளும் வந்துவிட்டது.

ஒரே ஒரு அபாயம் மட்டும் காத்திருக்கிறது. தேசத்தைப் பிரிவினை செய்ததால், பாகிஸ்தானத்திற்குத் தனியாகப் பாதுகாப்புப் படைகள் பிரித்துக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இந்தியாவிலுள்ள படைகள் பெரும்பாலாக முஸ்லிம் அல்லாதவர்களாகவும், பாகிஸ்தானத்திலுள்ள படைகள் பெரும்பாலாக முஸ்லிம்களாகவும் இருக்கலாம் என்று ஏற்பட்டிருக்கிறது. நாட்டிலுள்ள மதவெறியும் வகுப்புக் கலகங்களும் அடங்காவிட்டால், நவீன யுத்த முறைகளில் பயின்ற இரு நாட்டுப் படைகளும் ஒன்றோடொன்று போர்க்களத்தில் சந்திக்க நேரிடும். இதனால், இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் ஏற்படும் அவமானத்தையும் இரத்தக் களரியையும் ஜனநாசத்தையும் பொருள் நாசத்தையும் நினைக்கக்கூட மனம் கூசுகிறது. இரு தரப்பு தலை

வர்களும் இவ்வித விபத்து நேராவண்ணம் தாராள மனப்பான்மையும் அரசியல் திறனும் சமயோசித யுக்தியும் காட்டும்படி ஈசனைப் பிரார்த்திப்பது நம் கடமை.

சுதந்திர இந்தியாவின் படைகளைக் குறித்து இன்னம் சில விஷயங்கள் கவனிக்க வேண்டும்.

(1) இந்தியாவின் கடற்கரை மிகவும் நீளம். இதுவரை பிரிட்டிஷ் கப்பற்படையின் பாதுகாப்பினுல் நாம் அசிரத்தையாயிருந்தோம். இந்த நீளமான கடற்கரையை ரக்ஷிக்க ஓர் தகுந்த கப்பற்படை அவசியம். அதாவது, இப்பொழுது நம்மிடமிருக்கும் கப்பற்படையை விஸ்தரிக்கவேண்டியிருக்கும். நம் தேச மக்கள் கடல்வாழ்க்கைக்குப் பொருந்தியவர்களல்ல என்று சொல்லமுடியாது. பண்டைக்காலம் முதல், நமது வர்த்தகர்கள் கிழக்கே ஆப்ரிக்கா கண்டம் முதல் மேற்கே சீன தேசம்வரை சஞ்சரித்திருக்கிருர்கள். பல்லவ ராஜ்யத்துக் கப்பற்படையைக் கொண்டு நரசிம்ம வர்மன் சிங்கள தேசத்தைப் படையெடுத்தான். ராஜேந்திர சோழன் கீழ் கடலிலுள்ள ஸ்ரீவிஜயமென்னும் நாட்டைக் கைப்பற்றினுன். வங்காளத்தை யாண்ட பாலவம்ச அரசர் மரக்கலப் படையொன்று கொண்டிருந்தனர். சிவாஜியின் சாம்ராஜ்யத்தில் மஹாராஷ்டிரக் கடற்படை அரபிக்கடலைப் பாதுகாத்தது. தற்காலம், இந்தியக் கடற்படையிலுள்ள இந்தியர்களின் திறமையை ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களே சிலாகித்திருக்கின்றனர். ஆகையால், நமக்குக் கப்பற்படைக்கு வேண்டிய ஆற்றலுள்ள ஆட்களிருக்கின்றனர். கப்பல்கள் தயாரிக்க வேண்டிய பெருஞ் செலவைத்தான் நாம் ஏற்கும்படியாயிருக்கும். ஐக்கிய தேசீய ஸ்தாபனத்தின்கீழ் பக்க வட்டாரப் பாதுகாப்பு இணைப்புகள் ஏற்பட்டால், இந்திய சமுத்திரத்திலும் பசிபிக்கடலிலும் அக்கரை கொண்ட தேசங்களான இந்தியா, பாகிஸ்தானம் அரபிநாடுகள், பிரிட்டன், பிரான்ஸ், ஹாலண்ட், இந்தோனேஷியா, ஆஸ்ட்ரேலியா முதலிய நாடுகள் தங்களுக்குள் கருத்தொருமித்து ஓர் தகுந்த கப்பற்படைப் பாதுகாப்பு ஏற்படுத்திக் கொண்டால், ஒவ்வொரு நாட்டிற்கும் தனித் தனியே ஏற்படும் செலவும் சிரமமும் குறைய ஹேது ஏற்படும்.

(2) சென்ற உலக மஹாயுத்தம் நவீன யுத்தங்களில் விமானப் படைகள் எவ்வளவு முக்கியத்துவம் வகிக்கின்றன என்று காட்டியது. சிலர் விமானப் படைகள் ஏற்பட்டு விட்டபடியால் இனி கப்பற்படைகள் தேவையில்லை யென்றும் ஓர் பலமான விமானப்படை கப்பற் படையை முற்றிலும் சேதம் செய்ய வலிமை வாய்ந்தது என்றும் நம்பினுர்கள். ஆனுல், இந்த எண்ணம் தப்பானது என்று இப்பொழுது ருஜுவாகி விட்டது. விமானப்படை எவ்வளவுதான் பராக்கிரமமுள்ளதாயிருந்த போதிலும், கப்பற்படை இன்னமும் அவசியமென்றும், தகுந்த பாதுகாப்புகளுள்ள போர்க்கப்பல்கள் விமானத் தாக்குதலைச் சமாளிக்க வல்லவை என்றும் நிரூபிக்கப் பட்டிருக்கின்றது. ஆனுல் விமானப்படையும் அவசியம்தான் என்றும் பிரத்யக்ஷமாக் கப்பட்டது. நமது மக்கள் விமானப் படைக்கும் தக்க யோக்கியதாம்சமுள்ளவர்கள் என்பது நமது விமானப்படை அனேகமாக இந்திய மயமாயிருப்பதினுலேயே நன்கு நிதர்சனமாகிறது. ஆனுல், நம் தேசத்தின் பரிமாணத்திற்கும் தேவைக்கும் சரியான விமானப்படை ஏற்படுத்துவதிலும் மிகுந்த பணச் செலவு ஏற்படும். இவ்விஷயத்திலும், சமீபத்திலுள்ள மற்றநாடுகளுடன் சமரசமாகக் கலந்து பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

(3) இதுவரை, அன்னிய சர்க்காரின் தாசர்களாக இருந்த நமது போர் வீரர்கள் தேசபக்தியின் காற்றுக்கூட அவர்கள் மேல் அடிக்காது ஒதுக்கப்பட்டிருந்தனர். இந்தப்புதிய சகாப்தத்தில், அவர்களிடம் தேசவிசுவாசமும் இந்தியாவின் மகிமையில் நம்பிக்கையும் நமது புராதன கௌரவத்தில் கர்வமும் ஏற்படும்படியான பயிற்சிகள் கொடுக்கப் படவேண்டும். சமூக ஒற்றுமையில் ஆதரமும் மற்ற மக்களிடம் சகோதரத்துவ மனப்பான்மையும் அவர்களிடம் பரவ வேண்டும். ஆனுல், ராணுவ ஒழுங்கும், அதிகாரிகள் யாராயிருந்தாலும் உடனே கீழ்ப்படியும் சித்தவிருத்தியும் இதுவரை

இருந்ததைப் போலவே அவர்களிடம் இருக்க வேண்டும். முக்கியமாக ராஜீய விஷயங்களில் அவர்கள் தலையிட விடவே கூடாது,

(4) பாதுகாப்புப் படைகளுக்கு அவசியமான தளவாடங்கள் நம் தேசத்திலேயே உற்பத்தி செய்ய வேண்டும். நவீனயுத்தம் இயந்திர சாதனங்களைக் கொண்டது. இந்த இயந்திர சாதனங்களைப் பெருக்குவதென்றால், நம்நாடு கைத்தொழில் வளர்ச்சி பெருகி உன்னத நிலையடைந்தால்தான் இயந்திரங்களை மற்ற விஷயங்களில் உபயோகிக்கச் சாத்தியமாகும். ஆகையால், நம் தேசத்துப் பொருளாதார நிலைமை இன்னம் சீர்படவேண்டும். இவைகளையெல்லாம் நம்முடைய உன்னத தேசத்தலைவர்கள் மனதில் கொண்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்களுக்குற்ற உதவி புரிவது நமது பொறுப்பு.



ஆனந்தத்திற்குப் பங்கிடுண்டோ ?

# BMB மிஷீன் கலப்பைகளின் வெளிப்படையான உண்மைகள்

1. ஒரு நாளைக்கு சுமார் 2 ஏக்கரா பூமியை ஏர் உழும் 10 ஏக்கராவைப் பரம்படிக்கும்.
2. களைவெட்டுதல், பயிரிடுதல் விதை விதைத்தல், உரமிடுதல் முதலிய வேலைகளைச் செய்யவும்.
3. சுமை இழுக்கவும், பெல்டினால் ஓட்டப்படும் யந்திரங்களை உபயோகிக்கவும் உதவும்
4. மிகக் குறைந்தசெலவிலும், அதிக கவனிப்பில்லாமலும், எல்லாவித கால நிலைகளிலும் எவ்வித தொந்தரவும் கொடுக்காமல் உழைக்கும்



1. குதிரை ஓட்டம் (HP.)
3. குதிரை ஓட்டம் (HP.)
6. குதிரை ஓட்டம் (HP.)

முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்

## ஸிம்ஸன் & கம்பெனி லிமிடெட்.

மவுண்ட்ரோட். மதராஸ்.

கிளைகள்: பங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, ஹைதராபாத் (Dn).

# பொருளாதாரப் பிரச்னைகள்

**ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்**

உலகம் பெரியது; பல கண்டங்கள் அடங்கியது; ஒவ்வொரு கண்டத்திலும் பல தேசங்கள்; மலைச் சரிவுகளும், ஆறுகளும் பிரதேசங்களைப் பிரிக்கின்றன. ஒவ்வொரு தேசமும் இயற்கை வளத்தையும் செயற்கை அறிவையும் பயன்படுத்தி நாட்டின் க்ஷேம லாப விருத்தியை நாடுகிறது. லக்ஷியம் ஒன்றாயினும், லக்ஷிய சித்தியில் வேற்றுமை காண்கிறது. ஒரு நாடு முன்னேறவும், இன்னொரு நாடு பின் வாங்கவும் காரணம் என்ன? சரித்திரம் இதையே விளக்குகிறது. விளக்கத்தை அறிய, காலக் கண்ணாடி வேண்டும். உலகம் சலனமற்றுக் கிடக்கவில்லை. பெரிய பரப்பில் பல சக்திகள் ஊசலாடுகின்றன. அறிவும் அநுபோகமும் பெருகப் பெருக, புதிய புதிய சக்திகள் பிறக்கின்றன. அவைகளின் விசையும் வீச்சும் அளவிலடங்காதவை. இதற்குச் சிறு உதாரணம் போதும். சென்னையிலிருந்து பம்பாய் செல்வதென்றால், 36 மணி நேரம் ஆயிற்று; இன்று 3½ மணி நேரம் போதும். டில்லிக்குப் போவதென்றால் 50 மணி நேரம் ஆயிற்று; இன்று 5 மணி சாவகாசம் போதும். நடையை மிஞ்சிற்று வண்டி; வண்டியை மிஞ்சிற்று ரயில்; ரயிலை மிஞ்சிவிட்டது விமானம். பிரிட்டிஷார் இந்தியாவை அடக்கியாளப் புகுந்தபோது இந்தியாவிலிருந்து இங்கிலாந்து செல்ல 3 மாதங்கள் ஆயின. படிப்படியாகப் பிரயாண காலம் குறுகி மூன்று வாரங்கள் ஆயின. இன்று விமானத்தில் சென்றால் ஒரு நாள்—24 மணி நேரம் போதும், ஆச்சர்யமான மாறுதல்கள்! விளைவுகள் இன்னும் ஆச்சர்யமானவை. பொருளாதாரத் துறையில் இன்று அதை மதிப்பிடுவோம்.

பொருளாதாரம், சமுதாயத்தின் ஜீவாதாரம். அதைக் காக்கவும் பெருக்கவும் தான் மனித வர்க்கத்தின் முயற்சிகளெல்லாம். பொருளாதாரம் என்றால் என்ன? உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், மனித வர்க்கத்தின் அடிப்படையான தேவைகள். இவை பூர்த்தி செய்வது பொருளாதார சாஸ்திரத்தின் பிரதான நோக்கம். நோக்கம் நிறைவேறச் சட்ட திட்டங்கள்; அமுல் நடத்த அதிகாரிகள்; அதிகாரத்தைக் காப்பாற்ற படைப்பலம். இப்படிப் பல அங்கங்கள் சேர்ந்து ஒரு கவர்ன்மெண்டாக அமைந்து மக்களின் முயற்சிகளைக் கண்காணித்து வருகிறது. முயற்சிகள் பலன்தரவேண்டும். அது ஆளைப் பொறுத்தது, இடத்தைப்பொறுத்தது, தேவையையும் பொறுத்தது. யோக்கியதைக் கேற்றவாறு தொழில் அமைந்து, இடத்திற் கேற்றவாறு பயிர் எழும்பி, தேவைக் கேற்றவாறு நிதானம் கண்டு பொருளாதார நிலைமை உருவாகிறது. பல துறைகளில் உழைக்கும் மக்கள் தங்கள் தங்கள் தேவைகளைப் பரிவர்த்தனை மூலம் பூர்த்தி செய்து கொள்ளுகின்றனர். பொருளோ உழைப்போ நினைத்த மாத்திரத்தில் பரிவர்த்தனை செய்யக்கூடியவையல்ல. இரண்டின் மதிப்பையும் காக்கும் அளவு கோலாக நாணயங்கள் பிறந்தன. நாணயப் பரிவர்த்தனையை அஸ்திவாரமாகக் கொண்டு வியாபார உலகம் உருவாயிற்று. பண்டங்களைக் கிடைக்கும்போது வாங்கவும், வேண்டும்போது விற்கவும் வசதிகள் அமைந்தன. தேவைகள் பெருகின. தொழில்கள் செழித்தன. வியாபாரம் எல்லை கடந்து பிறநாடுகளுக்கும் பரவிற்று: வந்தது வினை அதிலிருந்து, அன்னிய தேச வியாபார உறவு நன்மையில் ஆரம்பித்து, தீமையில் முடிந்தது. வலுவுள்ள நாடுகள் வலுவற்ற நாடுகளை வியாபார நிமித்தம் அடக்கி ஆளக் கிளம்பின. 18–19ஆம் நூற்றாண்டுகளில் கண்ட தொழில் நாகரிகம் இதுதான். தொழில் துறையில் முன்னணியில் நிற்பவர் பின்னவருக்கு இடந்தரவில்லை. போட்டி அவ்வளவு மும்முரம். நியாயமான போட்டியை அநியாயமான வழியில் அடக்க அதிகாரமும் தேடிக் கொண்ட

னர். கீழ்ப்பட்டவர் மேம்பட வழி காணாதது டன் விளைவு நிற்கவில்லை. 'மேம்பட்டவர்களிடையே மாத்சர்யம் மலிந்துவிட்டது. 20-ஆம் நூற்றாண்டில் இரண்டு மகா யுத்தங்கள் மூண்டதற்கு அடிப்படையான காரணம் இதுதான்.

இந்த மகா யுத்தங்கள் பழைய யுத்தங்களைப்போலல்ல; ஒரு பிரதேச எல்லையில் அடங்கவில்லை; ஒரு பருவத்தில் முடிவு காணவில்லை; பல வருஷங்கள் நடந்தன. வருஷம் பூராவும் நடந்தன. உலகெங்கும் பரவின. எந்தத் தேசமும் ஒதுங்கி நிற்க இயலவில்லை. சண்டையும் சாமான்யமானதல்ல. தரைச் சண்டையுடன் நிற்கவில்லை. கடலில் சண்டை; ஆகாசத்திலும் சண்டை. சண்டை போர் முனையுடன் நிற்கவில்லை; சாதாரண மக்களையும் சுழலில் இழுத்துவிட்டது. நவநாகரிகத்தை வளர்த்துவந்த ஆக்க சக்திகள் அழிவுத் துறையில் இறங்கிவிட்டன. பொருள் சேதத்திற்குக் கணக்கில்லை. உயிர்ச்சேதம் முன்பின் கேட்டிராத அளவு. யுத்த காலத்தில் அறிவுக்கேற்பட்ட அதிர்ச்சி ஆழத்தில் ஆழ்ந்த அநாதி தர்மங்களுக்கு உயிர் ஊட்டுமென்று பலர் நினைத்தனர். மனிதப் பிறவியின் மதிப்பு மீண்டுவிட்டதாகச் சிலர் மனப்பால் குடித்தனர். உலகம் அவ்வளவு சுலபமாகத் திருந்திவிடாது. இப்பால் நடந்துவரும் சம்பவங்கள் நம்பிக்கையூட்டவில்லை. யுத்தம் முடிந்து இரண்டு வருஷங்களாகின்றன. சமாதானம் இன்னும் நிலவவில்லை. யுத்த சேதம் ஈடாகப் பல வருஷங்கள் செல்லும். பொருளாதாரம் திருந்த இன்னும் காலமாகும். அவகாசம் கிடைக்குமா? சந்தேகக் குறியே எங்கும் காண்கிறது. மனதிலே நிம்மதியில்லை. யுத்த பயம் உலகத்தை விட்டு அகலவில்லை. நேற்று வரையில் கொழுத்துக் கொக்கரித்த தேசங்கள் தம் நலத்தை மிகைப்படுத்தி மதியிடுவது இயற்கை; ஒடுங்கி அடங்கிக் கிடந்த தேசங்கள் சுவாதீன லக்ஷணங்களை மிகைப்படுத்தி மதிப்பிடுவதும் இயற்கை. பரஸ்பர பந்தம் பிறக்கவேண்டும். சந்தேகம் உள்ள வரையில் சமாதானம் துலங்குமா?

உலகத்தின் எல்லை வர வர குறுகி விட்டது. உறுப்புகளினிடையே தொடர்பு பெருகி விட்டது. பழைய பொருளாதாரக் கொள்கைகள் புதுயுகத்திற்குப் பயன்படா. சுவாதீன லக்ஷ்யமே உருமாறி வருகிறது. எந்தத் தேசமும் இனி தனித்து நிற்பதற்கில்லை. எந்தத் தேசமும் தன் அளவுக்குத் துர்த்தசையை தவிர்க்கவோ தன் பலத்தைக் கொண்டு எல்லையைக் காக்கவோ இனி இயலாது. சமுதாயத்தின் பரிமாணம் இன்று உலகளவுக்கு எட்டி விட்டது. ஆங்காங்கு நாகரிகச் சின்னங்கள் மாறுபட்டிருக்கலாம்; நடையுடை பாவனைகளில் வேற்றுமை காணலாம். அடிப்படையில் மனிதவர்க்கம் ஒன்று; ஆதி தேவைகளில் வேற்றுமையில்லை. இந்த உணர்வுடன் புதிய திட்டம் வகுக்க வேண்டும். கூட்டுறவில் உலகம் விமோசனத்தைக் காணவேண்டும். சமாதானகாலத்தில் அது உருவாகவேண்டும். கால பலத்தால் உரம்பெற வேண்டும். பொருளாதாரத்துறையில் புது உறவு பரவிப் பெருகவேண்டும். மாறுதல் எளிதல்ல. புதிய திரையில் எழுதும் சித்திரமல்ல. மறைத்தும் மாற்றியும் பழைய திரையைப் புதுப்பிக்கவேண்டும். வர்ணங்களைத் தீட்டி உருவமைக்கும் போது லக்ஷ்யத்தில் தெளிவு காணவேண்டும். மனித வர்க்கம் படிப்படியாக, பேரறிவை எட்டி வந்திருக்கிறது. தான், தன் குடும்பம், தன் இனம், தன் தேசம் என்ற லக்ஷியம் விசாலித்துக் கொண்டே வந்திருக்கிறது. லோக நலம் தன் நலம் என்ற அறிவு பெருகவேண்டும். அப்பொழுதுதான் பொருளாதாரத்தின் வரையறைகளை உணர்வது சுலபம். பிறர் வாழ-தான் வாழலாம், பிறர் செழிக்க—தான் செழிக்கலாம் என்ற லோகாயதமான தர்மம் நிலைபெறும். லக்ஷ்யம் பின்னப்பட்டுள்ள வரையில் பொருளாதாரம் சமயோசித தர்மங்களுக்குக் கட்டுப்பட்டுக் கிடக்கும். நிலையில்லை; நியாயமில்லை; நிம்மதியுமில்லை.

வாழ்வின் லக்ஷ்யம் துலங்க வாழ்வின் தரம் உயரவேண்டும். போக போக்கியங்களை அனுபவித்தவர்தான் அதன் குறைபாடுகளை அறிவர். பசியும் பிணியும் வாட்டுவோரிடையே தர்மோபதேசம் ஏருது. வாழ்வின் தரம் உயர வாழ்வை நடத்தத் துறைகள் பெருக வேண்டும். காலக்ஷேபத்திற்கு வேண்டிய சம்பாத்தியம் இருக்கவேண்டும், சுவாதீன நாடுகள் இதைக்காத்து வந்திருக்

கின்றன. ஏகாதிபத்திய நாடுகள் தன் நலம் பேணி, சார்பு நாடுகளைப் பறித்து வந்திருக்கின்றன, தொழில் நாகரிகம் ஏழைகளை ஏழ்மையில் ஆழ்த்தி, பணக் காரர்களுக்குப் பணத்தைக் குவித்து உலக சமாதானத்தைக் குலைத்து விட்டது. பணமே பிரதானம் என்ற பிரமை எங்கும் பரவிவிட்டது. அது மாற வேண் டும். விமோசனத்திற்கு வழி அதுதான். இகத்தையொட்டிப் பார்த்தாலும், பரத்தை யொட்டிப் பார்த்தாலும் பொரு ளாதார நிலைமை திருந்த வேண்டும், திருந்த வழியென்ன? சகோதரபாவம் பெருகவேண்டும். சமதர்மம் பெருக வேண்டும். பசியேப்பக்காரனையும் புளியேப்பக்காரனையும் ஒன்ருக வைத் துப் பேசுவது தவறு. வியாபாரத்திற்குத் தடையிருக்கக் கூடாது என்றும் விளை பொருள்கள்பெற எல்லோருக்கும் வசதி யிருக்க வேண்டுமென்றும் சொல்லுகிருர் கள். இது கபடவாதம். சார்பு நாடுகள் சம்பந்தப்பட்ட வரையில் இது செல் லாது. அவைகளின் வாழ்வின் தரம் உயர இது வழிவிடாது. இந்திய நிலை மையே இதற்குச் சிறந்த உதாரணம். இங்கே பலவகைத் தொழில்கள் வளர வசதியிருந்தும் உருவாகவில்லை. போக்கு வரத்து சாதனங்கள் உற்பத்தி செய்ய வழி விடவில்லை. ரஸாயனச் சாலைகள் அமைய இடம்தரவில்லை. சமாதானத் தைக் காத்திருக்கலாம். யுத்தத்தை தவிர்த் திருக்கலாம். ஆனல் இரண்டுக்கும் இட மில்லாமல் போய்விட்டது. காரணம் என்ன? அதிகாரம் அன்னியர் கையில் இருந்தது. பிற நாட்டின் நன்மையை உத் தேசித்து இந்த நாட்டின் நன்மை பறி கொடுக்கப்பட்டது. சோதனைக்காலத்தில் இரண்டு நாடுகளுக்கும் கேடாகவே முடிந்தது. இன்று இரு நாடுகளுக்கும் இருந்த பழைய உறவுமாறி, புதிய உறவு பிறந்து வருகிறது. வலுத்தால் இரண் டுக்கும் லாபமுண்டு. இதே மாதிரி கீழ் நாடுகள் பல உருமாறி வருகின்றன. எந்த அளவுக்குப் புதிய சக்திகளை ஆக்க வழி யில் திருப்புகிருர்களோ, அந்த அளவுக்கு உலகத்திற்கு க்ஷேம முண்டு. இல்லையேல் உலகத்தை அழித்துவிடும். ஐக்கிய நாடுகள் விழிப்புடன் நடந்து கொண்டா லொழிய விமோசனமில்லை. யுத்த அனுப வங்கள் மறையுமுன் மனம் மாறவேண் டும். மாறினல் மட்டும் போதாது. செய லளவில் பரிணமிக்க வேண்டும்.


பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

**குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து**

**சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்**

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனல் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிருர்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

**போலி மருந்துகளைக்கண்டு ஏமாருதீர்கள்**

## டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

1, தெற்கு மாடவிதி, மயிலாப்பூர், மதராஸ்.

**கும்பகோணம் கிளை :—**
7, சாரங்கபாணி கோவில் மேலவீதி.

**திருச்சி கிளை :—**
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

# அஹிம்ஸா தண்டனை

எம். எஸ். கமலா

அன்று முழுமதி முறுவலிக்க வேண்டிய நாளாயிருந்தும் வானம் இருண்டு தானிருந்தது. இயற்கையின் மாறுபாட்டைச் சகிக்கும் தன்மை மானிடர்களுக்கு அரிது. அதிலும் நொந்த உள்ளங்கள் இயற்கையில் எம்மாதிரி வேறுபாட்டை நோக்கினும் நடுநடுங்கு மல்லவா?

ராஜபுதானத்திற்கடுத்த காட்டில் ராக்ஷத இருள் படர்ந்திருந்தது. பெரிய பெரிய காட்டு மரங்களெல்லாம் உறுமிக்கொண்டு நிற்கும் பூதகணங்களைப்போல் தோன்றின. அந்தப் பயங்கரத் தோற்றத்திற்கு இருக்கும் சப்த ஸ்வரங்கள் போல் அவ்வப்பொழுது வன விலங்குகளின் கூக்குரல்கள் எழும்பின. கருடப்பாறைக் கருகிலுள்ள மலைக்குகை வாயிலில் இருமிக்கொண்டே நாற்பது வயதிற்கு மேற்பட்ட மாதொருத்தி அவ்வப்பொழுது எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள். தாரா நாதனில்லாததால் எத்தனை ஜாமங்கள் கழிந்தனவென்பது தெரியாமல் துடி துடித்தாள். நிலையற்றுத் துடிக்கும் அவள் மனதை ஒரு நிலைக்குக் கொண்டுவர தேவி புவனேச்வரியின் முன் அமர்ந்து பூஜை செய்து கொண்டிருந்தாள். காற்றில் விளக்கு, பட படவென்று அடித்துக்கொண்டு உயிர் போகும் ஜீவன் போல் ஊசலாடியது. வெளியில் செடி கொடிகள் காற்றிலசைந்தாடும் கோரக்குரலுடன் கதம்ப மணத்தை அள்ளிக் கொண்டுவந்து அந்த மாதின் மேல் அப்பிச் சென்றது. அச்சமயம் அந்தக் குகை வாயிலில் அழகும் வீரமும் ஒன்று கலந்து செதுக்கியது போல் ஒரு இருபது வயது வாலிபன் நிமிர்ந்த நடையுடன் இருட்டில் ஜ்வலிக்கும் தன் கண்களைக் குகைக்குள் செலுத்தியபடி வந்து நின்றான். பூஜை செய்யும் மாதின் முன் புவனேச்வரி சிரித்துக் கொண்டிருந்தாள். அந்த ஓங்காரிக்கு இந்தக் கோரநாதம் இன்ப நாதமா இருக்கிறதோ என்னவோ? தேவியின் முன் ஒரு சிறிய வெள்ளிப் பெட்டி திறந்திருந்தது. அதில் அழகிய முத்து மாலையும் அதன் நடுவிலிரண்டு சிறிய சித்திரங்களும், அச்சித்திரங்களின் மார்பகத்தில் இரண்டு மோதிரங்களுமிருந்தன. பூஜை செய்து கொண்டிருந்த அவள் கண்கள் நீரை வடித்துக் கொண்டிருந்தன.

அவள் கைகளைக் குவித்து “அம்மா’ பவானி! பதினெட்டுச் சித்திரை பௌர்ணமிகளைத் தள்ளி விட்டேன். குழந்தை அமரன் குமார அமரன் ஆகிவிட்டான். வீர அமரனிடம் உன் வீரமும் உன் கணவனின் சாந்தமும் அப்படியே அடிபணிந்து கிடக்கின்றன. இந்த ராஜபுதனத்தில் வீர அமரசிம்மனுக்கு இணை யாருமில்லை. அவனை மேவாட் சிங்காதனத்தில் ஏற்றிவிட்டால் என் கடமையிலிருந்து விடுபட்டுக் கூண்டிலிருந்த பறவை விடுதலை பெற்றுக் கவலையற்றுக் கனவேகமாய், சிறகை அடித்துக் கொண்டு வான வீதியில் பறப்பதைப் போல் உடலாகிய கூண்டைவிட்டுப் பறப்பேன். தாயே! இன்னும் நாட்டரசன், ஆகவில்லை. காட்டரசனாக இருக்கிறான். அவனை அரியணையிலேற்றிவிட்டு.........” என்னும் போது வாலிபனால் இன்னும் பொறுமையாய் நின்றிருக்கக் கூடாமல் போகவே “அம்மா” என்றழைத்தபடி அவளருகிலமர்ந்தான். அவன் காலடி ஓசை கேட்டதுமே சட்டென்று பெட்டியை மூடி, புவனேச்வரி பாதங்களின் கீழ்வைத்து மலர்மாலைகளைப் போட்டு மூடினாள். அவன் இடையிலிருந்த வாள் சடாரென்று சத்தம் செய்தது. அந்தமாது அவனை அன்புடன் பார்த்தாள். அப்பார்வையில் ‘இந்த அரக்க இருளில் எங்கு அலைந்தாயடா?’ என்ற அன்புக் கேள்வி துளிர்த்தது.

“அம்மா அமைதியான இரவை அல்லற்படுத்தும் இந்நேரத்தில் என்ன பூஜையம்மா?” என்றான் அவள் பாதங்களை மெல்ல பிடித்துக்கொண்டே. “என்னவோப்பா; அல்லல்படும் மனதிற்குச் சாந்தி வேண்டும் போதெல்லாம் அன்னை புவனேச்வரியைத் தியானிக்க வேண்டியது தானே! இத்தனை நேரம் காட்டில் என்ன செய்தாய்?” என்று அவன் முகத்தை உற்றுப் பார்த்தவள் திடுக்கிட்டு, “குழந்தாய்! உன் முகத்திலேன் இத்தனை படபடப்பு?” என்று அவன் முதுகைத் தடவினாள். அவள் அன்புக் குரல் அவன் நாக்கைக் கட்டிவிட்டது. மௌனமாய், புவனேச்வரியின் பாதங்களின் கீழிருக்கும் பெட்டியையே உற்றுப் பார்த்தான். அவள் குரல் தழுதழுக்க “குழந்தாய்!”

என்னைப் படுகுழியில் வீழ்த்திப் பாபியாகச் செய்து விடாதே; நான் உனக்கு எத்தனைமுறை சொல்வது? முழுமதி காலத்தில் சந்திரோதயத்திற்குப் பின் வெளியில் செல்லாதே என்று?" என்று அன்புடன் கடிந்து கொண்டாள்.

"இல்லையம்மா; ராணா சங்க்ராமசிம்மர் கட்டிவைத்திருக்கிறார் பார் சிங்கமுகம், அங்கு......"

"அங்கு என்ன அமரா?" என்று பதை பதைக்கக் கேட்டாள்.

"ஏனம்மா பயப்படறே! ஒன்றுமில்லை. அங்கே தினமும் நான் சென்று அந்தக் கற்சிங்கத்தைத் தடவுவேன். அதைத் தடவும் போது என்மனம் சிலிர்க்கும். உயிருடன் சிங்கத்தைப் பிடித்து அதன் வாயில் கத்தியைச் சொருகி, குரல்வளையைக் கிழித்தால் என்று நீங்கள் சொன்ன வீரச் செயல் நினைவுக்கு வந்து விடும். அவர் வீரத்தை நினைக்கும் போது அத்தகைய வீரரிடம் வாட்போரைக்கற்கும் பாக்கியம் நமக்கில்லாமல் போச்சே என்று தோன்றும். அந்தச் சிங்கத்தை ஒரு முறை தொட்டு, வில்லைக்கையில் எடுத்தால் எனக்கு என்றுமில்லாத உற்சாகமும் ஊக்கமும் தோன்றும். இன்று முழுமதியல்லவா? நம் குகைமுன் புதியவித வாட்போர் பயிற்சி பெற உத்தேசித்து நண்பர்களை அழைத்துச் சென்றேன்" என்று கிழவியின் முகத்தைப் பார்த்தான். அவள் முகம் வெளிறிக் கிடந்தது; கற்சிலை போல் அசையாமல் வீற்றிருந்தாள்.

"அம்மா! ஏன் அப்படியிருக்கிறீர்கள்? பயங்கரமான செய்தி ஒன்றுமில்லை. நண்பர்களை அழைக்கச் சிங்கமுகத்தருகில் சென்றேன். சிங்கத்தின் காலடியில் ஒரு வீரன் நினைவற்றுக் கிடந்தான். அவனை உற்றுப் பார்த்தேன். அம்மா! பாபம், என் வயதுதானிருக்கும். எந்த மிருகம் அடித்துவிட்டதோவென்று உற்றுப் பார்த்தேன். அந்த வீரனருகில் பாம்பு சென்ற சுவடு தெரிந்தது. சட்டென்று தொட்டுப் பார்த்தேன். அவன் உடலில் சூடு இருந்தது, மார்பு அடித்துக் கொண்டிருந்தது, அம்மா! நீ சொன்ன பச்சிலைச் சாற்றைக் காதில் பிழிந்தேன், அதற்குள் நண்பர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் சகாயத்துடன் சிகிச்சை செய்து அவனைப் பிழைக்கச்செய்தேன். அவன் மேவாட் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வீரன். பாபம் இன்று பிழைத்துக் கொண்டான். பாபம்! அவன்தாய்கூட உன்னைப்போல் பிள்ளைக்காக எத்தனை ஆவலுடன் காத்திருப்பாள். அவனை எடுத்துக் கொண்டு போய் காட்டுக்கு வெளியே விட்டுவரச் சொல்லிச் சார்த்தூலசிங்கனை அனுப்பி விட்டுத் திரும்பினேன். ரோஹிணி தாராநாதனைச் சிறை செய்து விட்டாள். இருள் ராணிக்குக் கோபம் வந்து விட்டது. கோரமாய் அலற ஆரம்பித்து விட்டாள்" என்று கலகலப்பாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பு, குகையையே அதிரச் செய்தது. அவள் முகம் இன்னும் அதிகமாய் வெளுத்தது.

"அ...ம...ரா!" என்றாள்.

"ஏன் அம்மா!" என்றான்.

"எனக்கொரு சகாயம் செய்வாயா?" குரலில் அழுத்தம், பேச்சில் கெஞ்சுதல் ஒருங்கே ஒலித்தன.

"இதென்ன கேள்வியம்மா? உங்களுக்கு நான் சகாயம் செய்வதா? என்னை இம்மாதிரி கேட்டுப் பதிதனாக்காதீர்கள். தாய்க்குப் பிள்ளை, அவள் விரும்புவதையெல்லாம் செய்யக் கடமைப் பட்டவன்"

"ஆம் அமரா! நீ கடமைப் பட்டவன் குமாரா! நானும் என் கடமையைச் செய்து முடிக்க வேண்டும். என் உடல் மிகவும் பலஹீனமாகி விட்டது. உன்னிடம் ஒன்று கேட்கிறேன்."

"அம்மா! நீங்கள்தானே என் கடவுள், குரு, தந்தை எல்லாம். உங்கள் விருப்பம் எதுவோ கேளுங்கள், என்தலை போனாலும் செய்கிறேன். ஆனால்........."

"ஆனால்...என்ன குமாரா?"

"ஒன்றுமில்லை" என்று தயங்கினான். அவன் பார்வை அப்பொழுதும் அந்த வெள்ளிப் பெட்டிமேலிருந்தது.

"சொல்...நீ சொல்லாவிட்டால் நான் கேட்கவேண்டியதைக் கேட்க மாட்டேன். நான் கடமையைச் செய்யாமல் கண்களை மூடுவேன். அதற்கேற்ற தண்டனையை அங்கு பெறுவேன்." அவன் முகத்தைப் பார்த்தாள். அந்த முகத்திலிருந்த வெறுப்பு நீங்கி, சிவப்புத்திரை படர்ந்தது. அதில் அவள் கோபம் நன்கு தெரிந்தது.

அவன் அப்பொழுதும் தயங்கிய படியே பணிவாய், "அம்மா! புவனேச்வரியின் பாதங்களின் கீழ் சரணடைந்து கிடக்கும் அந்த வெள்ளிப் பெட்டியைக் காண்பிக்க வேண்டும்" என்றான். அவன் பிரகாசமான கண்கள் பளபளவென்று மின்னின. அவள் சிவந்தமுகத்தில் சாந்தம் மிளிர்ந்தது.

உதட்டுக்கிடையில் புன்னகை பூத்தது. உடனே கண்ணீரும் கன்னங்களில் உருண்டது.

"அம்மா!" என்றான் பரிதாபமாய்.

"குழந்தாய்! இனி நான் ரகசியத்தைக் காப்பாற்ற வேண்டியதில்லை. நீ யார், தெரியுமா?."

"அது கூடவா தெரியாது. நான் வீர அமரசிம்மன், நீங்கள் அவனை ஈன்றதாய்" என்றான் பெருமையாய்.

"அதுதான் இல்லையப்பா!" என்று வெகு நிதானமாய் வெள்ளிப் பெட்டியைப் புவனேச்வரியின் பாதத்தின் கீழிருந்து எடுத்துத் திறந்தாள் அவன் தலை சுழன்றது. அந்த இருண்ட வானம் இடிந்து அவன் தலைமேல் விழுந்தது போலிருந்தது. பிரமை பிடித்தவன்போல் அவளையே பார்த்தபடியிருந்தான்.

"குழந்தாய்! வணங்கு! இந்த வீர தம்பதிகள்தான் உன் பெற்றோர்கள்"

"அம்மா! என்னை ஏன் சோதிக்கிறீர்கள்?" என்று அந்தச் சித்திரங்களுக்குப் பய பக்தியுடன் வணங்கி, கைகட்டி நின்றான்.

"கால்வலிக்குமடா! குழந்தாய்! இப்படி என் தொடைமேல் தலையை வைத்துப் படுத்துக்கொள்" என்று அன்புடன் அவன் கைகளைப் பற்றி இழுத்தாள்.

* * *

மதயானை மாவுத்தனிடம் பணிந்திருப்பதுபோல் உடல் மெலிந்து, தோல்சுருங்கி, ரத்தம் செத்து, எலும்புக்கூடாக இருக்கும் அவள் தேய்ந்ததுடையில் தன் கம்பீரமான தலையை வைத்துப் படுத்து அவள் முகத்தையே உற்றுப்பார்த்தான் வீரன். அவள் அன்புடன் அவனை வருடியபடி "குமாரா! சொல்வதைக் கவனமாய்க் கேள். அன்று முழுமதிமுறுவலிக்க வேண்டிய நாளாயிருந்தும் வானம் இருண்டுதான் கிடந்தது. மேவாட் நகரத்தெருக்களில் அமைதி குடிகொண்டிருந்தது. அரச மாளிகையில் மாத்திரம் அமைதியைக் காணவில்லை. உப்பரிகையில் படுத்திருந்த ராணி பவானிபாய் இருள்படர்ந்த வானைப்பார்த்துப் புரண்டு கொண்டேயிருந்தாள். கோட்டைக்காவலன் பன்னிரண்டு மணியானதை அறிவிக்க, கோட்டை வாயில் மணியை ஓங்கி ஓங்கியடித்தான். அந்த மணியோசை காற்றுடன் கரைந்து வந்து விழித்துக் கொண்டிருப்பவர்களை எச்சரித்து, தூங்குபவர்களை அசைக்கச் சக்தியற்று அடக்கமாய் மறைந்தது.

பவானி திடுக்கிட்டு நாற்புறமும் பார்த்தாள், முகத்தில் முத்து முத்தாய் வியர்வை படர்ந்தது. அருகில் நின்று மயில் விசிறியால் விசிறிக்கொண்டிருந்த சந்திராவதி 'அம்மணீ! ஏன் இப்படிப் புரளுகிறீர்கள்?' என்றாள்.

"அடி சந்திரா, என்மனம் ஏனோ பதபதைப்புடன் பெரிய ஆபத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதடி" என்றாள் சொல்லறியாச் சங்கடத்துடன்.

"அம்மணி! கனவிலும் கேடுநினைக்கக் கூடாது. அமரனை எடுத்து வரட்டுமா?"

"அம்மா என்ன இது? அமரனா?"

"ஆம் குமாரா? குறுக்கிடாமல் கேள்"

"அமரனும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்." என்று குப்புறப் படுத்தாள். அவள் உடல் குலுங்குவது சந்திராவதிக்குத் தெரிந்தது. அவள் மனம் துடித்தது.

"அம்மணி! இதென்ன அனியாயம். அரசர் மனைவியாயிருக்கும் உங்களிடம் இம்மாதிரி பலஹீனம் திடீரென்று தோன்றக் காரணம்? மஹாராணி!" என்று அவள் கலைந்த கூந்தலைச் சரிப்படுத்தினாள்.

"சந்திராவதி! மஹாராணியென்றால் மாத்திரம் மனம் வேதனையில் வெதும்பாதா? அவர் ராஜகோட் போய் ஒரு வாரமாகிறதே; அவர் வருவாரா?" என்று விம்மினாள்.

சந்திராவதியின் மனம் துணுக்குற்றது. "மஹாராணி! வராமல் எங்கு போவார்?" என்றாள் தன்வேதனையை உள்ளடக்கிக் கொண்டு.

"சந்திரா; என் மனச்சங்கடத்தை விவரித்துச் சொல்லத் தெரியவில்லையடீ; அவர் போகும் போது "பவானி! ஒருவாரத்தில் வந்து விடுகிறேன் அதுவரை அமரனைப் பாராமல் எப்படி இருப்பதென்றுதான் தெரியவில்லை. சீக்கிரம் வந்து விடுகிறேன்" என்று சொல்லிச் சென்றார்.

"பின் ஏன் கலங்குகிறீர்கள்? வந்து விடுவார். கவலைப் படாதீர்கள்.,'

"அவர் புறப்படும் போதும் புவனேச்வரி பூஜை செய்து கொண்டிருந்தேன். அவர் வந்து நின்றார். அவர்காலில் பணிந்து, பாத தூளியை ஏற்று எழுந்திருக்கும் போது

தலையிலிருந்த புஷ்பச் செண்டு கீழே விழுந்து விட்டது. எனக்குப் பகீலென்றது, குனிந்து வெகு அவசரமாய் எடுத்து எழுந்தேன். கையிலிருந்தும் நழுவி விழுந்தது. அவர் அதைக் குனிந்து எடுத்த படியே என்னைப் பார்த்தார். நான் ஒன்றும் தோன்ருமல் நின்றிருந்தேன். நெற்றியில் திலகம் அழிந்திருந்தது, அவர் சிரித்துக் கொண்டே, "எப்பொழுதும் நிதானம் கிடையாது, அவசரமென்ன?" என்று அழிந்த திலகத்தைச் சரியாயிட்டுச் சென்ருர். அவர் வருவாரா?"

"வராமல் எங்கே போவார்?"

"ஐயோ; நீ பைத்தியமடி! இன்று இந்த வானத்தின் கோலம் என்னை என்னவோ செய்கிறது?" என்று தேம்பித்தேம்பி அழுதாள். சந்திராவதியின் மனம் உருகி விட்டது.

"உங்களுக்கொன்றும் குறைவு வராது. புவனேச்வரி துணையிருப்பாள். என்று சொன்னலும் அவள் மனத்திற்குள்ளேயும் பயம் தோன்றியது. அவளும் வானமுகட்டைப் பார்த்தாள். எங்கோ சாக் குருவி கூவிக்கொண்டு பறந்தது அவளை நடுங்கச் செய்தது. ஏகலிங்கேசுவரன் கோயிலைப் பார்த்துக் கைகுவித்தாள். அங்கிருந்த வௌவால்கள் பறந்து ஓடுவது தெரிந்தது. மறுபடியும் வானத்தை உற்றுப் பார்த்தாள் வடகிழக்கு மூலையில் பள பள வென்று பிரகாசித்துக் கொண்டிருந்த நக்ஷத்திரம் பூமியில் உதிர்ந்தது. அவள் தன்னையறியாமல் "ஐயோ!" என்ருள். அப்பொழுது தான் கண் அயர்ந்த ராணி பவானி,

"என்னடீ சந்திரா?" என்று அலறிக் கொண்டெழுந்தாள்.

"ஒன்றுமில்லை. வௌவால்போல் தோன்றுகிறது. தலையிலடித்துக் கொண்டோடுகிறது. பயந்து விட்டேன்" என்று மழுப்பினுள். பவானி தன் கட்டிலை விட்டிறங்கி, இரண்டு வயதுக் குழந்தை அமரசிம்மன் தூங்குமிடத்தில் போய் நின்ருள். அவள் பின்னே சந்திராவதியும் போய் நின்ருள்.

"அடி சந்திரா! இவன் வயது வந்தால் தந்தையைப் போலவே இருப்பான். இவன் தோள்களைப் பார்; வீரம் துள்ளுகிறது. வீர வம்சத்தில் பிறந்தவர்கள் கையில் வீரலக்ஷ்மி தாண்டவமாட மாட்டாளா?" என்று அந்தச் சிசுவையே கண் கொட்டாமல் பார்த்தாள் பெருமிதத்துடன்.

"அதில் சந்தேகம் வேறு? நீங்கள் அமரனருகில் படுத்துக்கொள்ளுங்கள். நான் விசிறுகிறேன்" என்ருள், தன் அருமைப் புதல்வனை அணைத்துக்கொண்டு படுத்தாள் பவானி.

* * *

இன்னும் கிழக்கு வெளுக்கவில்லை. கோட்டைக் கதவுகள் திறக்கப்பட்டன. மந்திரி மன்வார்சிங் அந்தப்புர வாயிலில் தலை குனிந்து வந்து நின்ருர். சந்திராவதி உடல் நடுங்க அவர் முன் வந்து நின்ருள்.

"மஹாராணி என்ன செய்கிருர்கள்?" என்ருர் சோகம் மிகுந்த குரலில்.

விடிய விடிய, தூங்காமல் அரசரை நினைத்தபடி அலட்டிக்கொண்டார், இப்பொழுதுதான் குமாரசிம்மனுடன் தூங்குகிருர். எதாவது......"

"ஐயோ! சந்திராவதி! அரசர் வஞ்சகமாய் ராஜ்கோட் மன்னனல் கொல்லப்பட்டார். ராஜ்கோட் படைகள் நம்நாட்டின்மேல் படையெடுத்து வந்து கொண்டிருக்கின்றன. இப்பொழுதுதான் ஒற்றர்கள் மூலமாய்........" என்னும்போதே அந்தப் புரமே இடிந்து விடும்போல் வீரிட்டுச் சாய்ந்தாள் சந்திராவதி.

அந்த இடிந்த குரலில் விழிப்புப்பெற்ற ராணிபவானி படுக்கை அறையை விட்டு ஓடிவந்தாள். அவள் முகம் காளிதேவியைப் போலிருந்தது. இரவு முழுவதும் அழுததால் சிவந்து வீங்கி நிற்கும் இமைகள், படுத்துப் புரண்டதால் கலைந்த கூந்தல், கசங்கிய ஆடை, இத்தனை அலங்கோலமாய் வந்து நிற்கும் மஹாராணியைப் பார்க்கச் சகியாமல் மன்வார்சிங் தலைகவிழ்ந்தார்.

"அரசரில்லாமல் நீர் மாத்திரம் ஏன் இங்கு வந்தீர்?" என்று வெறிகொண்டவள்போல் கூவினுள் அரசி........"

"அரசி...ஊம்...அரசர்...அரசர்......"

"அரசருக்கு என்ன?"

"நம் அரசர் குமார அமரசிம்மன்தான்" என்ருர் தழுதழுத்த குரலில்.

"என்ன? ராஜ்கோட்டுக்குச் சென்ற அரசர்........?

"நஞ்சிட்டு வஞ்சமாய்க் கொல்லப்பட்டார்........ கொன்று விட்டான் பிரதாபசிம்மனின் பிள்ளை"






"லக்ஸ் டாய்லட் சோப்
உங்கள் சருமத்தை
சுத்தமாகவும், கவர்ச்சியுடைய
தாகவும் செய்யட்டும்" என்கிருர்
குமாரி என். ராஜம்

LTS. 168-111-40 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

"அந்தோ விதியே! நீ என்னிடம் எட்டு நாட்களுக்கு முன்பே விளையாடி விட்டாயே!" என்று தலையிலறைந்து கொண்டாள். அதற்குள் பணிப்பெண்கள் ஓடி வந்து பவானியின் கைகளைப் பிடித்துக் கொண்டார்கள். சிலர் சந்திராவதியை மூர்ச்சை தெளிவித்தனர். சந்திராவதி ராணியை கட்டிக்கொண்டாள். ராணி தன் மார்பை அழுத்திக்கொண்டு கண்களில் கனல் கக்கப்பார்த்தாள். அவள் முகம் அக்கினிக் குண்டம் போலிருந்தது. கணவனிறந்த சேதி அவள் மனதை முறித்து விட்டது போலும். வெறி கொண்டவள் போல் நிற்கும் அவளை விழித்துப் பார்த்தனர்.

"என் கணவரைக் கடைசி முறையாகப் பார்க்க முடியுமா? அவர் சடலம்"

"மஹாராணி! அந்த உயிரைப் பிடுங்கிக் கொண்ட உடலைக்கூட எடுத்து வர முடியாமல் ராஜ்கோட் வீரர்கள் நம் நாட்டின் மேல் படை எடுத்து வர்து விட்டனர்."

ராணி பவானியின் கண்கள் நீரை வடித்தன. உதடு துடித்தது. நெற்றியைச் சுருக்கிக்கொண்டு ஒரு நிமிஷம் சிந்தித்தாள். அந்த முகத்தில் தேங்கிக் கிடந்த துக்கம் எங்கே? வீரம் பொங்கி எழுந்தது. பசித்த பெண் புலி போல் 'ஹாம்' என்றாள். அரச மாளிகையே அந்தக் குரலுக்கு அதிர்ந்தது.

"மன்வார்சிங்! நம் படைகளை] அணி வகுத்து, கோட்டையைச் சுற்றி நிற்க வையுங்கள். சேனாதிபதி சேவக்ராமைக் கோட்டைக்குத் தென்புறம் கஜானாவின் முகத்வாரத்திற்கருகில் நிற்க வையுங்கள். வடபுற வாயிலில் வஜீகுமாரை நிறுத்துங்கள். மேற்குப்புறம் அந்தப்புர வாயிலுக்கருகில் நீங்கள் தலைமை வகியுங்கள். கிழக்குப்புறம் நான் நிற்கிறேன். என் உடலில் உயிர் இருக்கும் வரை அந்தத் துரோகியின் ஆட்கள் மேவாருக்குள் அடியெடுத்து வைக்க விடமாட்டேன். போய்ச் சபையைக் கூட்டுங்கள்" என்று புவனேச்வரியின் அறைக்குள் சென்றாள். விரித்த கூந்தலும் அழிந்த திலகமும் அப்படியே இருந்தன. அன்னை புவனேச்வரியின் முன் மண்டியிட்டு மனப்பாரம் குறையும்மட்டும் அழுதாள். அழுது அழுது தீர்த்தபின் அவள் மனம் துரும்பைவிட லேசாகி விட்டது. எழுந்து வெளியில் வந்தாள். அமரசிம்மனை அறைவாயிலில் வைத்துக் கொண்டு நின்றிருந்தாள் சந்திராவதி. அவன் தாயைக்கண்டு தாவினான். அரசியின் முகம் சப்பிட்டது.

"அதிர்ஷ்டமற்றவனே!" என்று முணுமுணுத்தபடி நடக்கத்தொடங்கினாள்.

"அம்மா!" என்று தலைப்பைப்பிடித்திழுத்தான் அமரன். வாயிற்படியைத்தாண்ட முடியவில்லை. 'ஊம்' என்று சலிப்புடன் எடுத்துக்கொண்டாள். குழந்தை அவள் கழுத்தை நெருடிக்கொண்டே அவள் முகத்தைப் பார்த்துச் சிரித்தான். அவள் குழந்தையை எடுத்துக்கொண்டு மறுபடியும் பூஜை அறைக்குள் நுழைந்தாள். சந்திராவதியும் அவளைப் பின்தொடர்ந்தாள். குழந்தையைப் பூஜா விக்கிரகத்தின் முன் படுக்கவைத்து 'தேவி! உன் கருணை எப்படியோ? இந்த வம்சவிளக்கைப் பிரகாசமாய் ஏற்றிச் சுடர் விட்டெரியச் செய்ய வேண்டியது உன் பொறுப்பு." என்று கண்ணீர்வடித்தாள். சந்திராவதி தன் புடவைத் தலைப்பால் அவள் கண்களைத் துடைத்தாள்.

"சந்திரா! என்னுடன் வளர்ந்து ஆடிப் பாடி எனக்கே தோழியாகவும் வந்தாய். உன் வாழ்க்கை வழியோ மூடப் பட்டு விட்டது. இவன் என் குழந்தையல்ல, உன் குழந்தை. இவனை வீரனாக்கி மேவாட் சிங்காதனத்தில் அமர்த்த வேண்டும். அது உன் கடமை. நான் யுத்தகளத்திற்குப் போகிறேன். என் கணவனைக் கொன்ற காதகனைக் கொன்று என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொண்டு அந்த வஞ்சகனின் தலையை என் குமாரசிம்மன் தொட்டிலில் கட்டிவிளையாடுவேன். இல்லையேல் வீர சுவர்க்கம் சென்று அவருடன் விளையாடுவேன். நஞ்சிட்டுக்கொன்ற வஞ்சகனைக் கொல்லாமல் அந்தப்புர வாயிலை மிதியேன். குழந்தை அமரனின் புகழும், இகழும் உன்னுடையவைதான். இந்தா! என்று அவளிடமிருந்த இரண்டு மோதிரங்களைக் கழற்றி அவளிடமளித்து யுத்தகளத்திற்குச் சென்றாள்" [என்று குரல்வளையைப் பிடித்துக் கொண்டாள் கிழவி. அவள் கண்முன் என்ன தென்பட்டதோ அறியோம். கண்ணீர் மடைதிறந்து கொண்டது. தன்னை மறந்து விம்மினாள்.

* * *

"அம்மா!" என்ற கம்பீரக்குரல் அவளைத் தன்னிலைக்குக் கொண்டு வந்தது. "அப்பா! பதினெட்டுச் சித்திரைகள் பறந்து விட்டன. ஊம்...பெண்ணரசி தலைமை வகித்தாலும் வெகு சாமார்த்தியமாய்ப் போர் நடந்து கொண்டிருந்தது. ராஜ்கோட் படைவீரர்கள் அதிகமாயினும், மேவாட்படைகள் தங்கள் அரசனைக் கொன்ற பாவியைக் கொன்று தம் கட

மையைத் தீர்க்கவேண்டு மென்ற முழு நம்பிக்கையுடன் போர் செய்தனர். மஹா ராணியோ முப்புர மெரித்த முக்கண்ண னின் தேவி போல் வீர விகாரம் செய்தாள் போர்க்களத்தில். வெயிலைப் பார்த்தறியாச் சுகுமாரி கணவனைக் கொன்ற காதகனைப் பழிக்குப்பழி வாங்கி, அரசை நிலை நிறுத்த, தன் துக்கத்தையும் அடக்கிக்கொண்டு வெகு சாமார்த்தியமாய்ச் சத்துருக்களை வெட்டி வீழ்த்துவதைப் பார்த்த மேவாட் வீரர்கள் ஆனந்தத்துடன் 'பழிக்குப் பழி' என்று கூவிக்கொண்டு எதிரில்வரும் ராஜ் கோட் வீரர்களை அனாயாசமாய் அவர வர்கள் வாகனங்களுடன் குத்திக் கொலை செய்தனர்.

இரண்டு நாட்களில் ராஜ்கோட் படைகள் குறைந்து விட்டன. போர்க் களத்தில் ரத்த ஆறுகள் பெருகத் தொடங் கின. மேவாட் ஜனங்களிடம் படைகள் குறைந்திடினும் வீரம் குறைய வில்லை. ஊக்கம் அதிகமாயிற்று. மூன்றாம் நாள் கதிரவன் தன் செங்கிரணங்களை ஆகாயத் தில் வீசவில்லை. அதற்குப்பதில் பூதேவி உதிர ஆடையை உடுத்துக் கொண்டாளோ என்னும்படி மேவாட் தெருக்கள் முழு வதும் உதிர ஆறுகளும் பிணக் குன்றுகளும் வட்டமிடும் கழுகுக் கூட்டங்களுமாயி ருந்தன.

கிழக்குப்புறக் கோட்டை வாயிலின்முன் வீரபவானி நின்று கோட்டைக்குள் பகை வர்களைப் புக விடாமல் தடுத்துக்கொண்டி ருந்தாள். சந்திராவதியின் சகோதரன் ராஜ்கோட் மன்னனை முன்னுக்கு விடாமல் தடுத்துப் போர் செய்துகொண்டிருந்தான். முதல்நாள் போட்ட ரகசியத்திட்டப்படி யுத்தகளத்தில் மாண்டு கிடக்கும் மேவாட் வீரர்களின் உடைகளைச் சில ராஜ்கோட் வீரர்களணிந்து, அரசியின் படையில் சேர்ந்து, தகுந்த சமயத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர். ராஜ்கோட் மன்னனை வளைத்துக் கொண்டிருக்கும் படைகள் அவனைக் கொன்றுவிடும் நிலைக்கு வந்ததை யறிந்த அந்த வீரர்கள் தங்கள் அரசனைக் காப்பாற்ற ஆக்குரோஷத்துடன் பவானி யின் முதுகுப்புறம் அம்பை எய்தனர்.

"என்ன? வீரர்கள் செய்யும் செய்கையா இது?" என்று உறுமினான் வீரன்.

முதுகுப்புறம் ஓசைகேட்கவே திடுக்கிட் டுத் திரும்பிப்பார்த்தாள். முன்புறம் சத்து ருக்கள். இடது கையில் பிடித்திருக்கும் அம்பை அப்படியே இடதுகால் கட்டை விரலால் சுண்டிவிட்டபடியே, வலது கையால் முதுகில் பாயும் அம்பை ஏந்தினாள். அவள் அற்புதத்திறமைக்குச் சத்துருக்கள் உட்பட போர்க்களம் முழுவதும் ஆச்சரியத் துடன் 'ஹா ஹா' என்றுகூவி ஆர்ப்பரிக் கும்போது அவள் மார்பில் விஷ அம்பு பாய்ந்து விட்டது. "அய்......யோ" அமரா! தாயே!! புவனேச்வரி!!! உன் சித்தமிப் படியா?" என்றலறி, மார்பில் பாய்ந்த அம்பை அகங்காரத்துடன் இழுத்து, கடைசி யாய் நாணேற்றி ராஜ்கோட் மன்னன் மேல் எய்தாள். இவள் விட்ட அம்பு அவன் மார்பைத் துளைத்துக்கொண்டு முதுகின்பின் வந்து தொங்கியது. அவன் குதிரை மேலி ருந்து குப்புற விழுந்து மடிந்தான். ராணி பவானி குதிரைமேல் மல்லாந்து சாய்ந் தாள். இருபுற வீரர்களும் திகைத்தனர். "யார் ஜயித்தார்கள்?" என்ற எண்ணம். அதற்குள் மேற்குப்புற வாயிலின் வழியாய் ராஜ்கோட் மன்னன் சகோதரன் அரண் மனைக்குள் நுழைந்து பொக்கிஷ அறையைக் காலி செய்து விட்டான். ஜனங்கள் "ஹா...ஹா" என்றலறிக் கொண்டோ டினர். ராஜசிம்மனின் கண்கள் அரச மாளிகையைச் சல்லடைபோட்டுச் சலித் தன. அவன் தேடிய முக்கியப் பொருள் கிடைக்கவில்லை.

பணத்திலும், வீரத்திலும், புத்தியிலும் குறைந்திருந்த ராஜ்கோட் மன்னர்கள் இன்று உயர்ந்து விட்டனர். மேவாட் அரசர் சங்கிராம சிம்மனின் பொக்கிஷம் தங்கமும் வெள்ளியும் நவரத்தினங்களும் மிகுந்து வீரப்படைகளுடன் விசுவாசத்துடன் துங்க வளநாடாக இருந்ததுதான் காரணம். குமாரா! வீரசிம்மா! உன்தாய் பவானி யின் வாக்கை நிறைவேற்ற நான் கடமைப் பட்டுள்ளேன்" அவன் கன்னங்களை வருடி னான் தன் உலர்ந்த கையால்.

* * *

நரம்பும் தோலுமாயிருக்கும் அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு "அம்மா! என்னை பெற்றவர்கள்......நீங்கள் தான் என்னைப்பெற்றுப் பாலூட்டிச் சிராட்டித் தாலாட்டி வீரனுக்கியது என்று என்மனம் இன்னும் சொல்லுகிறதே."

"குழந்தாய்! உன்னைப்பாலூட்டிச்சிராட்டி வளர்க்கும் அதிர்ஷ்டம் எனக்கும் பெற்ற அதிர்ஷ்டம் என் நேசி பவானிக்கும்தான் கிடைத்தது. குழந்தாய்! ராஜ்கோட் மன்னன் அமரசிம்மன் உன் தந்தையின் வீரபராக்கிரமத்தில் மகிழ்ந்து, அவரைத்தம் மைந்தரில் ஒருவராய்ப் பாராட்டிப் புகழ்ந்து தோளுடன் தோள் இணைந்து இருந்தார். தங்கள் நாட்டில் பணமும் புகழும் தேய்ந் திருக்கவே உன் தந்தையை விருந்துக் கென்றழைத்து நஞ்சிட்டு வஞ்சகமாய்க்

கொன்று பிணத்தைக்கூட, காண்பியாமல் உன் தந்தை இறந்து பத்து நாட்களில் மீவாரைப் பிடித்துக் கொண்டார். உன் பெற்ருேர்களின்.........உன் தாயின் விருப்பப்படி உன்னை உன்தந்தையின் ஆசனத்தில் அமர்த்திவிடின் என்கடமையிலிருந்து நான் விடுபடுவேன்'' என்ருள்.

அதேசமயம் இருண்டவானம் வெளுத்தது. சிறைப்பட்ட சந்திரன் வெளிவந்தான் ''அம்மா! கவலைப்படாதிர்கள்'' என்று விதிர்த்துக் கொண்டெழுந்தான். அந்தப் பெட்டியைப் பார்த்துக் கொண்டே நின்ருன். வெளியில் நண்பர்கள் குரலொலி கேட்டது.குகைவாயிலை அடைந்தான் அங்கு அவன் நண்பர்கள் காத்திருந்தனர். அவன் மனம் குழம்பிக்கொண்டிருந்தது. நண்பர்களை அவரவர்கள் இருப்பிடம் போகச் சொல்லி, குகைவாயிலிலேயே கற்சிலை போல் சாய்ந்து கண்களை மூடினுன்.

விடிந்து விட்டதென்று பறவைகள் பறந்து பாடின. அவனுக்கு விழிப்புத் தட்டவில்லை. ''குமாரா!'' என்று அன்பொழுக அழைக்கும் தாயின் குரல் விழிப்பையளித்தது. சட்டென்று எழுந்து அவள் கால்களில் பணிந்தான். பைத்தியம் பிடித்தவன் போல் காட்டைச் சுற்றிச்சுற்றி வந்தான். கல்லைக் குறிவைத்து வாளால் அடிப்பான்; புல்லைக் குறிபார்த்து அம்பை எய்வான். பெரிய கற்பாறைகள் மேலேறி இடது கையில் வில்லைப் பிடித்து, கால் கட்டை விரலால் அம்பு எய்து பார்ப்பான். அம்மாதிரி செய்யும் போது அவன் மனம் பூரித்துப் புல்லரிக்கும். மூன்று இரவு, மூன்று பகல் ஒடி ஒளிந்து கொண்டது. நான்காவது நாள் காலை எழுந்தான். அந்த மாது புவனேச்வரியின் பூஜையில் தானிருந்தாள். அவன் வில்லம்புடன் காட்டில் நுழைந்தான். சிங்கமுகத்தருகில் ஒரு பதினெட்டு வயது வீரன் அழருப்பிழம்பாய்ப் படுத்து அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். சிங்கமுகத்திற்குப் பின்னிருந்த புதருக்குள்ளிருந்து ஒரு சிங்கம் தூங்கும் அவன் மேல் பாயச் சித்தமாயிருந்தது. தன் தந்தையின் நினைவு வந்தது. சந்தடியில்லாமல் சிங்கத்தின் பின்புறம் சென்று வாளை ஓங்கிப் பாயக்காத்திருக்கும் அதன் பின்னங்கால்களில் வீசினுன். பின்னங்கால்கள் துடைகளுடன் துண்டாகிவிடவே சிங்கம் காடே அதிரும்படி கர்ஜித்து, குட்டிக் கரணம் போட்டபடி தூங்கும் வீரனருகில் விழுந்தது. சட்டென்று அதன் தலையை வெட்டினுன். சிங்கத்தின் கூவலில் வீரன் விழித்துக் கொண்டானெனினும் அமரசிம்மனின் அற்புதத் திறமைக்கு வியந்து பிரமித்துப் பார்க்கும் போதே, அவன் சிங்கத்தின் தலையைக் கொய்ததைக் கண்டு பயத்துடன் நடுங்கியபடி மூர்ச்சையானுன். சிங்கத்தின் ரத்தம் அந்த அழகிய வீரனின் உடலிலும் சிதறியது. வீரஅமரன் பெருமையுடன் அந்தச் சிங்கத் தலையைத் தன் தாய்க்குக் காண்பிக்க, அதைக் கையிலெடுத்தான். அந்தத் தலையிலிருந்து சொட்டிய ரத்தம் நினைவிழந்து கிடக்கும் வீரனை நினைவுபெறச் செய்தது. கண்களை விழித்து எழுந்தான், காட்டரசன் முன் வந்து ''வீரரே! உங்கள் உபகாரத்திற்கு என்ன செய்யப் போகிறேன். நான்கு நாட்களுக்கு முன் சர்ப்பம் தீண்டிய என் சகோதரனைக் காப்பாற்றிய காட்டரசர் நீங்கள்தானென்று அறிகிறேன். தற்சமயம் என்னிடம் ஒன்றுமில்லை, என்னுடன் வந்தவர்களெல்லாம் காட்டில் எங்கோ வழிதவறி விட்டனர். என் உயிரைக் காத்த உத்தமவீரரே! என்னிடமிருக்கும் இதை என் நினைவாய் வைத்துக் கொள்ளுங்கள்'' என்று தன்கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்து, ''என் அன்பின் அடையாளமாய் வைத்துக் கொள்ளுங்கள்'' என்ருன். அமரசிம்மன் அந்த மோதிரத்தை வாங்கி அதன் வேலைப்பாட்டை அதிசயத்துடன் பார்த்தான். அவன் முகம் கறுத்தது, மோதிரம் கையிலிருந்து நழுவி விழுந்தது. அவன் மனம் சந்திராவதி சொன்னதன் மேல் நடந்து, ''பழிக்குப்பழி வாங்கு'' என்றது. அவன் புத்தி ''ஆயுதமில்லாமல் உன்முன் அன்புக் காணிக்கையளிப்பவனை கொல்வது...... அதிலும் ஆயுதமற்றிருப்பவனைக் கொல்வது ராஜபுத்திரதர்மமா?'' என்றியம்பியது. அந்த மோதிரத்தை எடுத்து வீரன் மறுபடியும் அமரசிம்மனிடம் அளித்தான். அமரன் அதைப் பெருமல் ''நீ ராஜசிம்மனின் மகன் பிரதாப சிம்மன்தானே! நீ உன் தந்தையிடம் சென்றுசொல்.'' என்ருன். அவன்முகம் சிவந்தது''என்ன?'' என்று ஆச்சரியத்துடன் பார்த்தான் அழகிய வீரன், அமரன் முகத்தை. கொடிய வனவிலங்குகளுடன் தாய் தந்தையர்களற்று வளர்ந்தாலும் மேவாட் அரசன் சங்க்ராமசிம்மரின் மகன் கைக்குள் சிக்கிய சத்துரு சந்தானத்தை உயிர் மீட்டு அனுப்பினுன். அவனிடம் மிருகதாகமில்லை, மனித குணமிருக்கிறது. மனிதனுக இருந்தும் நேசம் பாராட்டி, வஞ்சகமாய் அழைத்து, நஞ்சுவைத்துக் கொல்லும் குணமில்லை, என்று சொல்,'' என்று அவ்விடம் விட்டு வேகமாய்ச் சிங்கத்தலையுடன் நடந்தான் குகைக்கு.

அப்பொழுதும் சந்திராவதி பூஜை செய்து கொண்டுதானிருந்தாள். அமரசிம்மன் பயபக்தியுடன் அவளருகில் நின்று புவனேச்வரியையும், அந்தத் திறந்த வெள்ளிப் பெட்டியையும் பார்த்தவாறு நின்றிருந்தான். பூஜை முடிந்து தலை நிமிர்ந்து புத்திரனைப் பார்த்தாள். இடது கையில் சிங்கத்தலை, வலது கையில் வீரவாளுடன் நிற்கும் அவன், "அம்மா! சத்துருவைத் தண்டித்து விட்டேன்" என்றான் தலை நிமிர்ந்து பெருமையுடன்.

"தண்டித்து விட்டாயா? குமாரா! என்னைக் கடமையிலிருந்து விடுதலை செய்தாயா?" என்று அவன் முகத்தை வருடினாள்.

நடந்ததைச் சொல்லி, "அம்மா! உயிரை மாய்த்துப் பழி வாங்கினால் உள்ளம் பணியாது. தாழ்வும், தயையும் தான் மனித சமூகத்திற்கேற்ற தண்டனை. ஹிம்சை செய்து தண்டிப்பதினால் அவர்கள் செய்த குற்றத்தின் உயர்வு தெரியாது. 'அஹிம்சா தண்டனை' தான் ஹிம்சைத்தாகம் பிடித்தவர்களுக்கேற்ற தண்டனை" என்று பெருமிதத்துடன் சொன்னான்.

அதேசமயம் குகைவாயிலில் சில வீரர்கள் வந்து நின்றனர். அமரசிம்மனின் நேயர்கள் ஜயகோஷம் செய்தனர். பர பரவென்று உள்ளே நுழைந்தான் கிழஅரசன் ஒருவன். அவன்பின் அன்று சர்ப்பம் தீண்டிய வாலிபனும், சிங்கத்தின் வாயிலிருந்து தப்பிய அழகனும் வந்தனர். ராஜசிம்மன் அமரசிம்மனின் இருகைகளையும் பிடித்துக் கொண்டு, "அமரசிம்மா! நான் செய்த தீங்கிற்கு நீ செய்த உபகாரம்...... அப்பா! உனக்கென்ன செய்தால் தீரும். சிங்கத்தின் வாயிலிருந்து மீட்டுக்கொடுத்த என் பெண்ணை மணமுடித்துக்கொண்டு, உன் தந்தையின் அரசை நீ ஏற்றுக்கொள்" என்றான்.

"என்ன? உங்கள் மகளா?" என்று ஆச்சரியத்துடன் அந்த அழகிய வாலிபனைப் பார்த்தான்.

"ஆம், என் பெண்......"

"நான் உங்கள் பெண்ணை.........மணமுடிக்க......" என்னும்போதே அவள் பரிதாபமாய் அவன் முகத்தைப் பார்த்து, சந்திராவதியின் கால்களில் வீழ்ந்து, "அம்மணீ! என்னைச் சிங்கத்தின் வாயிலிருந்து ரக்ஷித்த இந்தச் சிங்கம் ஏற்காவிடின் இங்கேயே செத்துமடிவேன்" என்று உறையிலிருந்த வாளை உருவினாள்.

"பொறு குழந்தாய்!" என்று அவளைத் தடுத்து, "குமாரா! பொன்னையும், மண்ணையும் உதறித்தள்ளாதே! உன் தந்தையின் அரசை, ஏற்று உன் தாயின் ஆவலைத்தீர்ப்பாய். என்னைக் கடமையிலிருந்து மீட்டுவிடு. உன்தந்தையின் உயிர் நேயரின் பேத்தியை நீ மணந்து, உன் 'அஹிம்சா தண்டனை"யின் சிறப்பைக் காண்பி' என்றாள்.

"அமரசிங்கருக்கு ஜேய்" என்று கானகமும் வானமும் ஒருங்கே எதிரொலிக்கும்படி வீர அமரனின் நேயர்கள் கூவினர்.

> "இன்னாசெய் தாரை யொறுத்தல் அவர்நாண
> நன்னயம் செய்து விடல்" —திருக்குறள்.


## காவேரி சந்தா விகிதம்

| சந்தா விபரம் | உள்நாடு | ஸிலோன் பர்மா & மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு |
|---|---|---|
| ஒரு வருஷம் | 6 0 0 | 7 8 0 |
| அரை வருஷம் | 3 0 0 | 3 12 0 |
| தனிப்பிரதி ஒன்றுக்கு | 0 8 0 | 0 10 0 |

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், காவேரி,
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

# ஐயரின் குருகுலம்

## யோகி சுத்தானந்த பாரதியார்

[சென்ற இதழ் தொடர்ச்சி]

### குருகுல ஒழுக்கம்

தற்காலக் கல்வி முறையில் ஒழுக்கக் குறைவே, பெருங்குறையாகத்தெரிகிறது. அப்பழுக்கில்லாத நடையை ஐயர் மாணவருக்குப் பயிற்றினர். காலை நாலரைமணிக்கே மாணவர் மணிச்சத்தம் கேட்டு எழுந்திருப்பர்; திருப்பள்ளி எழுச்சி பாடுவர். உடனே ஹரிகேன் விளக்கை ஏற்றிக்கொண்டு ஒரு சிறு மண்வெட்டியுடன் தென்புறமுள்ள ஒதுக்கமான இடத்திற்குச்செல்வர்; மண்வெட்டியால் குழிபறித்து அதில் மலஜலங் கழிப்பர். காலையெழுந்ததும் குடல் சுத்தம் செய்யும்பழக்கம் பல நோய்களைத்தீர்க்கும். அப்பழக்கம் இல்லாமலே பலர் மலச்சிக்கலாலும், பல சிக்கல்களாலும் வருந்துகின்றனர். காலை குடல்சுத்தி செய்வதை ஆசாரியார் மிகவும் வற்புறுத்துவார். "கொல்லைக்குப் போனயா?" என்று ஒவ்வொருவரையும் அவர் கேட்பார். "இல்லை" யென்றுல் "போ! இருந்துபார்" என்று விரட்டுவார். புதிதாகப் பழகும் மாணவர்சிலர் குழிபறித்துத் தூங்கிவிழுந்து வருவர். அவர்களைக் கவனித்துத் திருத்துவார் ஐயர். குடல் சுத்தியானதும், ஆசிரம மாமரத்தில் இலைபறித்து எல்லாரும் பல்விளக்குவார்கள். அஃதானதும் ஆளுக்கொரு கூடை எடுத்துக்கொண்டு, எதிரே வாய்க்காலிலிருந்து மணல் அள்ளிவந்து மரங்களுக்குக் கொட்டுவர். தேகப்பயிற்சி செய்வர். எல்லோரும் ஆசிரமத்தைச் சுத்தம்செய்வோம். அவரவர் அறைகளைச் சுத்தம்செய்வர். இதானதும் ஒரு "ஊதல்" மாணவரெல்லாரும் வரிசையாக நிற்பர். சிறிது உடம்பு வளைத்து, கசரத், தண்டால் நடக்கும். பிறகு எல்லோரும் வரிசையாக எண்சுவடி, குழிமாற்று, நல்லபாட்டு, நிகண்டு இவை சொல்லிக்கொண்டே ஐயன் வாய்க்காலுக்குப் போவோம். சிலநாட்கள் தாமிரவருணி ஆற்றிற்கும் செல்வோம். சில நாட்கள் ஐயரும்வருவார்; சிலநாட்கள் வரமாட்டார். மாணவரை நான் நடத்திச்செல்வேன். சில ஆசிரியரும் கூடவருவர். மாணவர் நன்ருகத் தேய்த்துக் குளிப்பர். சனிக்கிழமை தவருமல் எண்ணெய் தேய்த்து வாய்க்காலில் முழுகுவர். நன்ருக நீந்திக்குளித்து விபூதி திருமண் இட்டுக்கொண்டு சந்திஜபம் செய்து, ஒருவர் அன்றைய தபால் வாங்கிவருவார். எல்லோரும் தேவாரதிருவாசகங்கள் திருவாய்மொழிப் பாசுரங்கள் இவற்றைப் பாடிக்கொண்டே மீண்டும் ஆசிரமத்திற்குச் செல்வோம். அங்கே முதலில் தோத்திரம் நடக்கும். பிறகு மேல்மாடியில் ஆசாரியார் முன்னே, மாணவர் கூடுவர். ஐயர் சிலநாட்கள் இராமாயணம் பாரதம் முதலிய புண்ணிய கதைகள் சொல்வதுபோல மாணவருக்கு ஹிந்துஸ்தான் இதிஹாஸக் கதைகளை உருக்கமாகச் சொல்லிவந்தார். வேதரிஷிகளின் பெருமை, இராமாயணபாரத இதிஹாஸங்களின்சிறப்பு, வியாஸர், வால்மீகி, கம்பர்போன்ற மஹாகவிகளின் மாண்பு, குருகோவிந்தன், பிரதாபசிங்கன், சிவாஜி, ராஜராஜன் போன்ற வீரர் பெருமை, அசோகன் போன்ற மன்னர்பெருமை—இவற்றையெல்லாம் மாணவர் உள்ளத்திற்படும்படி ஐயர் எளிய இனிய நடையில் கொஞ்சிக் கொஞ்சிப்பேசுவார். அத்துடன் தேசத் துரோகிகளைப்பற்றி மிகக் கண்டித்துப் பேசுவார். "துரோகிகளாலேதான் நமது தேசம் அன்னியருக்கு அடிமையானது. அலெக்சாந்தருக்குப் பாதைகாட்டினவன் ஒரு இந்திய அதமன்.

குருகோவிந்தன் புதல்வனான ஜராபர் பத்தேஹ்சிங்கைப் பகைவர்கையில் வஞ்சமாகப் பிடித்துக்கொடுத்தவன்; ஓர் இந்தியப்பதர். பிரதாபசிம்மனுக்கு எதிராக அவன் சகோதரனே பகைவர் பக்கம் சேர்ந்துகொண்டான். அவன் ஒரு புல்லுருவி. இன்னும் நமது நாட்டில் தேசத்துரோகிகள் பலர் இருக்கிறார்கள். நம்மவரைப் பற்றியே அன்னியரிடம் கோளேற்றும் குண்டுணிகளாலேதான் நாம் இந்தக்கதிக்காளானோம்" என்று ஐயர் சொல்லும்போது தேசத்துரோகிகள்மேல் நமக்குப் படுகோபம் வரும். சரித்திர வகுப்பு சுமார் அரைமணிநேரம் நடக்கும். பிறகு மாணவர் காலையுணவுகொண்டு வகுப்புகளுக்குச் செல்வர். வகுப்புகள் பெரும்பாலும் மரநிழலில்நடக்கும். சீதோஷ்ணஸ்திதி ஒத்துக் கொள்ளாவிட்டால் திண்ணைகளில் நடக்கும், என்னிடம் வரும் மாணவர் எப்போதும் என் பர்ணசாலைக்குள்ளிருந்தே படிப்பர். இயற்கையைப் பார்த்துப் படிக்கவேண்டிய பாடங்களுக்கெல்லாம் அவர்களை மலைக்கும், தோட்டந்துரவுகளுக்கும் அழைத்துச் செல்வதுண்டு. ஆசிரியர் வேஷ்டி அங்கவஸ்திரம் இரண்டே அணிவர். யாரும் சட்டைபோடுவதில்லை. ஐயர் சட்டை போடவே மாட்டார். மாணவர் இடுப்பு வேட்டி, ஒரு துண்டு அணிவர். ஓலைத் தடுக்குகளில் உட்காருவர். எல்லா மாணவரும் பாடத்தைக் கவனமாகவே பயின்றனர். பதினொன்றரைமணி அடித்ததும் வகுப்புகள் கலைந்து மாணவர் உடம்பு தேய்த்து வட்டமாக நின்று கடவுள் வணக்கம் பாடுவர்; சிறிது தியானிப்பர்; உடனே சமையல் கட்டிற்கு வருவர்; இலை தைப்பர், சுற்றுவேலை செய்வர்; நீர் கொண்டு வருவர். இலை அல்லது வட்டிலைக் கழுவி வருவர். எல்லாரும் சமமாக உட்கார்ந்தே குருகுலத்தில் சாப்பிட்டனர். ஐயர் சமபந்தியை முழுதும் ஆதரித்தார். திருஷ்டி தோஷத்தை நீக்கிய முதல் தென்னிந்திய பிராமணர் ஐயர் என்றே சொல்ல வேண்டும். குருகுலத்தில் சமையல் மட்டும், அதற்கென முன்வந்த பெண்மணிகளும், அந்தணரும் செய்து வந்தனர். முதலில் கிணற்றருகே மரத்தடியில் எல்லாரும் ஏகமாயமர்ந்து உண்டோம். அப்போது பாரதசமாஜத்திலிருந்து ஓர் இஸ்லாமியத் தொண்டரும், மற்றும் இருவரும் வந்து சிலமாதங்கள் இருந்தனர். ஐயர் அந்த இஸ்லாமியர் பக்கத்திலேதான் உட்காருவார். நாங்கள் அவருக்கு எதிரே சாதிமதவேறுபாடே பாராமல் உட்காருவோம். கட்டிடம் அமைத்தபிறகு சமையல் உள்ளே நடந்தது. மாணவரெல்லாம் திண்ணையில் வரிசையாக உட்கார்ந்து உண்டனர். ஐயரும் நானும் துவாதசியன்றே அங்கே உட்கார்ந்துண்போம். மற்றநாட்களில் கடலை கனி மோர் உணவு மாடிமேல் உண்பதுண்டு. மாணவர் இலையைக் கவனித்து, வயிறுகொள்ளு மட்டும் நன்றாகச் சாப்பிடுவர். அந்த வாழ்க்கைக்கே நல்ல பசியெடுக்கும். சாப்பாடானதும், மாணவர் அவரவர் உண்ட இடத்தைச் சாணம்போட்டுச் சுத்தம் செய்வர். பாத்திரங்களைக் கழுவுவர். மாவிலைபோட்டுப் பல்விளக்கிச் சுத்தமாகத் தத்தமது குடில்களுக்குச் செல்வர். கொஞ்சம் இளைப்பாறினதும் சுமார் இரண்டுமணி வரையில் மாணவர் நூல் நூற்பர். எல்லாருமே குருகுலத்தில் நாளைக்கு ஒரு மணி நேரமாவது அவசியம் (சுமார் 40, 50 எண் நூல் வரையில்) நூற்றுவந்தோம். நூலைச் சிட்டம் போட்டு, இரண்டுமணிக்கு நெசவுச் சாலைக்கு அனுப்புவோம். அங்கே திருவடத்திற் சுற்றி, குழலிற் கோத்துச் சில மாணவர் நெய்வர். நெசவு சொல்லிக்கொடுக்க ஒரு தொழிலாளி அமைந்தான். ராமானந்தனும் சத்தியானந்தனும் ராமசாமியும் நன்றாக நெய்தனர், நானும் சில நாட்கள் தறியோட்டி வருவேன். அப்படி நெய்த ஆடைகள் குருகுல மாணவருக்குப் பயனாகும். மூன்று மணிக்கு மீண்டும் பாடங்கள் தொடங்கும். ஐந்துமணிக் கெல்லாம் சங்கீத வகுப்புடன் பாடங்கள் முடியும். பிறகு மாணவர் சாரணப்பயிற்சி செய்வர், பந்தாடுவர், பலீன்சடுகுடு ஆடுவர், தோட்டவேலைசெய்வர், நீர் இறைப்பர், பலதொழில்களில் வண்டுபோல் ஈடுபட்டிருப்பர். மணி ஆறு அடித்ததும், எல்லாமாணவரும் கிணற்றடிக்குவந்து உடம்புதேய்த்துக்கொண்டு விபூதிபூசி, அனுஷ்டானங்களை முடித்துப் பஜனை செய்யத்தொடங்குவர். இனிமையான தேசப்பாடலும் பத்திப்பாடலும் முழங்கும். வாய்ப்பாட்டு ஜால்ரா இவ்வளவு

தான்; சுருதி மிருதங்கம் எதுவும் இல்லை. எனினும், அந்தப்பாடல்களில் இருந்த உருக்கம், பெரியவித்வான்கள் கச்சேரி களிலும்இருப்பதரிது. அச்சமயம் எனது அனுஷ்டானம் தியானங்களை முடித்துப் பராசக்திக்குக் கவிமாலை சூட்டுவேன். சிலமாணவர் என்னுடன் பாடுவர். தீபாராதனை காட்டும்போது ஐயர் ஜபம் முடித்து வருவார். ஐயர் கிணற்றடியில் சந்தி ஜபம் செய்வார்.

பஜனையானதும் மாணவர் அவரவர் வட்டில்களைச் சுத்தமாக்கிக்கொண்டுவந்து வரிசையாய் அமர்வர், உண்பர். பிறகு கொஞ்சம் இங்குமங்கும் கதைபேசி உலாவிவந்து, விளக்குப்பாடம் படிப்பர். சுமார் ஒன்பதுமணிக்கு ஐயர் அனை வரையும் கூட்டி, ஏதாவது நல்ல கதை சொல்வர்; வீரரைப்பற்றிப் பேசுவார்,

பின்மாதங்களில் "வீரர்சங்கம்" ஒன்று ஏற்படுத்தினோம். நான் அதற்குக் காரியதரிசியானேன். வாரம் ஒருமுறை இரவு ஒன்பது மணிக்குச் சங்கம் கூடும். ஆனால் அதில் மாணவர் கலந்துகொள்வ தில்லை. வாரம் ஒருவீரர் வரலாற்றைப் பற்றிப் பேசுவோம். ஐயர் அச்சமயமே தமது கருத்துரைகளைத் தாராளமாகச் சொல்லுவார், நான் தமிழ், ஆரிய, ஆங்கில, பிரெஞ்சு வீரரைப்பற்றிப் பேசுவேன். அவ் வீரர் வரலாற்றை எழுதி வைத்திருக்கிறேன். அன்பு மலர்களாக வரும். தமிழரிடையே குருகோவிந்தர்களை உண்டாக்க வேண்டு மென்பதே அவர் ஆர்வம், "சாதுர் வர்ணத்தில் பிராமண்யம் அநேக மாக மறைந்துபோனது. போலிப் பார்ப் பனரே இப்போதிருக்கிறார்கள். அவர் களால் நாட்டிற்குப் பயனில்லை. நம்மைத் திராசுபிடித்த வியாபாரிகள் ஆளு கிறார்கள். நாம்முன்னேறவேண்டுமானால் அர்ஜுனன் போன்ற வீரமும், தொண் டும் நம் வாழ்வில் சேரவேண்டும். க்ஷத்திரியனும் தொண்டனுமே நமக்கு வேண்டும். ஆதலால் நாம் "நாஸசிம்ஹன்" என்றொரு புதியஜாதியை உண்டாக்கு வோம். குருகோவிந்தன் செய்தது போலவே, இரும்புச் சட்டியில் பானகம் வைத்து வாளால் கலக்கி அமிர்தம் சாப்பிட்டு, தேசத்திற்குத் தொண்டு செய்ய, தர்மாவேசத்துடன் விரதம் பூணுவோம்" என்பார். ஐரோப்பாவில் மத்திமகால ஷிவாலியர் என்னும் வீரர் களைப்பற்றி அடிக்கடி அவர் சொல்லு வார். நெப்போலியன், ஹனிபாலன், ஸீஸர், அலெக்ஸாந்தர், பிரதாப், குரு கோவிந்தன், சிவாஜி, ராஜராஜன், கரி காலன், நெடுஞ்செழியன், செங்குட்டுவன் முதலிய வீரர்களைப்பற்றிப் பேசுவோம். தற்காலதேசவீரரான திலகர், மஹாத்மா, முதலியவர்களைப்பற்றி அடிக்கடி பேச்சு நடக்கும். சிலநாட்கள், இரவில் தீபப் பிரதக்ஷிணத்துடன் பஜனைநடக்கும். ஐயரும் அமர்ந்து கேட்பார். நவராத்திரி ஒன்பது நாளும், என் பர்ணசாலையில் பாட்டு முழங்கும். ஒருநாள் குருகுல ஸ்தாபன நாளைக் கொண்டாடி இரவு பதினோரு மணி வரையில் பஜனை செய்தோம். எல்லாம் முடிந்ததும், ஐயர் பேசினார்: "நமக்குச் சக்திவேண்டும். உட லுறுதியுடன் மனோதைர்யமும், உத்யம மும் நிரம்பவேண்டும். இந்தக் குரு குலத்திலிருந்து வீரர்கள் வெளிவந்து பாரதமாதாவின் கைங்கர்யம் செய்ய வேண்டும். பராசக்தி யருளுக" என்று இவ்வாறு இரவு சுமார் பத்து மணி வரை யில் நல்ல போதாகப் போகும். உடனே சற்றே தியானித்து மாணவர் வெட்ட வெளியில் மணலில் பாய்விரித்துப் போர் வைபோர்த்துத் தனித் தனியாகப் படுப்பர். அதிகப் பனி மழையானாலே உள்ளே படுப் பார். ஐயர் யாரும் பத்து மணிக்கு மேல் விழித்திருக்கச் சம்மதியார்; அவரும் பத்து மணிக்கே உறங்குவார். ஆனால் அக்காலம் கள்ளர் பயம் இருந்தது. ஆசிர மத்தில் வேலை செய்த ஒருவனே ஓர் ஆட் டைத் திருடிச் சென்றான். ஆசிரமத்தில் ஒரு மாடு இருந்தது, இறந்தது. இன்னும் பல காரணங்களை உத்தேசித்துக் காவல் ஏற்படுத்தினோம். நான் இரவில் எப்போ தும் விழித்திருந்து தியானமும் கவிதையு மாயிருப்பதுண்டு. அவ்வப்போது ஆசிர மத்தை ஒரு சுற்றுச்சுற்றி வருவதும், மாணவர் படுக்குமிடங்களைக் கவனிப்பதும் உண்டு; அது போதாது. அதிகமான காவல் வேண்டியிருந்தது. கிருஷ்ணமூர்த்தி ராஜு, ராகவன், மணி, நடராஜன், மகா தேவன் முதலியோரை மாற்றிமாற்றி விளக்குடன்ஆசிரமத்தைச் சுற்றிக் காவல் காக்கச் செய்தோம்; அதன் பிறகு திருட்டில்லை. என் பர்ண சாலையைச்

சுற்றிப் பாம்புகள் ஓடும். பர்ணசாலை நாலு பக்கமும் மூங்கில் பிளாச்சியடித்துத் திறந்தேயிருக்கும். ஆனால் பாம்புகள் உள்ளே வருவதில்லை. மாணவர் படுக்கும் இடத்திலும் எந்தப் பூச்சியும் வருவதில்லை. யாரையும் தேள் கொட்டினதில்லை. அது குருகுலவாழ்வில் ஓர் ஆச்சரியம். நாம் இங்கு நினைக்காவிட்டால், எதுவும் நம்மைத் தாக்காது என்பதே உண்மை. ஆனால் அடிக்கடி பாம்பு வேட்டையாடுவதுண்டு. ராஜு அடிக்கடி பாம்பைக் கொன்று வருவான். "நீ க்ஷத்ரியன், உனக்குப் பாபமில்லை" என்பார் ஐயர்! அச்சம் என்பதே யார் மனத்திலும் இல்லை. "தேசம் நேசம்" என்றே ஒவ்வொருவர் உள்ளமும் துடிக்கும். அத்தகைய உயர்ந்த வீரப் பயிற்சியைப் பெற்றனர் மாணவர்.




# இரத்தினங்கள்

ஆர். கே. விசுவநாதன்

ஆபரணங்கள் செய்வது நற்கலைகளில் ஒன்று. இக்கலைக்குப் பெயர் போனது இந்தியா. இரத்தினங்கள் இழைத்த ஆபரணங்களையும் நகைகளையும் நம் நாட்டில் உள்ள எல்லாக் கோவில்களிலும் அரண்மனைகளிலும் காணலாம். ஓர் சுதேச மன்னர் அணிந்து கொண்டிருக்கும் இரத்தினங்களைக் கொண்டு அவரது ராஜ்யத்தின் செழிப்பைக் கூட நிர்ணயித்து விடலாம். முன்னாளில் கோவில்களில் உள்ள நகைகளைக் கொள்ளையடித்துக் கொண்டு போவதற்கே மொகலாயர்கள் நம் நாட்டின்மீது படையெடுத்துவந்தார்கள். வட இந்தியாவிலுள்ள கோவில்கள் தான் இக்கஷ்டத்துக்கு அதிகமாக உள்ளாயின. தென்னிந்தியாவில் உள்ள கோவில்களிலும் மடங்களிலும் அதிக வேலைப்பாடுடன் செய்யப்பட்ட இரத்தின ஆபரணங்கள் இன்றும் இருக்கின்றன. இரத்தினங்களில் பலவகை உண்டு. நம் முன்னோர்கள் அவற்றை வைரம், வைடூரியம், கோமேதகம், புஷ்பராகம், பச்சை, சிவப்பு, முத்து, பவழம், நீலம் என்று ஒன்பது வகைகளாகப் பிரித்து நவரத்னங்கள் என்று கூறுவார்கள். இவற்றில் முத்து, பவழம் இரண்டைத்தவிர மற்றவை தனிப்பொருள்கள் (Minerals). முத்து, சிப்பியிலிருந்து கிடைக்கிறது. பவழம் கடலிலிருந்து கிடைக்கிறது. பூமி ஒரு காலத்தில் நெருப்புக் கோளமாக இருந்து பின்னர் குளிர்ந்து ஆறி வந்ததாகவும் முதலில் ஆறியபாகம்தான் மேலோடு என்றும் நிலவியல் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். மேலோட்டின் கடினத்திற்கும் அது குளிர்ந்த விதத்திற்கும் தகுந்தவாறு அவை இக்னீயஸ் (Igneous) பாறைகள் என்றும், ஸெடிமெண்டரி (Sedimentary) பாறைகள் என்றும், மெடமார்பிக் (Metamorphic) பாறைகள் என்றும் மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கொள்ளுகிறார்கள். இப்பாறைகளில்தான் இரத்தினக் கற்கள் உண்டாகின்றன. பாறைகளின் நெடுக வெடிப்புக்கள் நிரம்ப உண்டு. மழை பெய்யும் போது தண்ணீர் இவ்வெடிப்புக்களிலுள்ள கற்களைப் புரட்டிக்கொண்டு ஓடிவருகிறது. ஆறுகளில் இவ்வாறு அடித்துக்கொண்டு வரப்படும் கற்களைச் சலித்து அதிலிருந்து இரத்தினங்களைப் பொறுக்கி எடுத்துவந்தார்கள். தற்காலம் பாறைகளில் சுரங்கங்களைத் தோண்டி இரத்தினங்களை எடுத்து வருகின்றார்கள். இன்று சுரங்கங்களில் தோண்டி எடுக்கப்பட்ட கற்களைக் காட்டிலும் ஆறுகளில் கிடைத்த கற்களையே அதிகவிலை கொடுத்து வாங்குகிறார்கள். நம் நாட்டில் கோலார், கோல்கொண்டா, பன்னா முதலிய இடங்கள் வைரங்களுக்குப் பெயர்போன ஊர்கள். முன்னாளில் கோதாவரி, கிருஷ்ணா, மஹாநதி முதலிய ஆறுகளிலிருந்து வைரக்கற்கள் பொறுக்கி எடுக்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது. தற்காலம் தென் ஆப்ரிக்கா, தென் அமெரிக்கா இவ்விரண்டிடங்களிலிருந்து பெறப்படும் சுரங்கக் கற்கள் தான் வியாபாரம் ஆகிவருகின்றன. உலகில் கிடைக்கும் மொத்த வைரத்தில் சரிபாதி தென் ஆப்ரிக்காவிலிருந்து தான் பெறப்படுகிறது. மற்ற இரத்தினக்கற்களுக்கும் முதல் இருப்பிடம் நம் நாடும் அதை அடுத்துள்ள இடங்களும்தான். பர்மாவின் சிவப்புக் கற்களும் இலங்கை, காஷ்மீரம் முதலிய இடங்களின் நீலக்கற்களும் வெகுகாலமாகப் பெயர்போனவை. இலங்கையில் எல்லாக் கற்களும் கிடைக்கின்றன. அங்கு ரத்னபுரம் என்று பெயர்

கொண்ட ஊர் இருக்கிறதென்றால் இலங்கையின் இரத்தினச் செல்வத்தை ஊகிக்கலாம். இரத்தினங்களின்ஜொலிப்பு, நிறம், கடினத்வம் முதலிய பௌதிக குணங்களுக்காகவே நாம் அவற்றைக் கொண்டாடுகிறோம். இக்குணங்களைப் பற்றிய சில விவரங்களை இக்கட்டுரையில் பார்ப்போம்.

இரத்தினங்கள் தேய்வே இல்லாத பொருள்கள். இவற்றுக்கு நேர்மாறாகச் சாக்கட்டி போன்றவை வெகுசுலபமாகத் தேயக்கூடிய பொருள்கள். இவ்வித்தியாசத்தைக் கொண்டுதான் ஒரு பொருளின் கடினத்வம் நிர்ணயிக்கப்படும். எல்லாப் பொருள்களைக் காட்டிலும் கடினமான பொருள்கள் இரத்தினங்கள். அதிலும் வைரத்துக்குத் தான் இக்குணம் மிகுதியாக உள்ளது. வைரத்தைக் கொண்டு மற்ற இரத்தினங்களையும் உலோகங்களையும் கீறிவிடலாம். ஆனால் வைரத்தைக் கீறுவதற்கு மற்றொருவைரம் தான் வேண்டும். இக்குணத்தில் வைரத்துக்கு அடுத்தபடியாக உள்ள இரத்தினம் நீலம். அணுக்களினிடையே உள்ள கவர்ச்சிச் சக்தியைப் பொறுத்து இரத்தினங்களுக்கு இக்குணம் அமைகின்றது. கைக்கடிகாரங்கள் விற்பதற்காகப் பத்திரிகைகளில் வரும் விளம்பரங்களில் இரத்தினங்கள் அதிகமுள்ள கடிகாரங்கள் என்று பிரத்யேகமாக குறிப்பிடபடுவதை அனைவரும் கவனித்திருக்கலாம். காதில் அணிந்துகொள்ளும் தோடுகளில் உள்ளது போல, கடியாரத்தின் உள்ளே வைரத்தையும் சிவப்பையும் வைத்துக் கட்டியிருக்கிறார்கள் என்று சிலர் நினைத்திருக்கலாம். கடியாரத்தின் உள்ளே இருக்கும் இயந்திர அமைப்பில் அனேக சக்கரங்கள் இயங்கிக் கொண்டிருக்கும். கடியாரம் பழுது இல்லாமல் எப்பொழுதும் ஓடிக்கொண்டு இருப்பதற்கு இச்சக்கரங்கள் ஓய்வு தேய்வு இல்லாமல் நிதானமாக அனேக வருஷங்கள்வரை இயங்கவேண்டும். இதற்குச் சக்கரங்களின்சுழலும் அச்சுக்கள் பொருத்திவைக்கப்பட்டிருக்கும் இடங்கள் உராய்வினால் தேயாமல் இருக்கவேண்டும். இவ்விடங்களுக்குத் தகுந்த பொருள்கள் இரத்தினங்கள் தான். சிவப்பு அல்லது நீல இரத்தினங்களை இவ்விடங்களில் வைப்பதால் இரத்தினங்கள் உள்ள கடியாரங்கள் என்று விளம்பரத்தில் போடப்படுகிறது. இரத்தினங்கள் கடினமான பொருள்கள் ஆனபோதிலும் அவற்றை எளிதாக ஒரு சுத்தியைக் கொண்டு உடைத்து விடலாம். ஆனால் உலோகங்கள் போன்ற கடினப் பொருள்களை இவ்வாறு உடைக்க முடியாது. அவை வளைந்து கொடுக்கும். எனவே இரத்தினங்கள் உலோகங்களைப் போல உரமுள்ள பொருள்கள் அல்ல. ஒரு குறிப்பிட்ட பருமன் தண்ணீரின் நிறையை ஆதாரமாகக் கொண்டு அதே பருமன் அளவுள்ள மற்றப் பொருள்களின் நிறைகளை நீரின் நிறையுடன் ஒப்பிட்டு, பொருள்களின் திண்மை குறிக்கப்படும். வைரம் தண்ணீரைக் காட்டிலும் மூன்றரை மடங்கு அதிக திண்மை கொண்டிருக்கிறது. சிவப்பு இரத்தினம் நீரைவிட நான்கு மடங்கு திண்மை கொண்டிருக்கிறது. பொதுவாக எல்லா இரத்தினங்களும் அதிக திண்மை வாய்ந்த பொருள்கள்.

இரத்தினங்களுக்கு ஜொலிப்பு எவ்வாறு உண்டாகிறது என்று இப்பொழுது கவனிப்போம். இது ஒரு ஒளி நிகழ்ச்சி. நன்றாகப் பட்டை தீட்டப்பட்ட இரத்தினத்தில் ஒளி நுழையும் போது அதனுள்ளே அதற்குப்பல பிரதிபலனங்கள் ஏற்பட்டு ஒன்றிரண்டு முகங்களின் வழியாகமட்டும்வெளிப்படும். இதுமுற்றிலும் சாத்தியமாவதற்கு இரத்தினத்தின் முகங்களைத் தக்கவாறு அமைக்கவேண்டும். இதில்தான் இருக்கிறது இரத்தின வேலை செய்யும் தட்டானின் கைத்திறன். இரத்தினத்தினுள்ளே ஒளி செல்லும் போது அதன் திசை மாறிவிடுகிறது. இத்திசை வேறுபாட்டையே ஒளிக்கோட்டம் (Refraction) என்று கூறுவது. ஒரு கழியின் ஒரு முனையைத் தண்ணீரிலே சிறிது முழுக்கி அதைச் சாய்த்துப்பிடித்தால் நீரினுள்ளேமுழுகி இருக்கும் பாகம் நீர் மட்டத்திலேஒடிந்து மேல் நோக்கி மடங்கி இருப்பதாகத் தோன்றுவதைப் பார்க்கலாம். இது ஒளிக்கோட்டத்தினால் ஏற்படுகிற நிகழ்ச்சியே ஆகும். குளங்களில் நீர் அசையாமல் இருக்கும் போது ஆழம் குறைவாகத் தோன்றுவதும், அதை நம்பி இறங்கும்போது ஆழம் அதிகமாக இருக்கக் கண்டு ஏமாறுவதும் இதே காரணம் பற்றித்தான். இரத்தினத்தி

லிருந்து ஒளி காற்றுக்கு வெளிவரும் போது கோட்டமடைகிறது. ஆனால் உள்ளே ஒளி மோதும் திசை ஒரு வரம்புக்கு மீறி அமைந்து விட்டால் அது கோட்டமடைந்து வெளியே வர முடியாமல் உள்ளேயே பிரதிபலனம் அடைந்து விடுகிறது. இதைப் பூரண பிரதிபலனம் (Total internal reflection) என்று கூறுவார்கள். இரத்தினங்களுக்கு ஜொலிப்பு இப்பூரண பிரதிபலனங்களினால் உண்டாகிறது. உதாரணமாக வைரத்தை எடுத்துக் கொள்ளுவோம். வைரத்திலிருந்து காற்றுக்கு ஒளி கோட்டமடைந்து வெளிவரவேண்டுமென்றால் வைரத்தினுள்ளே ஒளியின் மோதுங் கோணம் (Angle of Incidence) இருபத்து நாலரை டிகிரிக்குக் குறைவாக இருக்க வேண்டும். இதற்கு அதிகமாக ஏற்படுமானால் ஒளி உள்ளேயே பிரதிபலனம் அடைந்து விடுகிறது. இதைப் பயன்படுத்தி வைரத்தினுள்ளே புகுந்த ஒளிக்கிரணங்கள் வெளிப்படுவதற்கு முன்னே பலமுறை பூரண பிரதிபலனங்களுக்கு உட்படும்படியாக வைரத்தைப் பலபடியாகப் பட்டை தீட்டுவது சாத்தியமாகிறது. புகுந்த ஒளிக்கிரணங்கள் ஏதேனும் ஒன்றிரண்டு முகங்களின் வழியாக மட்டும் வெளியே வரக்கூடுமாறு செய்யப்படுகிறது. இதனால் வைரத்துக்கு ஜொலிப்பு கண்ணைப் பறிக்கும்படியாக உண்டாகி விடுகிறது. இது போன்ற நிகழ்ச்சி எல்லா இரத்தினங்களுக்கும் ஏற்படுகிறது. ஆனால் வைரத்துக்குத்தான் பூரண பிரதிபலன கோணம் மிக குறைவு. மற்றவற்றின் கோணங்கள் வேறுபடும். அவற்றுக்குத் தக்கவாறு பட்டை தீட்டும் முகங்களும் வேறுபடும்.

ஜொலிப்புடன் இரத்தினங்களின் நிறமும் நம்மைப் பிரமிக்கச் செய்கிறது. நிறத்துக்கு மூலகாரணம் சூரியனது ஒளி. அது வெண்மையாகத் தோன்றினாலும் அதில் சிவப்பு, மஞ்சள், நீலம் முதலிய பல நிறங்கள் அடங்கி இருக்கின்றன. சூரிய வெளிச்சத்திலே இருக்கும் ஒரு பொருளை முப்பட்டைக் கண்ணாடி வழியாகப் பார்த்தால் அப்பொருளின் விளிம்புகளிலே பல வர்ணங்கள் தோன்றுவதைப் பார்க்கலாம். வைரத்தினுள்ளே சூரியனது வெண்ணொளி நுழையும் போது அதில் அடங்கியுள்ள பலவேறு நிறங்களுக்குப் பல வேறு திசை மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதனால் நிறங்கள் தனித்தனியே பிரிக்கப் படுகின்றன. வைரத்துக்கு ஜொலிப்புடன் கூட நிறங்களும் உண்டாகின்றன. ஒரு பொருளின் மீது விழும் ஒளியைப் பொறுத்து அதன் நிறம் வேறுபடுகிறது. உதாரணமாக மஞ்சள் ஒளியில் வைரத்தைப் பார்த்தால் அது மஞ்சளாகத் தோன்றும். மஞ்சள் ஒளியில் சிவப்பு இரத்தினம் கறுப்பாகத் தோன்றும். சாதாரணமாக ஒரு பொருளுக்கு அதன் வர்ணப்பசைக்குத் (Pigment) தக்கவாறு நிறம் அமைகிறது. இப்பசை பொருளின் மீது விழும் வெண்ணொளியில் உள்ள நிறங்களில் பலவற்றை உறிஞ்சிவிடுகிறது. சிவப்பாகத் தோன்றும் பொருளிலுள்ள வர்ணப்பசை சிவப்பு நிறம் நீங்கலாக மற்ற நிற ஒளிகளை விழுங்கி விடுகிறது. ஆகவே அது சிவப்பாகத் தோன்றுகிறது. பச்சை நிறப் பொருளின் வர்ணப்பசை பச்சை நிறம் நீங்கலாக மற்ற நிற ஒளிகளை உறிஞ்சிவிடுகிறது.

இவ்வாறு வெண்ணொளியிலிருந்து பொருள்களிலுள்ள வர்ணப்பசை நிறங்களை நீக்குவதினால் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு நிறம் உண்டாகிறது. இக்காரணம் பற்றியே மரம், செடி, கொடிகளுக்குப் பச்சை நிறமும், புஷ்பங்களுக்குப் பலவித நிறங்களும் அமைகின்றன. இரத்தினங்களுக்கும் இவ்வாறுதான் நிறம் உண்டாகவேண்டும் என்று முதலில் நினைத்தார்கள். சில பௌதிக நிலைகளினால் அவற்றின் நிறம் மாறுவதைக் கண்டு இது சரியல்ல என்று தெரியவந்தது. ஆகாயம், கடல், காலைச் சந்தி மாலைச்சந்தி நேரங்கள் இவற்றின் நிறத்துக்குண்டான காரணமே இரத்தினங்களின் நிறத்துக்கும் காரணமாக இருக்கவேண்டும் என்று இப்பொழுது கருதுகின்றார்கள். ஒலியைப்போல் ஒளியும் அலைகளாகவே பரவிச் செல்லுகிறது. சிவப்பு, மஞ்சள், பச்சை நிறங்களுக்குத் தகுந்தவாறு ஒளி அலைகளின் நீளம் அதிகமாகவோ குறைவாகவோ இருக்கின்றது. இவ்வலைகளின் நீளத்துக்குச் சமமான அளவு கொண்ட துகள்மீது ஒளி விழும்போது அதில் அடங்கியுள்ள பல நிற ஒளி அலைகளில் சில பிரதிபலனம் ஆகாமல் சிதற அடிக்கப்படுகின்றன. குறைந்த

அலை நீளங்களையுடைய ஒளிப்பகுதிக்குத் தான் சிதறல் அதிகமாக உண்டாகிறது. பவனத்தில் உள்ள காற்று தூசி நீர் இவற்றின் துகள்களினால் சூரியனிடமிருந்து வரும் வெண்ணொளி சிதறப்படுகிறது. சிதறப்படும் ஒளியைக் கொண்டு தான் நாம் ஆகாயத்தைப் பார்க்கிறோம். இதில் நீல நிறம் மட்டுமே மிகுந்து இருப்பதால் ஆகாயம் நீலமாக தோன்றுகிறது. பவனத்திலுள்ள துகள்கள் எல்லாம் பெரியதாக இருக்குமானால் வெண்ணொளியில் ஒரு மாறுதலும் உண்டாகாமல் ஆகாயம் வெண்மையாகவே தோன்றும். இதைப்போல இரத்தினங்களினுள்ளும் ஒளிச் சிதறல் உண்டாவதால் அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறமாகத் தோன்றுவதாகக் கருதுகிறார்கள்.

இரத்தினங்கள் அரிதாகக் கிடைப்பதினால்தான் அவற்றுக்கு விலை அதிகம். அவற்றைப் போல, போலி இரத்தினங்களைத் தயார்செய்து விலை மலிவாக விற்று வருகின்றார்கள். இவற்றை வாங்கி ஏமாறுபவர்களும் உண்டு. கண்ணாடியில்தான் போலி வைரங்களைச் செய்கிறார்கள். இவற்றுக்கு ஜொலிப்பு, நிறம் எல்லாம் உண்மை வைரங்களுக்கு இருப்பதைப் போல இருக்கும். ஆனால் உண்மை வைரத்தைப் போலக் கடினமாயிராது. இவ்வைரத்தை ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும். ஏனெனில் அதில் சுலபமாகக் கீறல் உண்டாகிவிடும். இதைக் கத்தியினால் சுலபமாக இரண்டு துண்டுகளாகச் செய்துவிடலாம். உலகில் நாம் காணும் எல்லாப் பொருள்களையும் தொண்ணூற்றிரண்டு தனிப் பொருள்களிலிருந்து தயாரித்து விடலாம். இத்தனிப்பொருள்களுக்குத் தாதுக்கள் (Elements) என்று பெயர். இரும்பு, குரோமியம், அலுமினியம், பிராணவாயு இவை எல்லாம் தாதுக்களே ஆகும். வைரத்தைச் சோதனை செய்து பார்த்ததில் அதில் கரி (Carbon) என்னும் தாது மட்டுமே இருப்பது தெரிய வந்தது. சிவப்பு, நீலம், இவற்றில் அலுமினியம், பிராணவாயு என்னும் தாதுக்கள் இருப்பது தெரிய வந்தது. ஒவ்வொரு இரத்தினத்தையும் இவ்வாறு இரசாயன சோதனை செய்து அதில் உள்ள தாதுக்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். செயற்கை இரத்தினங்களைத் (Imitation gems) தயார் செய்வதற்கு இவ்விவரங்கள் பெரிதும் பயன் படுகின்றன. சில செயற்கை இரத்தினங்கள் ஒரு வித்தியாசமும் இல்லாமல் உண்மை இரத்தினங்கள் போல இருக்கும். உதாரணமாக, செயற்கைச் சிவப்பு இரத்தினங்களையும், உண்மைச் சிவப்பு இரத்தினங்களையும் கலந்துவிட்டால் எவை உண்மை, எவை போலி என்று அறிய முடியாது. செயற்கைச் சிவப்பு இரத்தினத்தை முதலில் தயார்செய்து காட்டினவர் வெர்னியூல் (Verneuil) என்னும் விஞ்ஞானி. இவர் அலுமினியம் ஆக்ஸைடையும் (Aluminum Oxide), சிறிது குரோமியம் ஆக்ஸைடையும் (Chromiume Oxide) நன்றாகப் பொடி செய்து கொண்டு பிராணவாயு நீரகவாயு உலையில் (Oxyhydrogen Flame) இரண்டாயிரம் டிகிரி சூட்டில் கொதிக்க வைத்துச் சிவப்பு இரத்தினங்களை அடைந்து காட்டினார். உடனே இவை எங்கும் பிரபலமாய்விட்டன.

இவ்வாறாக விஞ்ஞானத்தின் துணை கொண்டு அனேக இரத்தினங்களைச் செயற்கையாகத் தயார் செய்து வருகின்றார்கள். இயந்திரத்தினால் இவற்றைக் கொண்டு தொங்கட்டங்கள், மாலைகள், மோதிரங்கள் முதலிய நகைகளை ஏராளமாக ஆலைகளில் உற்பத்தி செய்து விற்று வருகின்றார்கள்.

இந்திய சுதந்திரத்துக்குத் தேசியப் பத்திரிகைகள் ஆற்றிய பணி கொஞ்ச நஞ்ச மன்று. இத்தருணத்தில் அப் பத்திராதிபர்களின் சேவையை மக்கள் பாராட்டுவது கடமை.

இங்கு சில பிரபல ஆசிரியர்களின் படங்களைப் பிரசுரித்துள்ளோம். சுதந்திரச் சிற்பிகள் என்ற தலைப்பின்கீழ் இவர்களையும் சேர்ப்பது பொருத்தமாகும்.



மாடர்ன் ரெவியு எடிடர்
காலஞ்சென்ற ராமானந்த சாடர்ஜி



ஸி. ஒய். சிந்தாமணி



அமிருதபஸார் பத்திரிகாசிரியர்
துஷார் காந்தி கோஷ்



பாம்பே கிரானிகிள் பிரெல்



கே. ஸ்ரீனிவாஸன், ஸி. ஆர். ஸ்ரீனிவாஸன், கே. ஸ்ரீனிவாஸன் (பம்பாய்)



ஸஹானியும், தேவதாஸ் காந்தியும்

# கனவும் கற்பனையும்

### ஆர். எஸ்.

கடற்கரைக்காற்று குளிர்ந்து வீசிக் கொண்டிருந்தது. ஓயாத அலையின் இரைச்சல் ஒலித்துக் கொண்டிருந்தது. அந்திநேரம்.

நான்கு பேர்கள் சேர்ந்தாற்போல் ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தார்கள். சாயங்காலம் பொழுதை அவர்கள் அரட்டையில் கழித்துக் கொண்டிருந்தார்கள்.

"இன்றைக்குக் காலையில் பார்! எனக்கு இருபது ரூபாய் சம்பள உயர்வு கிடைப்பதாக ஒரு கனவு கண்டேன். விழித்துக் கொள்ளும் வரை ரொம்ப ஆனந்தமாகத் தான் இருந்தது. கண் விழித்துக் காப்பியின் முகத்தில் விழிக்கும் போதுதான் எல்லாம் கனவென்று தெரிந்தது'' என்றான் நாராயணன்.

"இந்தப் பாழும் கம்பெனியில் இருந்து கொண்டு, உன்னால், சம்பள உயர்வு கிடைப்பதாகக் கனவுகூடக் காணமுடிகிறதா என்ன?'' என்று ஆச்சரியப் பட்டான் விசுவநாதன்.

ஜகதீசன் நடுவில் புகுந்து "கனவு காணுவது பலிக்கிறதோ பலிக்கவில்லையோ, நன்மையில் முடிகிறதோ என்னவோ, ஒரு தடவை அது ஒருவருக்குப் பெரிய ஆபத்தாய் முடிந்தது எனக்குத் தெரியும்'' என்றான்.

பேச்சில் சுவாரசியம் ஊறியது. எல்லோரும் கேட்கத் தயாரானார்கள். ஜகதீசன் சொல்ல ஆரம்பித்தான்.

கவர்ன்மெண்ட் காலேஜில் சரித்திரம் சொல்லிக் கொடுக்கப் புதிதாக, சந்திரசேகரன் என்று ஒரு புரொபஸரை நியமித்தது உங்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். அவர் பெங்களூரிலிருந்து வந்தவராம். சிவப்பாய் ஒல்லியாய் இருந்தார். மூக்குக் கண்ணாடியின் வழியாகக் கூட அவருடைய கரிய கண்களின் ஒளி வந்துகொண்டிருக்கும். ரொம்ப கெட்டிக்காரர்.

சுந்தரேசன் மூலமாக எனக்கு அவரைத் தெரிந்தது. அடிக்கடி நான் அவர் வீட்டுக்குப் போவது வழக்கம். நடுவில் கொஞ்சநாள் என் வீட்டில் ஒருவரும் இல்லை. அப்போதெல்லாம் அவரைத்தான் நான் ஓயாமல் தொல்லை செய்வது வழக்கம். எத்தனையோ நாட்கள் நான் அவரைக் கடற்கரைக்குக் கூப்பிட்டிருக்கிறேன். அவருக்கு ஆராய்ச்சியில் அசாத்தியப் பித்து. ஓயாமல் ஏதாவது படித்துக்கொண்டிருப்பார்.

ஒரு தடவை எங்கள் சங்கத்தில் பேசச் சொல்வதற்கு அவரை ஏற்பாடு செய்திருந்தேன். மறுநாள் அவர் பேசப்போகிறார். முதல்நாள் முழுவதும் அவர் வீட்டைவிட்டு, ஏன், அவருடைய அறையை விட்டே வெளியில் கிளம்பவில்லை. இரவு நான் வெகு சீக்கிரம் தூங்கிவிட்டேன். விழித்துக்கொள்ளும்போது மணி மூன்று. புரொபஸர் வீட்டில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. "இதென்ன கூத்து'' என்று டார்ச்சை எடுத்துக்கொண்டு அவர் வீட்டுக்குக் கிளம்பினேன்.

புரொபஸர் அவருடைய அறையிலிருந்தார். மேஜையின்மேல் ஒரு விளக்கு மினுக்கிக்கொண்டிருந்தது. பெரிய புத்தகங்கள் அவருக்கு முன் பிரிக்கப்பட்டுக் கிடந்தன. சிறு குறிப்புகள் எடுத்து ஏராளமான ஏடுகள் மேஜை யெங்கும் பரந்து கிடந்தன. இந்துதேச சரித்திர புத்தகங்கள் பல அவருக்குமுன் கிடந்தன.

"மணி மூன்றாகிறது. தெரியுமோ இல்லையோ?'' என்றேன்.

"என்ன? மணி மூன்றா?'' என்றார் அவர்.

வெகுநேரம் கண் விழித்து அவர் கண்கள் சிவந்திருந்தன. தலைமயிர் கலைந்து நெற்றி யெங்கும் படிந்து கிடந்தது.

* *

"என்ன, நாளைக்குப் பேசப்போவதற்கா, இவ்வளவு முன் ஏற்பாடுகள்?'' என்று நான் ஆச்சரியத்துடன் கேட்டேன்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. ஹர்ஷருடைய ஆட்சியைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தேன். பொழுது போனதே தெரியவில்லை. அதிலும் மிகவும் சுவாரசிய

மான ஒரு சம்பவம் என் மனத்தைக் கவர்ந்தது. இதைக் கேளுங்கள்" என்று சொல்ல ஆரம்பித்தார்.

"ஐயையோ! இப்பொழுதே மணி மூன்றுகிறது. நீங்கள் கதை வேறு சொன்னுல் மணி நாலாகிவிடும், பேசாமல் நீங்கள் போய்த் தூங்குங்கள். எல்லாம் காலையில் பார்த்துக்கொள்ளலாம்", என்றேன்.

"முடியாது, நீங்கள் இதை இப்போது கேட்டுவிட்டுத்தான் போகவேண்டும்" என்று வற்புறுத்தி அவர் சொல்லத் தொடங்கினர்.

அறையின் விளக்கை நிறுத்திவிட்டார். மேஜையில் மட்டும் ஒளி தவழ்ந்துகொண்டிருந்தது. இருண்ட அறையில் மறையப் போகும் மதியின் கதிர்கள் ஒளி வீசின.

* * *

"ஹர்ஷருடைய ஆட்சி நியாயத்துக்கும் கண்டிப்புக்கும் பெயர்போனது. வட இந்தியா முழுமையும் வென்று வெற்றியை நாட்டிய அவருடைய நாட்டில் அமைதி குடிகொண்டிருந்தது. பகைவர்களுடைய பயத்தை ஒழித்ததோடு திருடர்களுடைய பயத்தையும் ஒழிக்க அவர் வழிதேடினர். பெரிய களவுகளுக்குக் கொலைத்தண்டனை கூட விதிப்பது வழக்கமாக இருந்தது.

இத்தகைய நாட்டில் ஒரு பெயர் போன திருடன் இருந்தான். அவனுடைய பெயரைக்கேட்ட மாத்திரத்தில் பிரபுக்களெல்லாம் நடுங்கினர்கள். ஆனல் அவன் ஏழைகளைக் காப்பவன். பெருஞ்செல்வந்தர்களை அவன் கொள்ளையடிக்கும்போதெல்லாம் அரசாங்கத்துக்குத் தெரியாமல் ஏழைகளுக்கு அவன் தர்மம் அளிக்கத் தவறவில்லை. திரைக்குப்பின் நின்று வேலை செய்யும் இந்தப் பேர்வழியைச் சிலர் பார்த்திருக்கிறர்கள். பலர் பார்த்ததில்லை.

மகேந்திரனும் நரேந்திரனும் இரட்டைச் சகோதரர்கள். சிறு வயதிலேயே மகேந்திரன் திருட ஆரம்பித்துவிட்டான். இதனல் தன்னுடைய மற்ருெரு பிள்ளையும் கெட்டுப்போய்விடப் போகிறதே என்று அவர்களுடைய தாயார் நரேந்திரனை அவர்களுடைய மாமன் வீட்டுக்கு அனுப்பி விட்டாள்.

மகேந்திரன் வளர்ந்து பெரியவனுனன்; பெரிய திருடனுனன். ஊரெல்லாம் அவனைக்கண்டு நடுங்கியது. அவனைப்பிடித்துத் தருபவர்களுக்குப் பரிசுகள் வழங்குவதாக அரசாங்கம் ஆசை காட்டியது,

நரேந்திரன் நாட்டை விட்டே போய் விட்டான். அவன் மாமன் பெரியகவி. கலைமகள் நரேந்திரனுக்கும் அருள் புரிந்தாள். நரேந்திரனுக்கும் நாவன்மையிருந்தது. அருமையாகக் கவிகள்பாடி மனத்தை உருக்கும் திறன் பூரணமாக அவனிடம் அமைந்திருந்தது.

* * *

வசந்தகாலம். நாடு நீர்வளத்தால் பொலிந்து விளங்கியது. நந்தவனங்களில் மலர்கள் தேன் சிந்தின. மகரந்தத்துகள் பரந்து மஞ்சள் ஒளி படர்திருந்த நந்தவனத்துப் பாதையில் ஹர்ஷர் உலாவிக் கொண்டிருந்தார், முறுவலிக்கும் மலர்கள் அவர் தாளடிக்கீழ் மிதிபட்டன. அவருடைய அரண்மனையில் அவருடைய நவரத்தின மாலை ஒன்று களவு போயிருந்தது. எவ்வளவு பெரிய மதில்கள்! பெரும் மதயானைகள்கூட முட்டி அசந்து போன பெரும் கதவுகள்! பகைவர்களின் மார்பை உழுது உதிரம் கக்கிய பெரும் வேல் தாங்கிய வீரர்கள்! இவர்களையெல்லாம் கடந்து அரண்மனையில் நுழைந்து அவருடைய மாலையை ஒரு கள்வன் கவர்ந்திருக்கிருன்! இது என்ன வெட்கக்கேடான நிலை! யார் இதைச் செய்யக்கூடும்?

அவருடைய காலின்கீழ் ஏதோ தட்டுப்பட்டது. அது என்ன? அது ஒரு வாளின் பிடி. கடவுள் அளித்த ஆற்றலை ஒரு சிற்பி அதில் அள்ளிக்கொட்டியிருந்தான். அதன் நடுவே ஒரு பெயர் மின்னிக்கொண்டிருந்தது. அது யார் பெயர்? "மகேந்திரன்" என்ற வார்த்தையைக் கண்டதும் அவர் தலை சுற்றியது. அவமானம் ஆயிரம் தேள்களைப் போலக் கொட்டியது.

* * *

நகரெங்கும் இச்செய்தி தீப்போல் பரவியது. கள்வனைக் கொண்டு வருபவருக்கு வரையரையில்லாது பரிசில் வழங்க வேந்தன் தயாராக இருந்தான்? ஆனல் மகேந்திரனை யார் எப்படிக் கண்டுபிடிப்பது?

ஒரு ஆண்டு ஓடியது. அரசரின் பிறந்த நாளைக் கொண்டாட ஊரெங்கும் அலங்காரங்கள் செய்யப்பட்டன. வாரணங்கள் வலம் வந்தன. ஆரணங்கள் முழங்கின. தோரணங்கள் சேர்ந்து தோப்பைப்போல் காட்சி யளித்தன. மகிழ்ச்சி ஒவ்வொரு உள்ளத்திலும் பொங்கிக் கொண்டிருந்தது.

அரசன் கொலுவீற்றிருந்தான். கவிகளும் புலவர்களும் அரசனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்றுச் சென்றர்கள்.

அந்தக்கவி ஊருக்குப் புதிது. ஆனால் அவன் நாவன்மை அவன் முகத்தில் பிரதிபலித்தது. கல்வி சொல்லவல்ல நல்வித்தையைக் கலைவாணி அவனுக்கு அளவில்லாமல் வழங்கியிருந்தாள். ஒவ்வொருவரையும் அவன் உற்றுப் பார்த்துக்கொண்டே வந்தான். அவன் மட்டுமா அப்படிப் பார்த்தான்? எல்லோரும் அவனை வைத்தகண் வாங்காமல் பார்த்தார்கள். கடைசியாக அரசன் மன்றத்தில் அவன் காலை வைக்கும்போது அவனைக் காவலாளர்கள் சூழ்ந்துகொண்டார்கள். சேனைத்தலைவனும் மற்றோரும் அவனைக் கைது செய்தார்கள்.

இரண்டு நாட்கள் கழித்து ஒரு அதிசயம் நடந்தது. அரசனிடம் ஒருவன் ஓடிவந்து ஏதோ சொன்னான். அரசன் பேயறைந்தவன்போல் ஆனான். மகேந்திரன் உள்ளே வந்தான். சபை திடுக்கிட்டது. அரசன் தலை குனிந்தான்.

"நருமதையாற்றிலிருந்து இமயம் வரை பரவிய நாட்டை ஆளும் அரசே! உம்முடைய சபைக்கு மகேந்திரன், ஒரு கள்வன் வந்திருக்கிறேன். உயிர்களுக்கு ஊறு செய்யாத பௌத்த சமயத்தைத் தாங்கும் தலைவரே! உம்முடைய சமுகத்தில் உண்மையாக மகேந்திரன்தான் நிற்கிறான். அப்படியானால் இரண்டு நாட்களுக்குமுன் உம் வாளடியில் சிக்கியவன் யார்? அவன் என் தம்பி; புலவன்; ஒன்றுமறியாதவன். உம் நீதி அவன் வாழ்நாளுக்கு முற்றுப் புள்ளி யிட்டது. புலிகேசியுடன் போரிட்டபோது எவ்வளவு பொருள் கொள்ளை போயிற்று? எவ்வளவு உயிர்கள் இறந்தன? அதற்கு எந்த நீதி உம்மைத் தண்டித்தது? ஆனால் ஒரு குற்றமும் செய்யாத என் தம்பியை உம் நீதி கொலை செய்து விட்டது. நீர் என் தம்பியைக் கொலை செய்யவில்லை: நீதியைத்தான் கொன்றிருக்கிறீர். நாங்கள் குடிகள், உமக்குக் கட்டுப்பட்டவர்கள். இதோ நான் உமது தண்டனையை ஏற்கச் சித்தமாக இருக்கிறேன்"

ஹர்ஷன் கண்களில் நீர் வடிந்தது. துயரம் பெருகியது. தெளிந்த குரலில் அவன் ஆணை எழுந்தது.

"மகேந்திரா! எழுந்திரு. இன்று முதல் நீ என் சேனாதிபதிகளுள் ஒருவன். கள்வனானாலும் உன்னிடம் கண்ணியமிருக்கிறது. செங்கோலின்மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன். நான் இழைத்த அநீதி போதும். உன்னை நான் கொல்ல மாட்டேன்"

அரசன் ஒரு முத்துமாலையை நீட்டினான். மகேந்திரன் சிரித்தான். துயரம் அவனுள் குமுறியது.

"அரசே! நான் போகிறேன். பதவிக்கு ஆசைப்பட்டு நான் இங்கு வரவில்லை. என் தம்பி ஒன்றுமறியாதவன் என்பதை உணர்த்த நான் இங்கு வந்தேன்; நீதியறியாத மன்னவனிடம் நிதிபெற நான் வரவில்லை; மன்னவ! நான் போகிறேன். இமயம் என்னை அழைக்கிறது. நீர் கூறியது போல் இன்று முதல் நான் கள்வனல்ல. நான் துறவி. நான் இனி ஒன்றையும் விரும்பமாட்டேன்"

மகேந்திரன் துறவியானான்.

*       *       *

"கதை எப்படியிருக்கிறது?" என்று கொட்டாவி விட்டார்.

"ஏன் என்னைக் கைது செய்கிறீர்கள்? நான் என்ன குற்றம் செய்தேன்" என்று அவன் ஓலமிட்டான்.

கடுமையான குரலில் சேனைத்தலைவன் அரசனைப்பார்த்துச் சொன்னான். "நீதியை நிலை-நிறுத்த அரும்பாடுபடும் ஹர்ஷனின் நாட்டில் களவு என்னும் நோயைப் பரப்பிய கொடியவன் தங்கள்முன் நிற்கிறான். இவனுக்குத் தகுந்த தண்டனையளிப்பது தங்கள் கடமை."

அரசன் கல்லாய்ச் சமைந்து நின்றான். இது என்ன விபரீதம்? புலவன் உருவில் திருடனா? நம்பமுடியவில்லையே! ஆனால் நிச்சயம் இவன் மகேந்திரன்தான்?

அந்தப் புலவன் தெளிவான குரலில் கூறினான். "நான் நரேந்திரன் என்றகவி. கவிபாடுவதில் எனக்குப் பற்று உண்டு. உண்மையில், புகழ் மங்காமல் ஓங்கி நிற்கும் உம் வளநாட்டிலும் திருடர்கள் இருப்பதாகக் கேட்டு மனம் வருந்துகிறேன். போரை நிறுத்தி அஹிம்சையின் உண்மையே அஸ்திவாரமாக நாட்டை நிறுவிய மகான் அசோகருக்குப்பின் மறுபடி உம்முடைய நாட்டிலே தான் பௌத்த சமயம் தழைத்தோங்கி நிற்கிறது. இத்தகைய உம்முடைய நாட்டில், உயிர்கள் ஊறு என்பதே அறியாத திரு நாட்டில் கொலை, திருட்டு என்னும் சொற்கள் உயிரோடு இருப்பதைக் கேட்டுத் திடுக்கிடுகிறேன். நான் கவியைக் காதலித்தேன். என் நாவன்மையைச் சோதிக்க விரும்பினேன். தக்கவர்களுக்கே ஈயும் உம் புகழ் சீனதேசம் வரை பரவியிருப்பதை நான் அறிந்தேன். ஆகையால் பரிசில் நாடி உம்மிடம் வந்தேன். என்னைக் கள்வன் என்கிறீர். கள்வனுக்குக் கொலைத் தண்

டனை என்பதை நான் அறிவேன். இறப்பதைக் குறித்து எனக்கு வருத்தமில்லை. கள்வனாக இறக்கிறேனே என்று தான் மனம் நோகிறேன். உயிர்க்கொலை அறியாத உம் சமுகத்தில் இந்த அநியாயம் நடப்பதைக் குறித்து உள்ளம் வேகிறேன்." கவியின் நாக்கு அவன் உள்ளத்துன்பத்தைக் கக்கியது,

வேகின்ற உள்ளத்தின் வேதனையை வேந்தன் அறியவில்லை. ஆயிரமாயிரம் விண்மணிகள் பரந்து கிடக்கும் ஆகாயத்தில் ஒரு விண்மீனுக்கு இடமில்லாமல் போயிற்று. நரேந்திரனுக்குக் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டது, மேடையில் அவன் கழுத்து வளைந்தது; கத்தி விழுந்தது. உயிர் நீங்கியதை அறிவிக்கும் மணி ஒலித்து ஒலித்து ஓய்ந்தது.

புரொபஸர்,

மணி நான்கு அடித்தது. ரொம்ப நன்றாக இருக்கிறது. நீங்கள் போய் முதலில் தூங்குங்கள் என்றேன் நான்.

அவர் தூங்கச் சென்றார். நான் வீடு திரும்பினேன்.

* * *

மறுநாள் சங்கத்தில் கூட்டம் ஆரம்பித்தது. கொஞ்சம் தாமதித்தே புரொபஸர் வந்தார். புரொபஸர் சந்திரசேகரனை நான் கூட்டத்துக்கு அறிமுகம் செய்து வைத்தேன். முதல்நாள் இரவு முழுதும் தூங்காததால் அவர் கண்கள் கலங்கியிருந்தன,

சபைக் காரியதரிசி பேசத் தொடங்கினார். நாற்காலியில் அமர்ந்திருந்த புரொபஸரின் கண்கள் சுழன்றன. தூக்கம் அவர் கண்களை அழுத்தியது. அவர் கண்மூடி உறங்கலானார். எனக்கு அவர் அலுப்புத் தெரியும். அதனால் நான் அவரைத் தொந்தரவு செய்யவில்லை.

புரொபஸர் கனவுகண்டு கொண்டிருந்தார். தாமே கவியென்று நினைக்கிறார். ஹர்ஷனுடைய சபையில் எல்லோரும் அவரையே உற்றுப்பார்க்கிறார்கள். காவலாளர் அவரைச் சூழ்ந்து கொள்கிறார்கள். அரசர் ஏதோ சொல்லுகிறார். அவர் மனம் விம்முகிறது, கண்ணீர் பொங்கி வருகிறது.

ஐயோ! இதென்ன? எதற்கு அவரைக் கொலைக்களத்துக்கு அழைத்துப் போகிறார்கள்? இதென்னமணி? இது ஏன் இப்படி முழங்குகிறது? சாவுமணி என் பார்களே! இதுதானா அது? பயங்கரமாக இருக்கும் ஒருவன் அவரை இழுத்துச் செல்கிறான். அவர் தலையை ஒருபடி மேல் வைக்கிறார்கள், ஒருஆள் உயரமுள்ள ஒரு கத்தி மேலே உயர்கிறது. இதோ! அது கீழே வந்து கொண்டேயிருக்கிறது. இதோ! அவர்தலை அவர் உடலிலிருந்து அறுபட்டு ஓடப்போகிறது.

காரியதரிசி பேசிமுடித்தார். புரொபஸர் கழுத்தில் மாலை விழுந்தது. கத்தி விழுவதாக எண்ணியவர் கழுத்தில் மாலை விழுவதற்குச் சரியாக இருந்தது. அதிர்ச்சியில் அவர் இருதயம் நின்றது. புரொபஸர் சந்திரசேகரனின் உடல் கீழே விழுந்தது.

கூட்டத்தில் பரபரப்பேற்பட்டது. ஆஸ்பத்திரிக்கு அவர் உடலை எடுத்துப் போனார்கள், கூட்டம் கலைந்தது.

* * *

"இதற்கென்ன சொல்கிறீர்கள், கனவு கண்டால் நல்லதா என்று யோசிக்கிறோம். பலிக்குமா என்று பஞ்சாங்கத்தைப் புரட்டுகிறோம். இப்படி விபரீதமாக முடிந்தது எங்கேயாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா?" என்று முடித்தான் ஜகதீசன்.

ஒரு விநாடி அங்கே அமைதி நிலவியது. மறு விநாடி நாராயணன் விழுந்து விழுந்து பிசாசுபோல் சிரிக்கத் தொடங்கினான். சில நிமிஷங்கள் கழித்து அவன் சொன்னான்,

"பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். தெரியுமோ, இல்லையோ? முதலில் நீ சொன்னதெல்லாம் வாஸ்தவம், ஒப்புக்கொள்கிறேன். புரொபஸர்தான் இறந்து விட்டாரே; அவர் கண்ட கனவு என்ன என்று உனக்கு எப்படித் தெரியும்? மாலை விழுவதற்கும் கத்தி விழுவதற்கும் ஒத்துப்போய் அதிர்ச்சியால் அவருக்கு உயிர் போயிற்றென்று உனக்கு எப்படித் தெரியும்?"

எல்லோரும் விழித்தார்கள். ஒருவர் சொன்னார்: "எப்படி ஸார்! உங்களுக்கு இவ்வளவு தூரம் யோசனை போயிற்று! அவருடைய பொய் எங்கே யிருக்கிறதென்று எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?"

"என்ன இருந்தாலும் ஜகதீசனுடைய கனவுக் கதையை மெச்சாவிட்டாலும், அவன் கற்பனையையாவது மெச்சவேண்டியதுதான்" என்று மற்றொருவர் சொன்னார்.

நாராயணன், "அதுகூட இல்லை! போன வருஷம் இதே கதையை நான் ஜகதீசனிடம் சொல்லி யிருக்கிறேன். அந்தப் பழி அதை அதற்குள் மறந்துவிட்டது. ஞாபக மறதிக்கு மருந்து வாங்கிச் சாப்பிடடா ஜகதீசா!" என்று ஜகதீசனைப் பார்த்துச் சொன்னான்.

"அப்படியா? அதுதானா நான் சொல்வாய் மூடுவதற்குள் நீ வழி மறித்தாய்!" என்றான் ஜகதீசன்,

பேச்சு முடிந்தது, ரேடியோ இசை பரப்பிக் கொண்டிருந்தது,




டாம்கோ விற்பனை இலாகா 19A, வாணியர் தெரு, தபால் பெட்டி நெ. 31, மதராஸ்.




**பண்டித ஜவாஹர்லால் நேரு**

ஹிந்துக்கள் தனித்து வாழ்வதற்கு ஜாதி வேற்றுமையே பிரதான காரணம். —ஜாதியின் அடிப்படைத் தத்துவம் இருக்கட்டும். அதன் தற்கால விளைவுகளான தீங்குகளை மட்டும் களைந்து விடலாம். பிறப்பினால் உயர்வு தாழ்வு கூடாது. ஆனால் அவரவர் திறமைக்கேற்ப இருக்கலாம்—என்று சிலர் சொல்லுவதுண்டு. இது குழப்பத்தையே விளைவிக்கும். ஜாதிமுறை வளர்ந்ததைப்பற்றிச் சரித்திர ரீதியாக ஆராய்வதனால் கொஞ்சம் பலனுண்டு. ஆனால் ஜாதி முளை விட்ட அந்தக்காலத்திற்கே நாமும் போய்விட முடியாது. இன்றைய சமுதாய அமைப்பில் அதற்கு இடமே கிடையாது. திறமை ஒன்றையே அளவு கோலாகக் கொண்டு, எல்லோருக்குமே சமசந்தர்ப்பங்களை யளித்து விட்டால், இன்று ஜாதியின் விளைவாக ஏற்பட்டுள்ள பேத உணர்ச்சிகள் அகன்றுவிடும். ஜாதிக்கும் முடிவுகாலம் வந்துவிடும். ஆதிநாளில், ஜாதி, சில வகுப்பினரை அடக்கி ஒடுக்கி வைத்ததோடு கல்விக்கும் கைத்தொழிலுக்கும் சம்பந்த மில்லாமல் செய்து, ஆத்ம விசாரணைக்கும் நிதர்சன வாழ்வுக்கும், அதன் பல்வேறு பிரச்னைகளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லாமல் செய்து விட்டது. இன்றைய நிலைமைக்கும் ஜனநாயகக் கொள்கைக்கும் மாறுபாடான இந்த ஜாதி முறை முழுவதுமே மாறித் தானாகவேண்டும். தொழில் காரணமாக உள்ள சில சிறு சிறு கோஷ்டிகள் இன்றும் இருந்து வரலாம். எனினும் நவீன கைத்தொழில் முறைகளும் யந்திர சாதனங்களும், பழமையைப் போக்கி, புதுமையைப் புகுத்தி, எவ்வளவோ மாறுபட்ட சூழ் நிலையைச் சிருஷ்டித்து விடுவதால், அதுவுங்கூட வெகுவாக மாறிவிடும். இன்றைய சமூக அமைப்பே மாறி— சம்பிரதாய உரிமைகள் ஒழிந்து போய், அவரவர் தொழிலின் தன்மைக்கேற்ப நிர்ணயப்பட்டுவிடும். இது பழைய இந்திய லட்சியத்திற்கும் ஒத்ததாகவே இருக்கும்.

நடைமுறையில் சமத்துவம் எங்குமே அனுஷ்டிக்கப்படாவிட்டாலும் காலத்தின் வேகம் சமத்துவத்தையே ஆதரிக்கிறது. பெயரளவில் அடிமை முறை ஒழிக்கப்பட்டு விட்டது. ஆனால் பழைய அடிமை முறையைவிட மிகமிகக் கேவலமான விதத்தில் நவீன அடிமைத்தனம் உலகெங்கும் பரவி விட்டது. தனிமனித சுதந்தரம் என்ற பெயரால் அரசியல் முறைகளும், பொருளாதார முறைகளும், மனிதனையும் வியாபார பொருளாகக் கருதி மனித வர்க்கத்தைச் சுரண்டி வாழும் நிலைமை ஏற்பட்டு விட்டது. மேலும் ஒருவன் இன்னொருவனுக்கு அடிமையாக இருப்பது ஒழிந்து விட்டாலும் ஒரு நாடு இன்னொரு நாட்டுக்கு அடிமையாக இருக்கும் நிலைமை மாறவில்லை. ஆகவே பெரிய அளவில் (தொகுதி) அடிமைத்தனம் இருந்தே வருகிறது. அத்துடன் இன்று ஜாதி— இன அகம்பாவமும் தலையெடுத்திருப்பதால் இன்று எஜமான நாடுகள் மட்டுமன்றி, எஜமான ஜாதிகளும் இருக்கின்றன.

எனினும் இறுதியில் காலத்தின் வேகம் வெற்றியடைந்தே தீரும். இந்தியாவைப் பொறுத்த வரையிலாவது நாம் சமத்துவத்தையே குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். இதனால் உடலமைப்பு, புத்தி, திறமை முதலியவைகளிலும் யாவரும் சமமே என்பது அர்த்தமல்ல. அப்படி சமப்படுத்துவது சாத்தியமுமல்ல. ஆனால் ஒவ்வொருவருக்கும் சமசந்தர்ப்பம் கிடைக்கும் என்பதையே அது அறிவிக்கிறது. அரசியல், பொருளாதார, சமூகவாழ்வுத் துறைகளில் யாருக்குமே எந்த விதமான கட்டுப்பாடுகளும் இருக்காது என்பதையே அது உணர்த்தும். மனிதத்

தன்மையில் நம்பிக்கை தெரிவித்து, சந்தர்ப்பம் மட்டும் அளித்தால், எந்த ஜாதியும், இனமும், தன்போக்கிலேயே போய், முன்னேற முடியும் என்ற நம்பிக்கையையும் தெரிவிக்கிறது. ஏதாவது ஒரு வகுப்பு, பிற்போக்காகவோ, தாழ்ந்த நிலைமையிலோ இருப்பது அதனிடமுள்ள குற்றங்குறைகளினுலல்ல. இதர வகுப்பினர் அவர்களை நீண்ட காலமாகவே அடக்கி ஒடுக்கி வைத்ததனுலேயேதான் என்பதையும் அது உணர்த்துகிறது. இன்றைய உலகில் தேசீய அரங்கிலோ சர்வதேசிய முறையிலோ, உண்மையான வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்பட வேண்டுமானுல் எல்லா வகுப்புகளுடைய ஒத்துழைப்பினுல்தான் முடியும். இல்லாவிட்டால் பிற்போக்கு நிலைமையிலுள்ள வகுப்புகள் முன்னே செல்லுபவர்களையும் பின்னுக்கிழுத்து எல்லோருடைய முன்னேற்றத்தையும் தடைப்படுத்திவிடும் என்ற உண்மையையும் உணர வேண்டும். ஆகையினுல் எல்லோருக்கும் சம சந்தர்ப்பங்களை அளிப்பதோடு பிற்போக்காக உள்ளவர்களுக்கு விசேஷ சலுகைகளும் சந்தர்ப்பங்களும் வழங்கி, அவர்களும்கல்வி, பொருளாதார, கலாசாரத் துறைகளில் மற்றவர்களை எட்டிப் பிடிக்கும் நிலைக்கு வர உதவ வேண்டும். சந்தர்ப்பம் என்னும் கதவை எல்லோருக்குமே திறந்து விட்டால் இந்தியாவில் பிரம்மாண்டமான அளவில் சக்தியும் திறனும் வெளிப்பட்டு நாட்டின் வடிவத்தையே அசுரவேகத்தில் மாற்றியமைத்து விடும்.

கால உணர்ச்சி சமத்துவம் வேண்டுமென்று கோரினுல், அந்தக் கொள்கைக்குப் பொருத்தமானதாகவும், சமத்துவத்தையும் வளர்க்கக் கூடியதுமான ஒரு பொருளாதாரத்திட்டத்தையும் அது அவசியம் கோரத்தான் வேண்டும். இன்றைய இந்தியாவிலுள்ள முறை அதற்கு எதிர்மாருது. ஏகாதிபத்தியம் ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையில் தான் வகுக்கப் பட்டது. அந்த நிலைமையையே, வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் நிரந்தரமாக்கப் பாடுபடும். அது ஒரு நாட்டின் சிருஷ்டி சக்தியை அமுக்கி வைத்து, ஆர்வத்தையும் திறமையையும் அடக்கிஒடுக்கிப் பொறுப்புணர்ச்சியையும் சிதறடித்துப் பலவீனப் படுத்தி விடுகிறது. அதன் ஆக்கிரமிப்பில் அவதிப்பட வேண்டியவர்கள் தமது கண்யத்தையும், தன்னம்பிக்கையையும் இழந்து விடுகின்றனர். இந்தியப்பிரச்னைகள், பார்வைக்கு மிகவும் சிக்கலாக இருந்த போதிலும் அரசியல் பொருளாதார அமைப்பைக் கிட்டத்தட்ட அப்படியே வைத்துக் கொண்டு முன்னேற்றமடைய வேண்டும் என்ற ஆவலினுலேயே எழுந்துள்ளவை தான். இன்றைய பொருளாதார அமைப்பையும் ஆதிக்க வர்க்கத்தையும் பாதுகாத்துக் கொண்டே, அரசியல்முன்னேற்றமடையமுயற்சி செய்யப்படுகிறது. இவைஇரண்டும் முரண்பட்டவை.

அரசியலில் மாற்றம் வேண்டியது தான். அதைப்போலவே பொருளாதார அமைப்பிலும் மாற்றம் அவசியமே. அந்த மாறுதல் ஜனநாயக முறையில் திட்டமிடப்பட்ட கூட்டுக் கொள்கையாக இருக்கவேண்டும். R. H. Towney சொல்லுவது போல நமது தேவை போட்டி முறையா—ஏகபோக உரிமையா என்பதல்ல. தனி நபர்களின் ஏகபோக ஆதிக்கமா?—பொறுப்புள்ள பொதுமக்களின் ஏகபோக ஆதிக்கமா?—என்பது தான். முதலாளித்துவ நாடுகளில்கூடப் பொது (ஏகபோக) உரிமை ஸ்தாபனங்கள் வளர்ந்தே வருகின்றன. அவை வளர்ந்து கொண்டுதானிருக்கும். பிரத்தியேக உரிமைகள் தாமாகவே அழிந்து போகுமளவும் இவ்விரண்டு கொள்கைகளுக்குமுள்ள வேற்றுமையினுல் இவ்விரண்டுக்குமிடையே எதிர்ப்பு இருந்தே தீரும். ஜனநாயகக் கூட்டுக் கொள்கை (Democratic Collectivism) என்பதனுல் தனி நபர் உரிமைகளும், ஆஸ்திகளும் அறவே அழிந்துவிடும் என்பது அர்த்தமல்ல. ஆனுல் அவசியமான அடிப்படைக் கைத்தொழில்கள் பொதுமயமாகி விடும் என்பதே அதன் பொருள். நிலத்தைக் கூட்டுறவு முறையில், கூட்டு நிர்வாகத்தில் விடப்படும் என்பதே அதன் அர்த்தம். இந்தியாவில் பெரிய கைத்தொழில்களோடு, கூட்டுறவு முறையில் நிர்வகிக்கப்படும் சிறிய கிராமியக் கைத்தொழில்களும் இருக்கத்தான் வேண்டும். அதுபோன்ற ஜனநாயகக் கூட்டுக்கொள்கை முறையில், மக்களின் மாறிவரும் தேவைகளையனுசரித்து, கவனமுடன் திட்டமிட்டு, நிர்

வாகத்தை அவ்வப்போது சீரமைத்துக் கொண்டேயிருப்பது அவசியம். சாத்தியமான எல்லா வழிகளிலும் நாட்டின் உற்பத்திச் சக்தியைப் பெருக்குவதோடு தொழில் சக்தியின் ஒவ்வொரு பாகத்தையும் ஏதாவது ஒரு விதத்தில் உபயோகித்துக் கொண்டு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படாதபடி தடுத்துக் கொண்டிருப்பதுவே நமது நோக்கமாக இருக்கவேண்டும். சாத்தியமானவரையில் ஒவ்வொருவரும் தத்தமக்கு இஷ்டப்பட்ட வேலையில் ஈடுபடுவதற்குச் சுதந்தரம் இருக்கவேண்டும். இதனாலேயே மக்களுடைய வருமானம் சமமடைந்து விடாது. எனினும் அதிக அளவில் சம விகிதப் பங்கீட்டுக்கு, சந்தர்ப்பமும், இறுதியில் சமத்துவமடைவதற்கு நாளடைவில் வழிவகுப்பதாகவும் இருக்கும். எப்படி இருந்தாலும், இன்றுள்ள—மெடு பள்ளங்களைப் போன்ற—வித்தியாசங்கள் முழுவதுமே மறைந்து விடும். வருமானத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளினால் இன்று ஏற்பட்டுள்ள வர்க்க பேதங்களும் மறைந்து விடும்.

அது போன்ற மாறுதல், லாபம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட சமூக அமைப்பைக் கவிழ்த்து விடும். ஒரு அளவிற்கு, லாபலட்சியம் தொடர்ந்து வரலாமெனினும், அதுவே பிரதான குறிக்கோளாக இருக்காது. இன்று வியாபித்துள்ள அளவிற்கும் இருக்காது. சராசரி இந்தியனுக்கு லாபத்தைப் பற்றிய சிந்தனையே கிடையாது என்று சொல்வது அபத்தமாகும். ஆனால் மேனாடுகளில் அதைச் சிலாகிப்பதைப் போல அவ்வளவு அதிகமாக இந்தியாவில் அதைப் போற்றுவதில்லை என்பது மட்டும் வாஸ்தவமே. இங்கே பணம்படைத்தவனைக் கண்டு பொருமுவதுண்டு. ஆனால் அதற்காக அவனைப் பாராட்டுவதில்லை. அவனுக்கு விசேஷ கவுரவம் செலுத்துவதில்லை. இன்னமுங்கூட யார்—ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும்—அறிவிலும் குணத்திலும் சிறந்து விளங்குகிறார்களோ, யார் பொது நலனுக்காக, தம்மையும் தமது நலன்களையும் தியாகம் செய்கிறார்களோ—அவர்களே விசேஷமாகப் பாராட்டப்பட்டு, கௌரவிக்கப் படுகிறார்கள். செல்வத்தைச் சேகரித்துக் குவிக்கும் மனோபாவத்தை இந்தியமக்கள் என்றுமே ஏற்றுக் கொண்டதில்லை.

கூட்டுக் கொள்கை முறையில் ஸ்தாபனங்கள் உண்டாக்குவதென்றால் பொதுப்படையாகவும் கூட்டுறவு முறையிலும் பெருவாரியான முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டும். இது தொகுதி முறையின் அடிப்படையில் நிறுவப்பட்ட பண்டைய இந்திய சமூக அமைப்பிற்கு எவ்விதத்திலும் பொருத்தமானதே. ஆங்கில அரசாட்சியின் பயனாக இந்தத் தொகுதியமைப்பு முறைகளும், கிராமச்சுயாட்சியையும் சீர்குலைத்து விட்டன. இந்தியப் பாமரமக்களுடைய பொருளாதார நலன்களுக்கும் அதைவிட அதிகமாக அவர்களுடையமனோபாவத்திற்கும் ஊறு விளைத்து விட்டன. அதற்குப் பதிலாக வேறொரு நன்மையும் ஏற்படவில்லை. அதற்கு மாறாக மக்கள் தங்கள் சுதந்தர உணர்வையிழந்தனர். பொறுப்புணர்ச்சியும்பொதுநலனுக்காகச் சேர்ந்துழைக்கும் திறனும் தேய்ந்தன. ஒற்றுமைக்கும், ஜீவத்துடிப்புக்கும் நிலைக்களனாக இருந்த கிராமம் காலக்கிரமத்தில், பாழடைந்துபோய் இன்று கிராமம் என்றால் சில பஞ்சைக் குடிசைகளையும் சில மனித ஜந்துக்களையும் கொண்ட இடம் என்று கருதும்படியான நிலைமைக்கு வந்துவிட்டது. ஆனால் இன்றுங்கூட நமது புலன்களுக்கெட்டாத ஒருவிதப்பிணைப்பு, கிராமத்தை ஓரளவிற்காவது ஒருமைப்படுத்துகிறது. பழைய நினைவுகளும் சற்றே நெளிகின்றன. இந்தப் பாரம்பரியத்தைத் துணையாகக் கொண்டு நிலத்திலும் சிறுகைத்தொழில்களிலும் கூட்டுறவு முறையில் பொது ஸ்தாபனங்கள் நிறுவுவது மிகவும் எளிது. கிராமம்,தன் தேவைகளைத்தானே பூர்த்திசெய்து கொண்டு பழையமுறையில் தனித்தியங்கும் ஸ்தாபனமாக இனி ஒரு பொழுதும் இருக்கமுடியாது. ஆனால் ஒரு அகண்ட அரசியல் ஸ்தாபனத்திற்குள்ளேயே தானும் ஒரு தன்னரசு செலுத்தும் சமுதாயமாக வாழ்ந்து, தனது தேவைகளைப் பூர்த்திசெய்து கொண்டு, அரசியலில் ஒருசிறந்த தேர்தல் தொகுதியாகவும் இருக்கலாம். கிராமத்தை ஒரு அளவிற்காவது தேர்தல் தொகுதியாகக் கருதினால் நேர்முக வாக்காளர்களின் எண்ணிக்கையைப் பெரும்

அளவிற்குக் குறைத்து விடுவதன்மூலம் மாகாண, அகில இந்தியத் தேர்தல்களைச் சுலபமாக்கி விடலாம். கிராமத்திலுள்ள வயது வந்த ஆண்பெண்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமியசபை பெரிய தேர்தல்களுக்கு வாக்காளர்களாக அமையலாம். இதுபோன்ற மறைமுகமான, தேர்தல்களினால் சில கெடுதல்கள் ஏற்படலாம். எனினும் இந்திய நிலைமையில் கிராமத்தை ஒரு தொகுதியாகக் கொள்ளவேண்டும் என்றே நான் கருதுகிறேன். இதன்மூலம் உண்மையானதும் அதிகப் பொறுப்புள்ளதுமான பிரதிநிதித்வம் ஏற்படும் என்றே நினைக்கிறேன்.

மேற்கண்ட பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்துடன், கைத்தொழில்கள், கூட்டுறவுவிவசாயப் பண்ணைகள் முதலியவைகளுடைய நேர்முகப் பிரதிநிதித்வமும் இருக்கவேண்டும். இதன்மூலம் ஜனநாயக அரசாங்க அமைப்பில் பிரதேசவாரிப் பிரதிநிதிகளும், தொழில் முறைப் பிரதிநிதிகளும் ஒன்று கூடுவதுடன், ஸ்தல சுயஆட்சியின் அடிப்படையில் நிறுவப்பட்டதாக இருக்கும். இந்த ஏற்பாடு இந்தியாவின் தற்காலத்தேவைகளுக்கும், பண்டைய பாரம்பரியத்திற்கும் ஏற்றதாகவே இருக்கும். ஆங்கில அரசாட்சியால் ஏற்பட்ட இடைவெளியைத் தவிர பழமைக்கும் புதுமைக்குமிடையே எந்தவிதமான இடைவெளியும் இருக்காது. ஆதிநாள் முதல் மக்களால் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டு இன்றுங்கூட அவர்கள் மனதை விட்டகலாத பழமையின் தொடர்ச்சியேதான் என்று யாவராலும் கருதப்படும்.

இந்தியாவில் இதுபோன்ற நிலைமை ஏற்பட்டுவிட்டால் அது அரசியல்—பொருளாதார—சர்வ தேசீயத்திற்கும் உகந்ததாகவே இருக்கும். இதனால் இதற்கும் பிற நாடுகளுக்குமிடையே துவேஷமோ, எதிர்ப்போ ஏற்படாது. ஆனால் ஆசியாவிலும் அகில உலகத்திலுமே சமாதானத்தைப் பரப்புவதற்குச் சக்திவாய்ந்த ஸ்தாபனமாகவே விளங்கும். ஒரே உலகம் என்ற நம் லட்சியத்தை நோக்கி விரைந்து செல்லுவதற்கு அது வெகுவாக உதவும். இன்று நாம் அந்தலட்சியப் பாதையிலேதான் உந்தித் தள்ளப்படுகிறோம், உணர்ச்சி நமது கண்களை மறைத்து, மனம் பேதலித்து உண்மையை உணரும் ஆற்றலை இழந்து விட்டாலும்கூட.

அடிமைத் தளையிலிருந்தும் நிராதரவான நிலைமையிலிருந்தும் விடுவிக்கப் பட்டுவிட்டோம் என்று உணர்ந்ததும், இந்தியமக்கள் மீண்டும் வீறு கொண்டெழுவர். தமது குறுகிய தேசீயமனோபாவத்தையும், தனித்து வாழும் இயல்பையும் ஒதுக்கித்தள்ளுவர். தமது பிதுராஜ்ஜியமான இந்தியப் பண்பாட்டின் பெருமையில் திளைத்து, தமது மனசையும், இதயத்தையும் பிற இனத்தவருக்கும், பிற நாட்டு மக்களுக்கும் தாராளமாகத் திறந்து விடுவார்கள். இந்த அகண்டாகாரமான அற்புத உலகத்தின் பிரஜைகளாக வாழ்ந்து தமது ஆன்றோர்கள் சென்ற அறிவுப்பாதையில் எல்லோரையும் அழைத்துக் கொண்டு வேகமாக விரைந்து செல்வார்கள்.

(Discovery of India என்னும் நூலிலிருந்து, க. கணபதியால் மொழி பெயர்க்கப் பெற்றது)



நிலா வெளிச்சத்தில் அழகான பெரிய இந்திய ரோஜா மலர்கள் அவையின் மயக்கும் நறுமணத்தால் காற்றை நிரப்புகின்றன—அவை வினோலியா ஒயிட் ரோஸின் என்னென்ன எண்ணங்களை விளைவிக்கின்றன! உங்கள் அழகை அதிகரிக்கச் செய்ய உங்கள் இஷ்டத்திற்குரிய இச்சோப்பைவிட உத்தமமானதோ தகுதியானதோ வேறு கிடையாது. மிருதுவான நுரையைத் தரும் வினோலியா மிகவும் மெல்லிய சருமத்தை சுகமாகச் சுத்தம் செய்கிறது . . . மேலும், மணமுள்ள அதன் நுரை உங்களைச் சுற்றிலும் மனோஹர பரிமளத்தைப் பரவச் செய்கிறது.




# வினோலியா ஒயிட் ரோஸ் சோப்

VWR. 21-23 TM

VINOLIA COMPANY LIMITED, LONDON, ENGLAND




**கே. சுந்தரம்மாள்**

சந்தியாதேவி தனது வசீகரத்தை எங்கும் வியாபிக்கச் செய்தாள். இயற்கை அழகுடைய பெண்மணிக்கு, செயற்கை ஆபரணங்கள் அணிவித்து அழகு மிகுந்து காண்பிப்பது போலிருந்தது அன்று அந்த உத்யானவனத்தின் தோற்றம்.

மரம் செடி கொடிகளிலெல்லாம், மின்சார கலர் தீபங்களினால், புஷ்பம், காய், பழம், இவைகளைப்போல் பிரகாசிக்கச் செய்யப்பட்டிருந்தன. செயற்கையாலான செடி கொடி புஷ்பங்களினால், இயற்கை வளம் பெற்றதுபோல் மேடை நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மேடைக்கு முன்னாகத் தொங்கவிடப்பட்ட திரையும் இயற்கைக் காட்சியைச் சித்திரித்துக் காட்டுவதாக எழுதப்பட்டிருந்தது. சித்திரக் கலையில் வல்லவரான ரஞ்சன் என்பவரே இவைகளின் சிருஷ்டிகர்த்தாவென்றால் அந்த நேரத்தில் அந்த உத்யானவனம் அதியற்புதமாகக் காண்போர் மனதைப்பரவசமடையச் செய்தது என்பது பற்றி ஆச்சரியப்பட மாட்டார்கள்.

வேலைப்பாடு செய்துள்ள ஆசனங்கள் வரிசை வரிசையாகப் போடப்பட்டிருந்தன. வெல்வெட்டினாலான திண்டுகளுடன் காணப்பட்ட முன் வரிசை ஆசனத்தில் ஜமீந்தார், இளைய ஜமீந்தார், திவான், பிரபுக்கள் இவர்கள் அமர்ந்திருந்தார்கள்.

பதினான்கு, அல்லது பதினைந்து வயது நிரம்பப் பெறாத இளவரசன், பால் வடியும் களை பொருந்திய முகமும் கம்பீரமான பார்வையுமுள்ளவனாகக் காணப்பட்டான். குழந்தையில்லாத ஜமீந்தார், தமது சகோதரியின் மகனை ஸ்வீகாரப் புத்திரனாக ஏற்றுக் கொண்டார். அன்று அவனுக்கு ஜன்மதினமானதால் அரண்மனை உத்யானவனம் அவ்விதம் அலங்கரிக்கப் பெற்று நாட்டிய அரங்கமும் ஏற்பாடு செய்யப்பட்டது.

திரை தூக்கப்பட்டதும் பத்துச் சிறுமியர்கள், இந்தியாவின் உருவம்போல் நின்றவண்ணம், இராஜ வாழ்த்தும் கடவுள் வணக்கமும் பாடினார்கள். அடுத்தபடி இரண்டு பெண்கள் சேர்ந்து அடதாள காம்போதிவர்ணத்திற்கு அபிநயம் பிடித்தார்கள். அடுத்தபடி கோஷ்டியார்கள் சிவ பார்வதி நடனம் ஆடினார்கள். பிறகு நாலாவதாகத் திரை தூக்கப்பட்டதும் யாவரது கண்களும் ஆச்சரியத்தினால் மலர்ந்தன. களைபொருந்திய சிவந்த குழிந்த கன்னங்களுடன் கூடிய அழகிய முகமும், கடைந்தெடுக்கப்பட்ட தந்தப்பாவைபோன்ற அங்க அமைப்புடனும், இடுப்பில் பஞ்சகச்சம் போல், நீலப்பட்டு ஓரிழையும் பொன் ஜரிகை ஓரிழையுமாக நெய்யப்பட்ட ஆடையுடுத்தி, வெள்ளைப்பட்டு ஓரிழையும், பொன் ஜரிகை ஓரிழையுமான உத்தரீயத்தை இடுப்பில் கட்டி முன்னால் குஞ்சம் போல் தொங்கவிட்டும், பசும்பொன் போன்ற மேனியைச் சட்டையால் மூடாமல், வைர ஹாரங்களும் பதக்கங்களும் மின்ன, கைநிறைய, கண்ணாடி,



தங்க, முத்து வைர வளைகள் ஜொலிக்க, புஜத்தில் நாகஒத்து வங்கி பிரகாசிக்க, நிதான உயரம் பருமனுடன் பதினொரு வயது மதிக்கத் தகுந்த சிறுமி நடராஜ பிம்பம் போல் காலைத் தூக்கியபடி நின்றாள்.

பெண்ணா? சிலையா? என்று சந்தேகிக்கும் வண்ணம், அசைவில்லாமல் விழி முதல் இமைக்காமல் ஐந்து நிமிஷநேரம் நின்றாள். யாவரும் ஆச்சரிய உணர்ச்சி மேலிடக் குழந்தையின் மீது வைத்தவிழி வாங்கச் சக்தியற்றார்கள். இளவரசன் தன்னை மறந்த நிலைமையை அடைந்தான்.

யதுகுல காம்போதியில், "காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே என்னை" என்ற பாட்டு அவள் வாயிலிருந்து எழும்பிய பின்புதான் உயிருள்ள பெண் என்று நினைக்கும்படி இருந்தது. அந்த நேரத்தில், இயற்கை வளம்பெற்ற அந்த இடத்தில், வீணாநாதம் போன்று அச்

சிறுமிபக்கவாத்தியங்களுடன்பாடியதால் யாவர் மனதிலும் இன்ப அலைகள் பொங்கி எழுந்தன. தம்மை மறந்து ஆட்டத்திலும், பாட்டிலும் மனதைப் பறிகொடுத்து விட்டார்கள். ஊசி விழுந்தால்கூடக் கேட்கும் படியான நிசப்தம் நிலவியது. அந்தப் பாட்டு முடிந்ததும், இளவரசன், சட்டென மேடை மீது ஏறி, தன் கழுத்திலிருந்த முத்துமாலையைக் கழற்றி அச்சிறுமியின் கழுத்திலிட்டான். இச்செய்கையை யாரும் எதிர்பார்க்கவில்லை. இளவரசனின் கலையுணர்ச்சியைக் கண்ட ஜமீந்தாரின் மனம் அளவற்ற ஆனந்தம் அடைந்தது. யாவரும் கரகோஷம் செய்தனர்.

கரகோஷம் நின்றதும், பைரவி ராகத்தில் "யாரோ இவர் யாரோ என்ன பேரோ அறியேனே" என்ற பாட்டுடன் அபிநயம் பிடித்தாள் அவளுக்குக் கொடுக்கப் பட்டிருந்த லிஸ்டின் படி. "சபாஷ்! சந்தர்ப்பத்திற்கேற்ற பதம்" என்றார்கள் பிரமுகர்கள். அடுத்தபடி "காதலெல்லாம் கொள்ளை கொண்டாய் கண்ணா கண்ணா" என்று பாடி அபிநயம் பிடித்தாள். சோகம் சிங்காரம், ஆச்சர்யம், முதலிய பாவங்களைக் கண்களிலேயே பிரதிபலிக்கச் செய்தாள். மாறி மாறிவரும் முகபாவம் யாவர் மனதையும் இன்பலாஹிரி கொள்ளச் செய்தது.

தொடர்ச்சியாக நாலைந்து பாட்டிற்குப் பாவம் பிடித்துவிட்டு, நிருத்தமாடி, பிறகு மங்களம் பாடி முடித்தாள். சட்டெனச் சிறுமியின் பாட்டி மேடை மீது தோன்றி, செல்வியை அணைத்து முத்தமிட்டாள்.

"அம்மா! உன் குழந்தை கலையுலகத்திற்கே ராணியாக விளங்கும் அம்சம் பெற்றிருக்கிறாள். சிதைந்துபோன நாட்டியக் கலை இவளால்தான் புத்துயிர் பெறப் போகின்றது. எனது லக்ஷ்யம் நிறைவேற இவளே காரண கர்த்தாவாக விளங்குவாள். இவைகளுக்காகவே இவள் பிறந்தாள் போலும்" என்றார் ஜமீந்தார்.

"குழந்தை, பயிற்சியில் முதல் முதலாக அரங்கேறியும் ஆடும் பொழுது, மஹாராஜாவின் புகழுரையும் இளவரசரின் பரிசும் பெற்றுவிட்டாள். என் கலாவதி மிக்க பாக்யசாலி. தாயற்ற அவளின் முன்னேற்றமே எனது லக்ஷ்யம். தங்களது ஆதரவு இருக்கும் வரையில் குறை என்ற பதமே எங்கள் அகராதியில் இருக்க முடியாது" என்று கைகுவித்துப் பணிவுடன் கூறினாள். "அன்று அரங்கை விட்டுச் சென்ற பின்பும் யாவர் மனதிலும் கலாவதியின் நாட்டியமே காட்சியளித்துக் கொண்டிருந்தது. அத்தோற்றத்தினால் மனம் பரவசமடைந்தது.

"ஆஹா! இந்த வயதில் என்ன அற்புதமான பாவம்?" என்றார் போகும் வழியில் ஒருவர்.

"புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? இவள் தாய் இவ்வூருக்கு வந்து இரண்டே நடனம்தான் ஆடினாள். ஆஹா அதை மறக்க முடியுமா? அவள் மட்டும் உயிருடனிருந்திருந்தால், நம் ஜமீந்தாரின் லக்ஷியக் கனவு இதற்குள் நிறைவேறியிருக்கும்" என்றார் மற்றொரு வயோதிகர். அன்று அவ்வூர் முழுவதிலும் கலாவதியின் பேச்சாகவே இருந்தது.

* * *

மறு நாள்காலை எழுந்ததும் காலையாகாரத்திற்குப் பின்பு தனது அறையில் உட்கார்ந்து, கலாவின் நடராஜா தோற்றத்தைச் சித்திரமாகத் தீட்டிக் கொண்டிருந்தான் யுவராஜ் ரவிவர்மன். அவன்கவன முழுவதும் துகிலிகையிலேயே இருந்த படியினால் பின்னால் வந்து நிற்கும் ஜமீந்தாரின் வரவை அறியவில்லை. படம் பூர்த்தி யடைந்ததும் "ரவிவர்மா! இக்கலையிலும் உனக்குப்பயிற்சியிருப்பது பற்றி மிக்க சந்தோஷம். அச்சிறுமியின் தோற்றம் அப்படியே அமைந்துவிட்டதே! நிச்சயம் என்லக்ஷ்யம் நிறைவேறி விடும் என்பதில் ஐயமில்லை. நான் பாக்கிய சாலியே. ரவிவர்மா! உங்கள் ஊரில் பள்ளிக் கூடத்திலேயே இக்கலை பயில வசதியுண்டு போலும்" என்றார்.

"ரவிவர்மா!' என்ற சப்தத்தைக் கேட்டதும் திடுக்கிட்டு எழுந்து நின்றான். தான் அச்சிறுமியின் ரூபத்தைச் சித்திரிப்பது பற்றிமஹாராஜா கேவல

மாக நினைப்பாரோ? என்ற அச்சம் அவன் மனதைப் படபடக்கச் செய்யும் தருணம் அவருடைய அன்பான மொழிகள் வெளிப்படவே "அம்மா" என்ற நிம்மதி அவன் மனதைத் திடப் படுத்திற்று. அதனால் சற்றுத் தைரியமாகவே "மாமா" பள்ளியில் பயிலவில்லை. அவ்வூர் ட்ராயிங்மாஸ்டர் எங்கள் பக்கத்தில் வசித்து வந்ததினால் ஒழிந்த நேரங்களில் எனக்குச் சித்திரம் வரையக் கற்றுக்கொடுத்தார். அதில் ஏதோ கொஞ்சம் விருத்தியாயிற்று. நேற்று அச்சிறுமி நின்றதோற்றம் அதியற்புதமாக இருந்தபடியால் ஏதோ எழுதிப் பார்த்தேன். மன்னிக்கவேண்டும்" என்றான்.

"ரவிவர்மா! இனி நாம் மாமன் மருமகன் அல்ல. தகப்பனும் பிள்ளையும். அம்முறையில் அழைப்பதையே என் மனம் விரும்புகிறது" என்றார் புத்ர தாகம் குரலில் தொனிக்க.

அவரது தாபத்தை உணர்ந்த ரவிவர்மனின் மனம் சஞ்சலமடைந்தது. "அப்படியே ஆகட்டும் அப்பா!" என்றான்.

"குழந்தாய்! நீ சித்திரம், நாட்டியம் இவைகளில் தேர்ச்சி பெறுவதுதான் எனக்கு மிகவும் இஷ்டம். நாளைமுதல் இவைகளுக்குத் தனித்தனி ஆசிரியர் ஏற்பாடு செய்கிறேன்" என்றார்.

"ஒரு வேண்டுகோள் கேட்கலாமா?"

"அச்சமில்லாமல் கேள். எது விஷயமும் மனம் விட்டுப் பேசுவதே நன்மையைத் தரும் என்பது எனது கொள்கை"

"இவைகளைத் தனியே பயிலாமல் தாங்கள் இவைகளுக்காக ஏற்படுத்தியிருக்கும் கலாசாலைகளில் மாணவர்களுடன் சேர்ந்து பயில விரும்புகிறேன். அத்துடன் தொடர்ந்தே இண்டர்மீடியட் முதலிய பட்டப் படிப்புக்களையும் படித்து வருகிறேன்" என்றான்.

அவனது வணக்கத்தையும் ஆர்வத்தையும் கண்ட ஜமீன்தாரின் உள்ளம் அளவற்ற ஆனந்தத்தை அடைந்தது. "ரவிவர்மா உன் இஷ்டப்படியே நடக்க ஏற்பாடு செய்கிறேன்" என்று அன்பாக அவன் முதுகில் தட்டிவிட்டுச் சென்றார்.

ஆயுர்வேத வித்வான் 'B.V. பண்டிட்' அவர்களின்
சத்வைத்யசாலை :- நஞ்சன்கூடு.

"நஞ்சன்கூடு பல்பொடி"

I.D.L நெ 61, மெடிகேட்ட் [பல் உபாதைகளுக்கு]

குழந்தைகளுக்கு
காஸ்மஸ் — கஸ்தூரி மாத்திரை
கர்ஜன் — கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ் — பேதியாக மாத்திரை

ஜ்வரேக் [எவ்வித ஜ்வரங்களுக்கும்]
ஜிஞ்சிப் [அஜீர்ண பித்த சமனி]
கூலெக்ஸ் [உஷ்ண சமன ஸ்நான தைலம்]

கவனிப்பு:- மாதர்களுடைய சூதக, கெர்ப்பாசய உபாதைகளுக்கு விபரம் எழுதி சிகிச்சை பெறலாம்

ஸான்டலக்ஸ் நறுமண சரும ரக்ஷிணி முகப்பரு, புண், சொறி குணமடைய.

காஷ்மீர்-குஸும் கூந்தல் செழிப்புக்கு நீங்களே தைலம் செய்ய உதவுகிறது.

மைசூர் "பிரேமலீலா" உயர்தர ஊதுபத்திகள்.
'அகர் ஸ்பெஷல், ஜவாது, ஜெயலக்ஷ்மி'

யுனைடெட் கன்ஸர்ன். 54, பந்தர் தெரு, மதறாஸ்.

பவானி புரமென்பது மிகப்பெரிய சமஸ்தானங்களிலொன்று. பவானி தேவியே அவர்கள் குலதெய்வம். ராஜா சிவசர்மா சிறுவயது முதல் எல்லாவிதக் கலைகளிலும் பற்றுக்கொள்வது என்பது இயற்கைக் குணமாக அமைந்தது. அவர் தந்தை ராஜா ரவிவர்மர் மேன்மையான முறையில் குடிகளை நடத்தி வந்தார். தமது சமஸ்தானம் உலகில் முதன்மையாக விளங்க வேண்டும் என்ற ஆவலினாலும், உலகம் முழுவதும் சுற்றி ஆங்காங்கே காணப்படும் உன்னதமான பழக்க வழக்கங்களை, தாமும் பின்பற்றி நடக்கவேண்டும் என்ற சிவசர்மாவின் விருப்பத்திற்கிணங்கவும், சிவசர்மாவின் இருபத்திரண்டாவது வயதில் உலகப் பிரயாணம் செய்துவர அனுமதி தந்தார். சுமார் நான்கு வருஷ காலம் உலகம் முழுவதும் சுற்றி அநேக அரிய விஷயங்களையும் பழக்க வழக்கங்களையும் நன்கு ஆராய்ந்து அறிந்துகொண்டு வந்து சேர்ந்தார் சிவசர்மா.

வந்ததும் முதல் காரியமாக, பவானி மாதா ஆலயத்தை, ஒளி மிகுந்த பளிங்கு, கண்ணாடி, முதலிய வர்ண ஜாலங்களிலமைந்த கற்களினால், அதியற்புதமாகக் கட்டிமுடித்தார். சிதைந்துபோன பழைமையான பிம்பங்களைப் புதியனவாக நிருமித்துப் பழைய சிற்பங்களின் மேன்மையை உலகிற்கு எடுத்துக் காட்டினார். கலையுள்ளமும் பரந்த நோக்கமும் கொண்ட ரவிவர்மா, சிவசர்மாவின் இஷ்டப்படியே யாவும் நடக்க ஏற்பாடு செய்திருந்தார். பவானிமாதாவின் உருவம் சிலையாகவே தோன்றாது, பதினாறு வயது யுவதியைப் போல் காட்சியளிப்பாள், ஆலயத்தின் அற்புத வேலைப்பாட்டைக் காண, அநேக தேசத்திலிருந்து கும்பல் கும்பலாக யாத்ரிகர்கள் வந்துகொண்டேயிருப்பார்கள். யாத்ரிகர்களுக்கு மிக்க வசதிகிடைக்கும் படிக்கு ராஜா சிவசர்மா கட்டடங்களும் ஆட்களும் நியமனம் செய்திருந்தார்.

அரச சபையில் தங்கு தடையின்றி, தோட்டி முதல் தொண்டமான் வரை யாவரும் அச்சமின்றித் தங்கள் குறைகளைத் தெரிவித்துக் கொள்ளுவார்கள். அதற்கேற்ப வசதியளித்தார் சிவசர்மா. அவ்வப்போது நடக்கும் விஷயங்களுக்குத் தக்கபடி பரிகாரம் கிடைக்கும். இயற்கையின் வளமைக்கேற்பக் குடி மக்களின் அனுமதியைக் கோரியே வரி முதலியவைகளை ஏற்படுத்துவார். அதனால் அச்சமஸ்தானத்தில், வறுமை, பஞ்சம், திருட்டு முதலியவைகள் தலை காட்டவே இடமில்லை.

சிவசர்மாவின் முக்ய லக்ஷ்யம் பெண்களின் சம உரிமை. எத்துறையிலும் பெண்கள் ஆண்களுக்குச் சமமாகவே நடத்தப்பட்டார்கள். ஐந்து முதல் பன்னிரண்டு வயது வரை ஆண பெண் இருபாலாரும் படிக்கும்படி கட்டாயப் படுத்தப் பட்டது. படிப்போடு தங்கள் குலத் தொழிலும் புகட்டப்பட்டு வந்தார்கள். தாய் மொழியிலேயே சகல விஷயங்களையும் கற்க ஏற்பாடு செய்தார். கட்டாயமாகப்படிக்க வேண்டிய வகுப்பு முடிவுற்றதும் மேலே அவரவர் அறிவிற்கேற்றவாறு தொழிற் கல்வி போதிக்கப்பட்டு அரசாங்கத்தாராலேயே ஜீவனத்திற்கும் வழிசெய்யப்படும். பன்னிரண்டு வயதுவரை சிற்பம், சித்ரம், நாட்டியம், சங்கீதம்கட்டாயமாகப்போதிக்கப்படும், பிறகு அதன் முடிவு காணும் வரை படிப்பவர்கள் படிக்கலாம். எப். ஏ: பி. ஏ: எம். ஏ: வைத்தியக்கல்லூரி, சட்டக் கல்லூரி முதலியவைகளும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக நிறுவப்பட்டிருந்தன. அச்சமஸ்தானத்தில் எந்த ஆணும் பெண்ணும் சிற்பம், சித்ரம், நாட்டியம், சங்கீதம்இவைகளைக்கற்றேயாக வேண்டும். சிற்பம், சித்திரம், நாட்டியம் இவைகளுக்குத் தனித்தனிக் கல்லூரி உண்டு. சித்ரம், சிற்பம், நாட்டியம், சங்கீதம் இந்நான்கும் பன்னிரண்டு வயது வரை சேர்ந்து போதிக்கப்படும். பன்னிரண்டு வயதிற்குப் பிறகு, நான்கில் ஏதாவதொன்றில் அவர்களின் நோக்கம்போல் சேர்ந்து பயில வேண்டும். தொடர்ந்து பட்டப் பரீக்ஷைக்குப் படிப்பவர்களும் நான்குமோ நான்கிலொன்றோ சேர்ந்து படித்தாக வேண்டும். அதற்கும் தனி வசதி ஏற்பாடு செய்திருந்தார்கள். எதற்கும் டிப்ளோமோ உண்டு. இவைகளைத் தவிர சர்வதேச நடன கலாசாலை ஒன்றும் ஏற்படுத்தினார் சிவசர்மா. இதில்தான் அவரது முக்கிய லக்ஷ்யம் செலுத்தப்பட்டது. அதில் ஒவ்வொரு தேசத்து நடனமும் போதிக்கப்பட்டு; அதில் தேர்ச்சிபெற்று, சர்வதேச நடன மஹாநாடு ஒன்று கூட்டி, அதில் அந்தந்தத் தேசத்து நடனக்காரர்களை வரவழைத்து அவர்களுடன், தமது சமஸ்தானத்து, ஆண்பெண்கள் போட்டி நடனமாடி வெற்றிபெறவேண்டும். அதற்கு மாட்சிமை தங்கிய இராஜப்பிரதிநிதியால் உயர்ந்த பரிசும் பட்டமும் பெறவேண்டும் என்ற அவரது கனவு நனவாக நடப்பதற்கு ஏற்ற காலத்தையும் தகுதியுள்ள மனிதரையும் எதிர்நோக்கியிருந்தார் சிவசர்மா. குழந்தை ரவிவர்மனது கலையுணர்ச்சியைக் கண்டதும் தமது லக்ஷ்யம் நிறைவேறியதாகவே பூரிப்

படைந்தார் சிவசர்மா. கலையில் சிறந்தது பவானிபுரம் என்பது காசிமுதல் கன்யா குமரிவரை பேச்சாக இருந்தது.

மனிதனுக்கு ஏதாவது ஒருகுறை இருந்தே யாகவேண்டுமென்பது சிருஷ்டியின் தத்வம் போலும். "இவ்வளவு ஸௌபாக்யங்க ளுடன் வாழ்ந்துவந்த சிவசர்மாவிற்குச் சந்தான பாக்யம் இல்லாமல் போய்விட்டது" என்ற மனக்குறையுடன் இவ்வுலக வாழ்க்கையை நீத்தார்கள் அவரது பெற்றோர்கள். பவானிதேவியின் சக்தியையும் மீறிவிட்டது போலும் அவரது பூர்வத்தின் பலன்.

அவர் கூடப்பிறந்தது சகோதரி ஒருத்திதான். அவள் கணவன் துராகிருதமான வழிகளில் பணத்தை வாரியிறைத்து விட்டு, பத்துவயது பாலகன் ரவிவர்மனையும் மனைவியையும் தவிக்க விட்டுவிட்டு அகால மரண மடைந்து விட்டார். தம்மிடம் வந்து இருக்கும்படி வேண்டிய சிவசர்மாவின் வேண்டுகோளை அவள் நிராகரித்து விட்டு இரண்டு வருஷகாலம் ஒரு மாதிரியாக இவரது ஆதரவில்லாமல் காலம் கழித்தாள். தாழ்மையுற்ற நிலைமையில் தனியிருப்பிடமே மேல் என்று நினைத்திருந்த அவ்வுத்தமி இரண்டு வருஷத்திற்குள் கணவனைப் பின்தொடர்ந்து விட்டாள். அநாதரவான ரவிவர்மனை அழைத்து வந்தார் சிவசர்மா. சிறிது காலம் சென்ற பின்பு, திவான், குடிமக்கள், யாவருடைய வேண்டுகோளின் மீது ரவிவர்மனை ஸ்வீகாரப் புதல்வனாக ஏற்றுக் கொண்டார்.

ஜமீன்தாரிணியின் தமையன் சம்சாரம் இரண்டு வயது பெண்குழந்தையை விட்டு விட்டு மரணமடைந்தாள். அவர் மறு விவாகம் செய்து கொண்டார். இரண்டு வயது பாமாமணியை ஜமீன்தாரிணி எடுத்து வந்து வளர்க்கலானாள்.

ரவிவர்மன் பவானிபுரம் வரும்பொழுது பாமா ஏழுவயது நிரம்பப் பெறாத சிறுமி. சிவந்த நிறமும் கரிய நீண்ட கூந்தலும், கடைந்தெடுக்கப் பட்ட தந்தப்பாவை போன்ற அங்க அமைப்புகளுடன் உன்னத அழகு பெற்று விளங்கினாள். ஸ்வீகாரம் நடந்தபோதே பாமாவுக்கும் ரவிவர்மனுக்கும் மணம் முடித்துவிட்டால் யாவும் ஒற்றுமையாக நடக்குமென்று யாவரும் கூடித் தீர்மானம் செய்தார்கள். அதனால் 'இளைய ஜமீன்தாரிணி' 'யுவராஜ்' என்றே யாவரும் அழைக்கலானார்கள்.

ராஜா சிவசர்மா முப்பத்தைந்து வயது வரை ஜமீன் நிர்வாகங்களைப்பற்றிய கவலையை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமின்றி, தந்தை கவனித்து வந்ததினால் மற்ற விஷயங்களில் கவனம் செலுத்த அவருக்கு வசதி கிடைத்தபடியால் எல்லா வித கைத்தொழிலும் தமது சமஸ்தானத்தில் நடைபெறும் படியான வசதிகளை ஏற்பாடு செய்தார். யந்திர சாதனங்களும் ஏற்படுத்தி, மனிதனுக்கு இன்றியமையாத எல்லாப் பொருள்களும் அச்சமஸ்தானத்திலேயே உற்பத்தி செய்யப்பட்டு வியாபாரத் துறையிலும் மற்றநாடுகளுடன் தொடர்புற்றுச் சிறப்புற்று விளங்கிற்று. பவானி தேவியின் அருளினாலோ, சிவசர்மாவின் முயற்சியினாலோ, அரசாங்கத்தில் கடன் வாங்கும்படியான நிலைமையே ஏற்படுவதில்லை. பொக்கிஷம் நிரம்பியே இருந்து வந்தது. குடிகளின் சகல சௌகரியங்களும் அரசாங்கத்துப் பொருளிலேயே நடத்தப்பட்டு வந்தும் ஓர் குறையும் ஏற்பட்டதில்லை.

ஜமீன்தார் பேட்டி கிடைப்பது அருமை என்ற பதம் அவ்வூரில் கிடையாது. யாரும் எப்பொழுதும், ஆபத்து என்றால் உடனே பார்க்க வசதியுண்டு. மற்றபடி காலை மாலைகளில் தங்கள் குறைகளைத் தாராளமாகச் சொல்லிக் கொள்ளலாம்.

"எங்கள் ராஜா தெய்வப்பிறவி."

"ஞானத்திலே, பரமோனத்திலே, உயர் கானத்திலே, அன்ன தானத்திலே,

"சாரத்திலே மிகு சாத்திரங்கண்டு, கவிதையிலே உயர் நாடு எங்களது"

என்று அங்நாட்டு மக்கள் சொல்லிக் கொள்வதில் வியப்பென்ன?

2

ஜமீந்தார் சென்ற பின்பு படத்தை மேஜைமீது சாய்வாக வைத்துவிட்டுத் தூர நின்றுகொண்டு அழகு பார்த்தான். ஓர் நீண்ட மூச்சிற்குப்பின், "இவள் யார் பெற்ற பெண்ணோ மேடையில் தோன்றியவள் தாயாராக இருக்கமுடியாது. இது விஷயத்தை யாரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்" என்ற சிந்தனையிலிருக்கும் பொழுது பாமா அவ்விடம்வந்தாள். படத்தைப் பார்த்ததும்,

"அத்தான்! நீங்களா எழுதினீர்கள்? நேற்று கலாவதியின் தோற்றம் அப்படியே விழுந்திருக்கிறதே" என்று ஆச்சரியத்துடன் அகல விழித்தபடி கேட்டாள்.

"ஆமாம். ஏதோ எழுதிப்பார்த்தேன்' உனக்கு இவளைத் தெரியுமா?"

"ஓ! நன்றாகத் தெரியும். இருவரும் ஒரேஸ்கூலில் படிக்கிறோம். அவளுக்கு அம்மா அப்பா ஒருவரும் கிடையாது; பாட்டி மாத்திரம்தான் இருக்கிறாள், ஆனால், ஐய, அவள் தாசி; தேவடியா ஜாதி''

"சரிதான். நாட்டியம் பள்ளிக்கூடத்தில் சொல்லிக் கொடுப்பதுதானா? உனக்கும் அதுபோல் ஆட வருமா?''

"இல்லை, அவளுக்கு வீட்டில் நட்டுவனார் சொல்லிக் கொடுப்பார். பள்ளிக்கூடத்திலும் சொல்லிக் கொடுப்பார்கள். எனக்குச் சுமாராக ஆடவரும், அவளைப் போல் நன்றாக வராது. இன்னும் இரண்டு வகுப்பு வாசித்தால் அவளைப்போல் ஆட வரும். அத்தான், என்னையும் ஒரு படம் எழுதமாட்டீர்களா?'' என்று பயந்தவாறு கேட்டாள்.

"உம், எழுதித்தருகிறேன். எங்கே அவளைப்போல் நில் பார்க்கலாம்'' என்றான்.

"அவ்வளவு அழகாக நிற்க எனக்கு வராது. இப்படியே எழுதினால் போதும்'' என்று இடுப்பில் கை வைத்து, ஆடுவதற்கு ஆயத்தம் போல் நின்று கொண்டாள்.

சற்று நேரத்தில் எழுதி முடித்துவிட்டு, "பாமா! வர்ணம் தீட்டிச் சாயங்காலம் உன்னிடம் தருகிறேன்'' என்றான்.

"சரி'' யெனச் சென்றுவிட்டாள் பாமா.

"அவள் தாசி! தேவடியாள்!'' என்று சொல்லும் பொழுதே இச்சிறுமிக்குக்கூட எவ்வளவு இளக்காரமாக இருக்கிறது. இது சமூகத்தின் கொடுமையினால் ஏற்பட்ட ஓர் அவமதிப்பு; மாதவி, மணிமேகலை, இவர்களைப்பற்றிப்படித்தோமே. எவ்வளவு உயர்வான துறையில் அவர்களது வாழ்க்கைப் படகு சென்றிருக்கிறது. கலாவதி மட்டும் ஏன் அவ்வித மேன்மையை அடைய முடியாது. கலைச் செல்வம் ஓங்கும் நமது சமஸ்தானத்தில் அவளது வாழ்க்கையைச் சமூகத்தின் உன்னத ஸ்தானத்தில் நடத்த நான் ஏன் முயற்சி செய்யக்கூடாது?'' என்ற ஓர் சிந்தனைச்சுடர் தோன்றலாயிற்று. அவனையறியாமலே கலாவதியைப் பற்றின சிந்தனை வளர்ந்து கொண்டே போயிற்று. "அவளை நேரில் சந்தித்துப் பேசிக் குணத்தின் தன்மையை அறிய வேண்டும்'' என்று ஆவல் உண்டாயிற்று. இப்படி ஏதேதோ முன்னுக்குப்பின் முரணான எண்ணங்களெல்லாம் தோன்றினவே தவிர மனதில் அமைதி ஏற்படவில்லை.

அன்று சாயங்காலம் வெளியில் சற்று நேரம் உலாவிவிட்டுத் தன் அறையின் பக்கம் வரும் பொழுது, சித்ரஹாலில் பெண்களின் சிரிப்பொலி கேட்கவே, வாயிற்படிக்கு அடுத்தாற்போல் மறைந்து நின்று கவனித்தான்.

"கலா! பார்த்தாயா உன் தோற்றத்தை! என் அத்தான் எவ்வளவு அழகாக வரைந்திருக்கிறார்? நேற்று உன் ஆட்டம் அதியற்புதம் என்று அத்தையும் மாமாவும் சொல்லிக்கொண்டார்கள். உண்மையில் உன் நடராஜா தோற்றம் அப்பா! மயிர்க் கூச்செறியும்படி இருந்தது. அதுதான் அத்தான் உனக்குமுத்துமாலை போட்டார்.''

"பாமா! உன் அத்தான் பெரிய சைத்ரிகர்போலிருக்கிறது. நமது ரஞ்சனைக்கூட மிஞ்சிவிடுவார் போலிருக்கிறது. இதோ உன்படமும் எவ்வளவு அழகாக இருக்கிறது பார்' என்றாள் கலாவதி.

"பாமா! உன் அத்தான் இவளுக்கு முத்து மாலை போட்டாரா?'' என்றாள் பதினாறு வயதடைந்த யுவதி கமலா.

"ஆமாம். அவர் கையினாலேயே முத்து மாலை போட்டார். நேற்றுக் கலாவதியின் தோற்றமும் ஆட்டமும் சொல்லத்தரமல்ல. ஆஹா! என்ன அழகு'' என்றாள் பாமா.

"சரி, சரி, பத்மா! ஜாக்கிரதை. என்ன படித்தாலும் கலாவின் ஜாதிக்குணம் போகுமா? யுவராஜாவின்மீது வலை வீசி விட்டாள், நீ ஏமாறப்போகிறாய்? பிடித்தாலும் நல்ல புளியங்கொம்பாகப் பிடித்தாள் கலாவதி'' என்றாள் கமலா.

"என்னடீ தாறுமாறாய் உளறுகிறாய்? எங்கள் ஜாதிக்குணத்தை நீ என்ன கண்டு விட்டாய்? வலையாம், புளியங்கொம்பாம், என்னவெல்லாமோ பேசுகிறாயே. எங்கள் ஜாதி என்ன அவ்வளவு கேவலம்'' என்றாள் கண்ணில் நீர்தளும்ப கலா.

"ஆஹா, உங்கள் ஜாதி மிக்க உத்தமமானது. உயரஉயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமோ? உங்கள் ஜாதி மிருகத்திலும் கேடானது. எங்கள் கால் தூசிற்கும் நீ சமானமாவாயா? இன்னும் கொஞ்சநாள் போனால் உன்னுடன் பேசுவதற்குக் கூடச் சம்மதிக்கமாட்டார்கள் எங்கள் பெரியோர்கள். ஏதோ நாட்டியமாடிப் பரிசு பெற்றோமென்று கர்வங் கொள்ளாதே. உன் ஆட்டத்திற்கல்லாவிடினும், உன்குலத் தொழிலுக்காகப் பரிசு கிடைக்கும்'' என்றாள் கமலா.

கலாவதிக்கு அவள் பேசுவதின் அர்த்தம் ஒன்றும் விளங்கவில்லையாயினும் தன்னைத்

# இந்தியன் பாங்க் லிமிடெட்

**இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்**
நார்த் பீச் ரோட், மதராஸ்.

●

மதராஸ் ஆபீஸ்கள்:
எஸ்பிளனேட், மவுண்ட் ரோடு, திருவல்லிக்கேணி, தியாகராயநகர், மயிலாப்பூர், புரசைவாக்கம், எழும்பூர்.

●

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

●

| | |
|---|---|
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் - | ரூ. 72,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. 53,00,000 |
| ரிஸர்வ் நிதி - - | ரூ. 62,00,000 |

●

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

**N. கோபால அய்யர்.**
செக்ரெடரி.



## தலையில்

தலைமயிர் தெரிகிறதா, அல்லது அடித் தலை தெரிகிறதா? அடித்தலை புலப்படும் பக்ஷத்தில், உதிர்ந்த கேசராசிகளுக்குப் பதில் புதுக் கூந்தல் முளைக்கவில்லை என்பது நிச்சயம். அச்சமயம் கேசவர்த்தினியைக்கொண்டுபரிஹரிக்காமல், பாதி வழுக்கையைப் பூரண வழுக்கையாகவிடுவானேன்? வழுக்கையால் ஏற்படும் கிழத்தோற்றத்தையும் அனுபவிப்பானேன்?

உதிர்ந்த இலைகள் மறுபடி முளைத்துவிடும், ஆனால் சில சமயங்களில் உதிர்ந்த கூந்தல் சிகிச்சையில்லாமல் முளைப்பதில்லை. அச்சமயங்களில் கேசவர்த்தினியை உபயோகித்து மயிர் உதிர்வதை நிறுத்தி, இளம் கூந்தலையும் இளமையையும் ஒருங்கே பெறுங்கள்.

# கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது
**விலை அணா 12**
(மேற் செலவு வேறு)
எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்
— தயாரிப்பவர் —
**தென் இந்திய ரஸாயன சாலை**
**கோயமுத்தூர்.**

தூஷிக்கிறாள் என்பது மட்டும் புலனாயிற்று. துக்கம் பீரிட்டுக்கொண்டுவந்தது. "பாமா என்னை எதற்காக இவ்விடம் கூப்பிட்டாய்? என்னைக்கண்டபடி ஏசுகிறாளே" என்று சொல்லிக்கொண்டே வாய்விட்டு விம்மி விம்மி அழத்தொடங்கினாள்.

கலாவதி அழவே பாமாவிற்கும் அழுகை வந்துவிட்டது, ஏன் இவர்களை அழைத்தோமென்று தோன்றி விட்டது. "படத்தைப் பார்க்கக் கூப்பிட்டேனேதவிர கலாவைத் தூஷிக்கவா வந்தீர்கள்" என்று அவளும் விம்மி அழத்தொடங்கினாள்.

அந்தச் சமயம் அறை வாயிற்படியில் வந்து நின்றான் ரவிவர்மன். அவனுக்கு நேராக நின்று கொண்டிருந்த பாமா விம்மலுடன் "அத்தான்!" என்றாள். அவ்வளவே, அங்கே கூடியிருந்த பதினைந்து பெண்களும் திடுக்கிட்டு வெல வெலத்துப் போனார்கள். குனிந்ததலை நிமிராமல் நின்றார்கள்.

"சஹோதரி! இவ்வளவு நேரம் சொல்லம்புகளை எய்தாயே. அதன் அர்த்தம், பாமாவின் மனதிற்கோ, கலாவின் மனதிற்கோ, அறிந்து கொள்ளும் சக்தியுண்டா?" என்பதைச் சிந்தித்தாயா? பெண்ணே பெண்ணினத்தை ஏசுவது எவ்வளவு கேவலம்? நீ, கற்ற கலையும், பயின்ற காவ்யமும், அளித்த பலன் இதுதானா? கலாவதி! பாமா! அழாதீர்கள், இப்படி வாருங்கள்" என அழைத்தான்.

"பதில் பேச யாருக்குத் தைரியம்? கமலா வயதுடைய ஐந்து பெண்களும் குனிந்த தலை நிமிராமல் நின்றார்கள். மற்றச் சிறுமியர்கள் மிரள மிரள விழித்தார்கள். கலாவும் பாமாவும் மருண்ட பார்வையுடன் ரவிவர்மன் அருகில் வந்தார்கள். "இருவரையும் இருபக்கமாக நிறுத்தி இருவர் கைகளையும் பிடித்துக் கொண்டு, "கலாவதி! அவள் சொல்லியபடி உன் ஜாதி கேவல மல்ல. புனிதமான தொண்டை மேற்கொண்டது உங்கள் குலம்; தேவர்க்கு அடியாள் என்றால் சுவாமிக்கு அடிமை என்பது அர்த்தம். பாழும் சமூகம் கேவல நிலைமைக்குக் கொண்டுவந்தது. உலகம் புகழ்ந்து போற்றும் மாதவியும், மணிமேகலையும் உங்கள் குலத்தில் தோன்றியவர்களே. குலம் பெரிதல்ல; குணமே சிறந்தது. உயர் குலத்தில் பிறந்து மிக்க இழிவான செய்கையில் இறங்கியவர்களை என்ன செய்வது? மாதவி, மணிமேகலை கதை தெரியுமா? உனக்கு" என்றான்.

"தெரியாது" என்று தலையை அசைத்தாள் கலா.

"மாதவி பிறக்கும்பொழுதே கழுத்தில் ஓர் மாலையுடன் பிறந்தாள். பிற்காலத்தில் வெகு அற்புதமாக நாட்டியமாடினாள். அவள் முதன் முதலாக நாட்டியம் அரங்கேற்றும் பொழுது, 'எனது கழுத்திலுள்ள மாலையை வீசுவேன்; அது யார்கழுத்தில் விழுந்ததோ அவரே என் புருஷன்; இதைச் சபையோர்கள் ஒப்புக்கொள்ள வேண்டுமென்றாள்.' யாவரும் ஒத்துக் கொண்டார்கள். கோவலன் கழுத்தில் மாலை விழுந்தது. மஹா உத்தமப் பெண்மணியாக அவனுடன் வாழ்க்கை நடத்தினாள். காலகதியினால் கோவலன் வெட்டுண்டு இறக்கவே, தவக்கோலங் கொண்டு தனது புதல்வி மணிமேகலையின் பொருட்டு உயிர் வாழ்ந்து வந்தாள். மணிமேகலையும் நாட்டியத்தில் சிறந்து விளங்கினாள். அவர்கள் குல தேவதையான மணிமேகலா தெய்வம் அவளுக்கு நல்லவழிகாட்ட எண்ணி அவளை மணித்வீபம் அழைத்துச்சென்று புத்த பீடிகை தெரிசனங் காண்பித்து, அக்ஷய பாத்திரமும் அளித்தாள். கோடி தவம் செய்தாலும் பெறமுடியாத அன்னதானத்தைச் செய்யும் பாக்கியம் அவளுக்குக் கிடைத்தது. அநேககாலம் தவம் செய்து உத்தம சிரேஷ்டர்கள் அடையும் சாயுஜ்ய பதவியைத், தங்கள் ஒழுக்கத்தினால் அடைந்தார்கள் மாதவியும் மணிமேகலையும். அவர்கள் தோன்றிய குலத்தில்தான் நீ பிறந்திருக்கிறாய். கேவலமல்ல. நீ நன்றாகப் படி. கலைகள்யாவையும் கற்றுத்தேர். நாட்டியத்தில் உலகம் போற்றும் உன்னத ஸ்தானத்தை அடைவாய். கலைகளின் கண்ணாக விளங்கும் நமது மஹாராஜாவின் உதவியினால் சமூகத்தின் முன்னணியில் நிற்கும் பாக்யம் பெறுவாய். உன்னால் உங்கள் குலமே சீர்திருத்தமடையும். உங்கள் குலம் புனிதமானதே" என்றான்.

அவன் சொன்னதில் கலாவதிக்கு அதிகம் ஒன்றும் விளங்காவிட்டாலும், தெய்வ அருள் பெற்ற மணிமேகலை பிறந்தது தனது குலம், அதனால் கமலா சொன்னது போல் தான் கேவலமானவளல்ல என்பது விளங்கிற்று. அதுவரை எழுந்த துக்கம் விலகி ஓர் நிம்மதி ஏற்பட்டது. தான் இன்னது செய்யவேண்டும் என்பது பற்றிப் புலனாகாத நிலைமையில் "யுவராஜா! வந்தனம்" என்று கையெடுத்துக் கும்பிட்டாள்.

"ஸஹோதரி! நான் சொன்னதில் உங்களுக்கு வருத்தமா?" என்று கமலா முதலியவர்களைப் பார்த்துக் கேட்டான்.

''இல்லை யுவராஜ்! ஏதோ நமது சமூகத்தில் செய்து வரும் கொள்கைப்படி தெரியாமல் உளறி விட்டேன். உங்களின் சொற்கள் எங்கள் அறியாமையை விலக்கி விட்டன. இனி உண்மையறிந்து நடக்கிறோம்'' என்று கையெடுத்துக் கும்பிட்டாள். யாவரும் அவளைப் பின்பற்றினார்கள்.

''நீங்களே சிந்தித்துத் தெளிவு படுத்திக் கொள்ளுங்கள். ஒருவரை இழிவு படுத்தி முன்னேற விடாமல் நாமே செய்து விட்டு, நாமே தூஷிப்பது எவ்வளவு கேவலம்? நாகரிகமற்ற நிலைமையில் சமூகம் ஊழலடைந்து இவர்களைக் கீழ்த்தரச் செய்கைக்கு ஆளாக்கியது. நாகரிகம் முதிர்ந்து முன்னேறும் இந்நாளில் வருங்காலத்தில் சமூகத்தின் முன்னணியில் நிற்பவர்களாகிய நாம் தான் இவர்கள் முன்னேறும் வழியைத் தேடவேண்டும். இழிவு படுத்தலாகாது. பாரதத்தாய் ஈன்ற மக்களில் யாவரும் சம உரிமை பெறக் கூடியவர்களே. ஒருவரையொருவர் இழிவு படுத்துவது என்பது மிருகத்தனமான செய்கை'' என்ற பொருள்கள் அடங்கிய சிறிய பிரசங்கமே செய்து விட்டான். பருவமடைந்த பெண்களாகிய ஐவரையும் லஜ்ஜையானது இறுகப் பிணிக்கப் பதுமைபோல் நின்றார்கள். சற்று நேரம் அவ்விடம் மௌனம் நிலவியது. அவ்விடம் விட்டுச் சென்று விட்டால் போதுமென்றாகி விட்டது கமலாவிற்கு. இயற்கையான தைரியத்துடன் ''யுவராஜ்! தங்கள் லக்ஷ்யம் போற்றத் தகுந்ததே. கூடியவரை நாங்கள் யாவரும் உங்களுடன் ஒத்துழைக்கப் பிரயாசைப் படுகிறோம். நாங்கள் சென்றுவர விடை தந்தருள வேண்டும்'' என்றாள்.

''மெத்த சந்தோஷம். சென்று வாருங்கள்'' என்று வாசற்படியை விட்டு உள்ளே வந்து நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான். மறுபடியும் யாவரும் யுவராஜனை வணங்கி விட்டுச் சென்றார்கள். கலாவும் புறப்பட்டாள்.

''கலாவதி! நீ சற்று நில். உன்னைத் துணை ஆளுடன் அனுப்புகிறேன்'' என்றான் ரவிவர்மன்,

''இந்தப் பாமா பேச்சைக் கேட்டுக் கொண்டு நாம் இந்த இடத்திற்கு வந்தது மதியீனம். கலாவின் நாட்டியத்தைப்பற்றி யாவரும் அபாரமாகப் புகழ்ந்தார்களே. நாம் பார்க்காமலிருந்து விட்டோமே. நடராஜா தோற்றம் அதியற்புதம் என்று சொன்னார்களே. படத்தைப் பார்க்க ஆசைப்பட்டு வந்தோம். வகையாக மாட்டிக்கொண்டோம்'' என்றாள் கமலா போகும்பொழுது.

''உன் வாய்த்துடுக்கால்தான் அவமானப்பட நேர்ந்தது. பார்க்க வந்ததில் தப்பிதமொன்றுமில்லை'' என்றாள் பாமினி.

''அடேயப்பா! என்ன சாதுர்யப் பேச்சு! ஜமீந்தார் கலையை முன்னுக்குக் கொண்டு வரக் கங்கணம் கட்டிக்கொண்டாரென்றால் பிள்ளை தாசிகளை முன்னுக்குக் கொண்டு வரப் போகிறார். என்னதான் உயர்வாக வைத்தாலும் அவள் ஜாதியை மாற்ற முடியுமா?'' என்றாள் கமலா.

''என்னடி, ஜாதி ஜாதி என்று உயிரை விடுகிறாயே. குலம் பெரிதா? குணம் பெரிதா? எனக்கு யுவராஜாவின் போக்கு மிகப் பிடித்தமாகவே இருக்கிறது'' என்றாள் பாமினி.

''என்னமோ இப்படி பிஞ்சிலே பழுத்த பேச்செல்லாம் சுயகாரியத்தில்தான் முடியப்போகிறது'' என்று முகத்திற்குபின் பேசிக்கொண்டு போவதை அறிய ரவிவர்மனுக்கு ஞானதிருஷ்டி கிடையாதே. அதனால் தனது சொல்லால் அவர்கள் மனம் மாறியிருக்கும் என்ற நம்பிக்கையில்

''கலா! இனி ஒருவரும் உன்னைத் தூஷணை செய்யமாட்டார்கள். சந்தோஷமாக இரு.'' என்றுசொல்லிவிட்டு, ''பாமா! நானில்லாத சமயத்தில் நீ இப்படி இவர்களையெல்லாம் அழைத்து வரலாமா?'' என்றான்.

''படத்தைப் பார்க்க வேண்டுமென்று சொன்னார்கள். அத்தையும் மாமாவும் கோயிலுக்குச் சென்றிருப்பதினால், நீங்கள் வருவதற்குள் பார்த்துவிட்டுச் சென்றுவிடுவார்கள் என்று அழைத்து வந்தேன். இப்படி கலாவைத் தூஷிப்பார்களென்று நான் நினைக்கவில்லை.'' என்றாள் மருண்ட பார்வையுடன்.

''சரி இன்றைக்குப்போனது போகட்டும். இனிமேல் நானில்லாதசமயத்தில் ஒருவரும் என் அறைக்குள் வரக் கூடாது. எது வேண்டுமானாலும் நான் இருக்கும் சமயம் வந்து கேள்'' என்றான்.

''அப்படியே செய்கிறேன் அத்தான்'' என்றாள்.

(தொடரும்)

# டீடீடீயின்

## திறன் முழுதும்..

## நியோஸிடில் உள்ளது

10% டீ.டீ.டீ பௌடர்

இது கெய்கி தயாரிப்பு

DJK 6021 TAM

★ வாரக்கணக்கில் பூரண பலனளிப்பது

★ மெதுவாகவானாலும் நிச்சயம் கொல்லுவது

★ மிருகங்களுக்கு ஹானியற்றது

தென் இந்தியாவுக்கு விநியோகஸ்தர்கள்:
மெஸர்ஸ்
அடிஸன் அண்ட் கோ., லிட்.,
மௌண்ட் ரோட், மதராஸ்

DDT Geigy DDT

மைசூர் சமஸ்தானம், லிட்ட ஜில்லாக்களுக்கு
விநியோகஸ்தர்கள்:
மெஸர்ஸ் முகமத் ரஹிம் கலீலி,
99-B, ஊஸ்மான்கான் ரோட்,
பெங்களூர் ஸிடி.

கெய்கி இன்ஸெக்டிஸைட்ஸ் லிட்., நெவில் ஹவுஸ் நிக்கல் ரோட்., பெலார்ட் எஸ்டேட், பம்பாய்


சென்னை-600 008

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besent Road, Kumbakonam.